Free Circulation Germany- England
மணி: 74 - ஓசை: 332 வைகாசி. May. 2024

# வெற்றிமணி
Vettimaniy
ESTD 1950
30 TH years IN EUROPE
Successful Publishing
பிரதம ஆசிரியர் கலாநிதி மு.க.சு.சிவகுமாரன். B.F.A

Orientalisch
Textilien &
Schmuck
34 ஆவது ஆண்டு நிறைவு
தரமும், மலிவும், ஒரே இடத்தில்

Königswall 16 (Am Hbf)
44137 Dortmund
Tel:0231 162377

# தேர்தல் கள நிலைமைகளை மாற்றியமைக்குமா ஜே.விபி.?

இலங்கையில் இருந்து ஆர்.பாரத

## மனதை வேடிக்கை மட்டும் பார்க்க விட்டு விட்டு நட

## விடுமுறைகள் அர்த்தம் தெரியாமலே கழிந்துபோகின்றன!

வெற்றி மைந்தன்




Dr.IN


இதழ்: 332





# உங்களுக்கும் சொல்லிவிட்டேன்






ஒரு குழந்தை விமானத்தில் விடாமல் அழுகின்றது. கனடாவில் அழ ஆரம்பித்த குழந்தை, தன்னால் முடியாமல் அழுகையை நிறுத்தியது. சற்று இடை வெளி மீண்டும் அதே வீச்சோடு குழந்தை அழுகின்றது. பலருக்கு அழுகை அமைதியைக்குலைக்க, சிலருக்கு, அழுகையில் உதிரம் கொதிக்க, மனிதரும், மிருகமுமாக வானில் பறந்தவண்ண பயணிகள், இருந்தனர்.

தன் குழந்தை, தன் பேரக்குழந்தை என்றால் பயணிகள் மனித மிருக வேறுபாடு இன்றி, குழந்தை மேல் பார்வையைச் செலுத்துவர். கடவுளே இந்தக் குழந்தை நித்திரை கொள்ள வேண்டும் என்றும் வேண்டுவர். எனது ஆசனத்தின் பின் ஆசனத்தில் குழந்தை அழுதபடி இருந்தது.

ஒரு செக்கன் அழுகை நிற்க, என் தோளில் கடவுளின் பூவிரல்கள் பட இரண்டு ஆசனங்களுக்கும், இடையால் பார்த்தேன். குழந்தை விரல்களால் என் முதுகில் வருட, குழந்தையின் தந்தை ஒரு சிறு பொற்கிழியை நீட்டினார். அதனை பெற்று திறந்து பார்த்தால் பட்டுப் பையில் ஒரு துண்டில் இப்படி எழுதப்பட்டு இருந்தது.

‘Thanking for travelling with me Your Special needs friend‘

என்னுடன் பயணிப்பதற்கு நன்றி உங்கள் சிறப்பு தேவை நண்பர், என் குழந்தை விமானத்தில் அழுகின்றது, உங்களுக்கு நிச்சயம் இடையூறாக இருக்கலாம். தயவு செய்து மன்னிக்கவும். என்று சொல்லி அமர்ந்தார். தந்தை விமானப்பணத்தில் குழந்தை அழுதால், என முன் ஏற்பாட்டுடன் கொண்டுவந்து, ஆசன த்தில், நேரே முன் பின் இருக்கும் ஆறு பேருக்கும் கொடுத்தார். அதனைப் பெற்ற ஆறு பேரும் ஒரு முறை திரும்பி, அக்குழந்தையைப் பார்த்தார்கள்.

அந்தக்கனிவான பார்வையில் குழந்தை சிரித்தது, அதன் பின் குழந்தை அழவே இல்லை.

குழந்தை கடவுளைக்கண்டதா அல்லது கடவுள் குழந்தையைக் கண்டாதா.மனதுக்குள் ஒரே குழப்பம் விமானம் தரை இறங்கி இமிக்கிறன்ரில் வரிசை கட்டி நிற்கும் போது, அதே குழந்தை என்னைப் பார்த்து சிரித்தது.



● மாதவி

புட்ட பதியில் ஆயிரம் பேர் இருக்க பாபா தன்னைக்கூப்பிட்டு வீபூதி தந்தார் என்று சொல்வார்கள் பலர்.

இங்கே பாப்பா என்னைப்பார்த்து சிரித்ததை நானும் பலரிடம் சொல்லப் போகின்றேன்.

உங்களுக்கும் சொல்லிவிட்டேன். ■




வெற்றிமணி

தமிழ் எங்கள்
உயிருக்கு மேல்

ஓசை : 332





ஆரம்பம்: 1950

ஸ்தாபகர்
அமரர் மு.க.சுப்பிரமணியம்
( முன்னாள் அதிபர்:
குரும்பசிட்டி பொன். பரமானந்தர்
வித்தியாலயம்)

பிரதம ஆசிரியர்
‘ஓவியக்கலைவேள்’
கலாநிதி
மு.க.சு.சிவகுமாரன்
Chief Editor:
Dr.M.K.S.Sivakumaran B.F.A

Tel: +49 01631992333
+49 01631992333

e-mail: vettimaniy@hotmail.com

“வெற்றிமணிமொழி’
தோல்வியைக் கண்டு
அஞ்சுபவர்களிடமிருந்து
வெற்றி தானாகவே
விலகிச்செல்கிறது

Vettimaniy Ltd
Company No: 8876276


# தேர்தல் கள நிலைமைகளை மாற்றியமைக்குமா ஜே.வி.பி?




இலங்கையிலிருந்து
ஆர்.பாரதி


தேசிய மக்கள் சக்தி என்ற பெயரில் உருவாக்கப்பட்டுள்ள கூட்டணியின் பிரதான கட்சி ஜே.வி.பி.தான். கடந்த காலத்தில் இரத்தம் தோய்ந்த ஒரு வரலாற்றைக் கொண்டாதாக ஜே.வி.பி. இருப்பதால் மற்றொரு பெயரில் இப்போது அதன் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றது. பெயரில் மாற்றம், செயற்பாடுகளில் சில மாற்றங்கள் இருந்தாலும் கூட, அடிப்படையில் ஜே.வி.பி.யின் அணுகுமுறையில் - அதன் கொள்கைகளில் பாரிய மாற்றம் எதுவும் இல்லை.

ஆனால், தற்போது ஜே.வி.பி.யின் பக்கம் அரசியல் அவதானிகள் இராஜதந்திரிகளின் கவனம் திரும்பியுள்ளமைக்கு பல காரணங்கள் உள்ளன. இந்தியா ஜே.வி.பி.யின் தலைமையை உத்தியோகபுர்வமாக அழைத்து அண்மையில் பேச்சுக்களை நடத்தியிருந்தது. இது தமக்கு சர்வதேச அரங்கில் கிடைத்த ஒரு அங்கீகாரமாக ஜே.வி.பி. தலைமை கருதுகின்றது. அதேவேளையில், ஜே.வி.பி. குறித்த மக்களின் இமேஜ்ஜையும் இது உயர்த்தியிருக்கிறது.

இந்திய விஜயத்துக்கு முன்னதாக ஜே.வி.பி.யின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க அமெரிக்காவுக்கு மேற்கொண்ட விஜயம், சமீபத்தில் கனடாவுக்கு அவர் முன்னெடுத்த பயணம் என்பனவும் சர்வதேச அரங்கில் ஜே.வி.பி. மீதான கவனத்தை அதிகரித்திருக்கின்றது. அதேவேளையில், இலங்கை அரசியலில் தவிர்க்க முடியாத ஒரு தலைவராக அநுர குமார திஸாநாயக்க உருவாகியுள்ளார் என்பதையும் இவை உணர்த்துகின்றன.

இந்தப் பின்னணியில் இந்த வருட இறுதியில் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் ஜே.வி.பி. எவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்தும் என்பது தொடர்பில் பல்வேறு ஆய்வுகள் வெளிவருகின்றன. ஜே.வி.பி. கணிசமான வாக்குகளை பெற்றுக் கொள்வார்கள் என்பதை கருத்துக்கணிப்புகள் வெளிப்படுத்தி இருக்கின்றன. 50 விதத்துக்கும் அதிகமான வாக்குகளை அவர்கள் பெற்றுக் கொள்வார்கள் என சில கருத்துக்கணிப்புகள் சொன்னாலும் கூட அதன் நம்பகத் தன்மை என்பது கேள்விக்குறிதான்.

இரண்டு வருடங்களுக்கு முன்னர் இடம் பெற்ற அரகலய என்ற மக்கள் போராட்டத்தை பயன்படுத்தி இளைய தலைமுறை மக்களிடம் அவர்கள் கணிசமான ஆதரவை அறுவடை செய்துள்ளார்கள். அவர்களுடைய பேரணிகள், ஆர்ப்பாட்டங்களுக்கு கணிசமான மக்கள் கூடுவதையும் அவதானிக்க முடிகின்றது. இதன் அடிப்படையில்தான் கருத்துக்கணிப்புக்கள் வெளியிடப்பட்டன. இந்த நிலைமையில் ஜனாதிபதி தேர்தலில் அவர்கள் எவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்தலாம் என்பதை யிட்டு சுருக்கமாக பார்ப்போம்.

2019-ல் இடம் பெற்ற ஜனாதிபதி தேர்தலில் சுமார் 4 விதமான வாக்குகளை மட்டுமே அநுர குமாரத்திசநாயக்காவினால் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்தது. ஜேவிபிய பொறுத்தவரையில் அவர்களுடைய நிரந்தரமான வாக்கு என்பது ஏழு விதத்திற்கு உட்பட்டதாகவே இருந்திருக்கின்றது. 2022 இல் இடம் பெற்ற மக்கள் போராட்டத்துக்குப் பின்னர்



ராஜபக்ஷக்களின் மீது அதிருப்தியடைந்த ஒரு குழுவினர் ஜே.வி.பி. ஆதரவாளர்களாகியுள்ளனர்.

சில கருத்து கணிப்புகள் சொல்வதைப் போல 50 வீதமான வாக்குகளை அவர்களால் பெற முடியுமா என்பது கேள்விக்குறியாக இருந்தாலும் கூட, பத்து வீதத்திற்கு அதிகமான வாக்குகளை அவர்களால் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும் என்பது பொதுவான கணிப்பீடாக இருக்கின்றது. அநுர குமார திஸாநாயக்கா கணிசமான வாக்குகளை பெற்றுக் கொள்வது என்பது ஜனாதிபதி தேர்தலில் ஒரு குழப்பமான நிலைமையை ஏற்படுத்தலாம் என்பது அரசியல் அவதானிகளின் கருத்து.

காரணம் இலங்கையில் ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெறுவதற்கு அளிக்கப்பட்ட மொத்த வாக்குகளை 50 வீதத்துக்கு அதிகமானதை ஒருவா˙ பெற்றுக் கொள்வது அவசியம். இலங்கையில் தேர்தல் சட்டம் அதனை தான் சொல்கின்றது. கடந்த காலங்களில் அது ஒரு பிரச்சினையாக இருக்கவில்லை. காரணம், ஜனாதிபதி தேர்தல் என்பது இருமுனைப் போட்டியாகவே இருந்திருக்கின்றது. மூன்றாவது வேட்பாளா˙ 5 வீதத்துக்கும் குறைவான வாக்குகளைப் பெறுவதைத்தான் நாம் கடந்த காலங்களில் கண்டிருக்கின்றோம்.

ஆனால் தற்போது நடைபெறப்போகும் ஜனாதிபதி தேர்தலில்

10 ஆம் பக்கம் பார்க்க...







அனைவருக்கும் எமது தொழிலாளர் தின வாழ்த்துகள் (May 1)



# மனதை வேடிக்கை மட்டும் பார்க்கவிட்டு விட்டு நட

உறக்கம் இல்லாத இரவுகள் சிற்பக் கூடத்தின் பயிற்சி காலத்தைப் போன்றது. மனமும் மூளையும் பல முகங்களை உருக்கிக் குழைத்து வார்த்துக் கொண்டே இருக்கும். மெழுகு அல்லது மண் சிலைகளைப் போல. அப்படி ஓர் இரவாக நேற்று அமைந்து விட்டது. பல முகங்கள், பல நினைவுகள் வடிய வடிய விடிய விடிய. இவற்றிற்கு நடுவே ஒரு பெயரும், நினைவில் தேங்கிப் போன அலைபேசியிலும் கணினித் திரையிலும் பொறிக்கப்பட்ட சில ஆங்கில வரிகளும் என்னை ஆக்கிரமித்துக்கொண்டன. ஆம் அந்த மனிதனின் முகத்தை நான் பார்த்ததில்லை. எங்களுக்குள் முகங்களின் பரிட்சியமில்லை. பெயரும், உரையாடலும் மட்டுமே.

எனக்கு வாழ்வில் ஏற்படும் தோல்விகளையும், துயரங்களையும் கட்டித் தழுவி (சில நேரங்களில் மனம் உவந்து. சில நேரங்களில் வேண்டா வெறுப்பாக) டாட்டா சொல்லி வழியனுப்பி வைக்கப் பிடிக்கும். ஆனால் அவை என் கழுத்தை நெரிக்க முறப்படுவது எனக்குப் பிடிக்கவே பிடிக்காது, அதற்கு நான் அனுமதிப்பதும் கிடையாது. அப்படி 2001லிருந்து என் வாழ்வில் தொடர்ச்சியாகத் துயரங்களும் தோல்விகளும் என்னை நெறிக்க முயன்று கொண்டிருந்தன. ஒரு வயதே நிரம்பிய என் மகளுடன் மஸ்கட்டில் (Oman) வாழ்ந்துகொண்டிருந்தேன். எனக்கு அப்பொழுது 21 வயது. எனக்கு முன் பல கேள்விகள், பல சவால்கள். நான் மனிதர்களிடம் எப்பொழுதெல்லாம் நம்பிக்கையை இழக்கிறேனோ அப்பொழுதெல்லாம் புதிய மனிதர்களிடம் நிறையப் பேச முயற்சி செய்வேன். ஆனால் அந்த நேரத்தில் எனக்கு நண்பர்கள் என்று அங்கு யாரும் இருக்கவில்லை. அப்போதுதான் Yahoo chat என்று ஒன்றைப் பற்றி அறிந்து அந்த உலகத்திற்குள் நுழைந்தேன். அதில் பயாலஜி உாயவ ரூம் என்று ஒன்று இருந்தது. B.Sc முடித்து M.Sc தொடரமுடியாமல் போன வருத்தம் எனக்கு அப்போது கொஞ்சம் இருந்தது. எனவே அந்த ஆர்வத்தில் பயாலஜி பற்றி நிறையப் பேசலாம், தெரிந்துகொள்ளலாம் என்று அந்த ரூமுக்குள் நுழைந்தேன். (அந்த chat மொழிகளை எல்லாம் கற்றுக்கொள்வதற்குள் நிறையத் தர்மசங்கடமான தருணங்களைச் சந்தித்திருக்கிறேன், அசிங்கப்பட்டிருக்கிறேன்) அங்கு மூன்று, நான்கு நாட்கள் சிலரிடம் பேசியபோதுதான் தெரிந்தது, அங்கு பயாலஜி பற்றியெல்லாம் யாரும் பேச வரவில்லை என்று. சரி அவர்கள் நோக்கம் என்னவாக இருந்தால் நமக்கென்ன? எனக்கு என் நோக்கம் தெளிவாகத் தெரிந்திருந்தது. 'புதிய நண்பர்களைத் தேடிக்கொள்வது'. அவர்கள் மற்றவர்களிடம் என்ன பேசவேண்டும் என்பதை நான் கட்டுப்பாட்டிற்குள் வைக்க முடியாது, ஆனால் அவர்கள் என்னிடம் என்ன பேசவேண்டும் என்பதை என்னால் கட்டுப்படுத்த வரையறுக்க முடியும், அதை அவர்களுக்குத் தெளிவாகப் புரிய வைக்கவும் முடியும். அதைத்தான் நான் அங்குச் செய்தேன். எனக்குப் பல நண்பர்கள் கிடைத்தார்கள்.

அப்படி 2002ல் அறிமுகமான ஒரு நட்பு, ஆனந்த். அவன் டெல்லியைச் சேர்ந்தவன். நாங்கள் பல நாட்கள் பல விஷயங்களைப் பற்றி உரையாடியிருக்கிறோம். நிறையச் சண்டை போட்டுக்கொண்டிருக்கிறோம். அரசியல் கொள்கைகள் பற்றிய சண்டைதான் பெரும்பாலான நாட்கள். எனக்குப் புத்தகம் வாசிக்க அவ்ளவாக பிடிக்காது ஆனால் வாசிப்பவர்களை அவ்வ்வ்வளவு பிடிக்கும். அவன் ஒரு புத்தகப் பிரியன், வெறியன். அவனிடம் உாயவ பண்ணும் போது Dictionary இல்லாமல் சமாளிக்கவே முடியாது. Big Bang Theory யை என் சிறு மூளைக்குள், அவனுக்குப் புரிந்த அளவு எனக்கும் புரிய வைக்க முயற்சி செய்தவன். அவன் என்னிடம் அடிக்கடி சொல்லுவான் "வாழ்க்கையைப் பற்றிய உனது புரிதல் ஆழமானது. என்னை விந்தையில் ஆழ்த்துகிறது. ஆனால் ஏதேதோ காரணங்களைச் சொல்லிக்கொண்டு நீ உன் உலகத்தைக் குறுக்கிக்கொண்டிருக்கிறாய்" என்று. அதைச் சற்று முரட்டுத்தனமாகவே எனக்கு உணர்த்தியவன் அவன். இப்படிப் பல வருடங்கள் பல உரையாடல்கள். ஊாயவல் மட்டுமே நாங்கள் தொடர்பிலிருந்தோம். ஏனோ புகைப்படங்களைப் பரிமாறிக்கொள்ளவோ, voice chat பண்ணவோ நாங்கள் ஆர்வம் காட்டவில்லை. அது எங்களுக்குத் தேவையில்லாமலே இருந்தது.



பிறகு 2012லிருந்து அவனிடமிருந்து எந்த செய்தியும் இல்லை. ஆனால் நான் அவனுக்குத் தொடர்ந்து message/ mail அனுப்பிக்கொண்டிருந்தேன். என்னால் அவ்வளவு சீக்கிரம் நட்புகளையும் நம்பிக்கைகளையும் கைவிட முடியாது. ஏழு வருடத்திற்கு முன் 2015ல் அவனிடமிருந்து கடைசியாக ஒரு செய்தி வந்திருந்தது. ஆம் இன்று அவன் உயிரோடு இல்லை. Pancreatic caner ல் இறந்து விட்டான்.

அவன் அனுப்பிய குறுஞ்செய்தியில் இவ்வாறு இருந்தது. (ஆங்கிலத்தில் இருந்தது)

"தீபா, Sorry, கொஞ்ச நாளாக நான் உன்னோடு தொடர்பு கொள்ள முடியவில்லை. எனக்கு Pancreatic Cancer , last stage நான் treatmentல் இருக்கிறேன். அன்பு என்பது தொடர் முயற்சியல்லவா, அதனால் என் பெற்றோர்கள் என்னைப் பிழைக்க வைக்கத் தொடர்ந்து முயற்சி செய்கிறார்கள். நான் அவர்கள் அன்பை மதிக்கிறேன் ஆகையால் treatment எடுத்துக்கொள்கிறேன். கம்ப்யூட்டர், மொபைல் எல்லாம் அதிகம் உபயோகிப்பதில்லை. நீ அனுப்பப்போகும் பதிலுக்கு/கண்ணீருக்கு reply வரவில்லை என்றால் நான் இறந்துவிட்டேன் என்று புரிந்துகொள். நான் இன்டர்நெட்டில் நிறையப் பெண்களுடன் பேசியிருக்கிறேன். ஆனால் உன்னைத் தவிர வேறு யாரிடமும் நட்பு பகிர்ந்து கொண்டதில்லை.



**தீபா ஸ்ரீதரன்**
(தைவான்)

நேர்மை தைரியமானது என்று எனக்குத் தெரியும். அது அழகானதும் கூட என்பதை உன்னிடம் தெரிந்துகொண்டேன். நீ தைவானில் தனியாக வாழ்வது குறித்து மகிழ்ச்சி. உனக்கும் உன் மகளுக்கும் என் அன்பும் வாழ்த்துக்களும். இன்று இந்த சாவுப் படுக்கையில் நான் செய்ய முடியாமல் அல்லது நடக்கமுடியாமல் போன பல விஷயங்களைப்பற்றி வருத்தப்பட்டுக்கொண்டிருக்கிறேன். அவற்றில் ஒன்று உன்னை ஒரு முறை கூட நேரில் சந்திக்கமுடியாமல் போனது. Take care"

அன்று என் கண்களில் மல்கிய அதே கண்ணீர் இன்று இதை எழுதும்போதும்... (ஆனந்தை பற்றிப் பல மாதங்களுக்கு முன்பும் இங்கே பதிவு செய்திருக்கிறேன். அப்போதும் இக்கண்ணீர்)


28 ஆம் பக்கம் பார்க்க...




Luckyfly
SUMMER OFFER
MAY OFFER 799€
ஸ்ரீலங்கா சென்றுவர
குறைந்த விலையில் மகிழ்ச்சியாக
செல்ல...
நீங்கள் விரும்பிய
நாட்களில் சுற்றுலா செல்ல
டிக்கெட் வசதி
செய்து தருகிறோம்...
இன்றே அழையுங்கள்!
COLOMBO TO JAFFNA
49€
TRANSPORT CHARGES
BOOK ON CALL
info@lucky-fly.de
www.lucky-fly.de
0234 2399032
0179 14 84892



# உளவதைத் தாக்குதலும், தற்கொலை மரணங்களும்



அண்மையில் ஜெர்மனியில் 15 வயதுத் தமிழ் மாணவி ஒருத்தி சுய மரணத்தை வலிந்து தேடிக்கொண்டாள்.பாடசாலையில் ஆசிரியர்களின் ஒதுக்குதலும், மாணவர்களின் உளவியல் துன்புறுத்தலும் அதற்கான காரணமாகக் கூறப்பட்டன. இரண்டு நாட்கள் ஊடகங்கள் ஊதின. பின் வழமை போல் அடுத்த செய்திக்குத் தாவிக்கொண்டன.

பாடசாலை,அப்படியேதும் நடக்கவில்லை என, தன் மீது கறையில்லாமல் நழுவிக் கொண்டது. உளவியல் தாக்குதல் என்பதை வெறுப்பான, ஏளனமான, ஒதுக்குதலான பார்வைகள் மூலமே ஏற்படுத்தி விட முடியும். அதற்கான ஆதாரங்களை எவராலும் சேமித்து வைத்து ஆதாரம் காட்ட முடியாது என்பதை நாம் இங்கு புரிந்து கொள்ள வேண்டும். காரணம் பாடசாலைகளில். ஆசிரியர்களின் ஆதாரமற்ற ஒதுக்கு மொழி அனேகமாக அது தான்.

இது குறிப்பிட்ட அந்த மாணவியின் மரணம் பற்றிய பதிவு மட்டுமல்ல. இந்த

**மாலினி** (ஜெர்மனி)

உளவியல் துன்புறுத்தல் இங்கு மட்டும் நேர்வதுமல்ல.. அந்தஸ்து,பொருளாதாரம்,சாதியம்,என பல்வேறுபட்ட அடிப்படையில் சமூகத்தில், வேலைத்தளங்களில், பாடசாலை களில் நாம் பிறந்த நாட்டிலுமே கூட அது எப்போதுமே நிகழ்ந்து கொண்டுதான் இருக்கின்றது. இன்னும் சொல்லப் போனால் ஆதரவற்ற, உறவுகளை அண்டி வாழவேண்டிய நிலையில் உள்ள குழந்தைகள் இருக்கும் குடும்பங்களில் தாராளமாகவே அது நிகழ்ந்து கொண்டே தான் இருக்கின்றது.

இன்றைய குழந்தைகள் நாளைய



சந்ததிகள். அவர்களுக்கு எதை வளங்குகின்றோமோ அதிலிருந்து தாம் கற்றுக் கொள்வதைக் கொண்டே இந்த உலகுக்கு அவர்கள் வழங்கப் போவதும் தீர்மானிக்கப் படப் போகின்றது என்பது பற்றிச் சிந்தித்துப் பார்க்காத ஆசிரியர்களோடும் பெரியவர்கலோடுமே கூடத்தான் குழந்தைகள் வளர வேண்டியிருக்கிறது.

வெளிநாடுகளில் எம் நிறம் காரணமாக, மேலும் எம் கலாச்சார அடையாளங்கள் புரிந்து கொள்ளப்படாமை காரணமாக., தெளிந்த சிந்தனைப் போக்கற்ற பல்வேறு சமுதாயக் குழுக்களுடன் வாழ நேரும் போது, அவர் களிலிருந்து நிறையவே வேறுபட்ட கலாச்சார அடையாளங்களைச் சுமக்கும் நிர்ப்பந்தம் கொண்ட எம் குழந்தைகள் அதற்கு அதிகமாக முகங்கொடுக்க நேர்கிறது. கூடவே இங்குள்ள குழந்தைகள் பலரின் மனதில் பெற்றோரால் விதைக்கப்பட்டிருக்கும் நிறத் தீண்டாமை நச்சும் அதற்கோர் காரணம்.

இன்னொரு வகையில் பார்ப்போமானால் எம்மினத்தில், பல பிள்ளைகளின் பெற்றோர் மொழியறிவற்றிருப்பதும் அதன் காரணமாக புலம்பெயர் பொது வெளிகளில் அவர்களது குரல்கள் தமக்கான உரிமைக்காகக் கூட ஒலிக்கும் வாய்ப்பின்றி தொண்டைக்குழிக்குள் சிக்கிக் கிடப்பது முக்கிய காரணம். எனலாம்.

புலம்பெயர்ந்த பலர் ஒன்றுக்குப் பல தாய் இங்கேயும் தாயகத்திலும் அசையும் அசையாச் சொத்துகளை வாங்கிப் போடுவதில் காட்டும் தீவிரத்தை அந்நாட்டு மொழி,அரசியல்,எமக்கான உரிமைகள், குழந்தைகளின் பாடசாலைச் சூழல் அது ஆட்சி செலுத்தும் அவர்கள் மனநிலை, மனநிலை பிரதிபலிக்கப் போகும் எதிர்காலம் என்பவற்றில் காட்ட முயல்வதில்லை. அதன் காரணமாக பிள்ளைகளின் நிலை குறித்து ஆசிரியர்களுடன் பாடசாலை நிர்வாகத்துடன் உரையாடும், தம் நிலையைத் தீர்க்கமாக விளக்கும் திராணியை கொடுக்கும் மொழியறிவைப் பெற்றோர் கொண்டிராதவிடத்து பிள்ளைகளின் பிரச்சனைகள் பற்றி அவர்களால் அதிகம் பேச முடிவதில்லை. அப்படியே பேச வாய்த்தாலும், தாம் பேச வந்த விடயம் குறித்த உறுதிப் பாட்டில் தெளிவாக இருக்கும் நிலையற்று, நிர்வாகம் சொல்லும் மழுப்பல் விளக்கத்துக்குத் தலையாட்டி விட்டு வரும்படியே நேர்கிறது.



அந்த இடத்தில் தான் பிள்ளை நிராதரவாக உணரத் தொடங்குகிறது. தன் பிரச்சனை தீர்க்கப்படாதவிடத்து, தனிமையை, அதனால் தனக்கான பிரச்சனையைப் பூதாகரமாக உணரும் குழந்தை, தனக்குத் தெரிந்த வகையில் அதற்கான தீர்வாக மரணத்தைத் தேடித் தப்பிக் கொள்ள முனைகிறது.

மேற் குறிப்பிட்ட சிறுமி தன் டிக்டொக் பக்கத்தில் என் வாயும் கண்களும் கட்டப் பட்டிருக்கின்றன என்று சொல்லியிருந்ததைப் போலவே இக்கொடுமையால் பாதிக்கப்படும் ஒவ்வொரு குழந்தையும் தன் கருத்துகள் செவிமடுக்கப்படவில்லை என்பதை ஒவ்வொரு வகையில் உலகத்துக்கு உணர்த்தத்தான் முற்படுகின்றன. அனேகமாக அவை செவிமடுக்கப்பட வேண்டிய அளவு பெரிய விடயமாக எண்ணப்படாமலும் போய் விடுகின்றன. சிறு பிள்ளை விடயம் என அதன் கனதி கண்டுகொள்ளப்படாமல் போய் விடுகிறது.

மாதா, பிதா, குரு தெய்வம் என்று எப்போதோ ஒரு சிறு வயதில் எமக்கு ஊட்டப்பட்டது போல இப்போது இந்த உலகமில்லை. ஆசிரியர் ஊதியம் பெறும் ஒரு பணியாளர் அவ்வளவு தான். எம் குழந்தை எத்தனையோவில் ஒன்று அவர்களுக்கு. இறந்து போனால் ஒரு செய்தி. அவ்வளவு தான். அறங்கள் பற்றி இப்போது யாரும் அறிந்து கொள்ளக் கூட முயற்சிப்பதில்லை என்றே நான் இந்த உலகைக் கணிக்கிறேன்.

குழந்தை தான் இயங்கும் சூழல் தனக்குப் பாதகமானதென அறியத்தரும் போது அவர்கள் அதற்கான பதிலைத் தீர்வைத் தர வேண்டிய கட்டாயமான இடத்தில் இருப்பவர்கள்.அதன் நாளாந்த சிறிய வட்டத்தின் பாதுகாவலர்களாக இருக்கும் பெற்றோர், மற்றும் ஆசிரியர்.

28 ஆம் பக்கம் பார்க்க...




அனைவருக்கும் எமது தொழிலாளர் தின வாழ்த்துகள் (May 1)


"புகை பிடித்தல் புற்றுநோயை உண்டாக்கும் உயிருக்கு கேடு விளைவிக்கும்"

# ஒரு திரைப்படம் ஆரம்பிக்கும் முன்னர் திரையில் தோன்றும் வாசகங்கள் "புகை பிடித்தல் புற்றுநோயை உண்டாக்கும் உயிருக்கு கேடு விளைவிக்கும்"

ஒரு திரைப்படம் ஆரம்பிக்கும் முன்னர் திரையில் தோன்றும் வாசகங்களே இவை.. என்னதான் புகைத் தல் உடல் நலத்திற்கு கேடு , அது உங்கள் சந்ததியையே பாதிக்கும் என உணர்த்தும் வகையில் அதன் அட்டைப் பெட்டியில் குரூரமான புகைப் படங்கள் இடம்பெற்றிருந்தாலும், அதையெல்லாம் ஒரு பொருட்டாகவே கருத்திற்கொள்ளாது, ஊதித் தள்ளுவோரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டேதான் வருகின்றதென்றால் மிகையில்லை !

உலக சுகாதார அமைப்பு 1987-ஆம் ஆண்டில் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது. அதாவது ஏப்ரல் 7, 1988 அன்று 'உலக புகை பிடிக்காத நாள்' என்று அறிவித்தது. மக்கள் குறைந்தபட்சம் 24 மணி நேரம் புகை பிடிக்காமல் இருப்பதற்கு மற்றும் புகையிலை பயன்பாட்டை விட்டு வெளியேற சிரமப்படுபவர்களுக்கு உதவும் வகையில் இந்த நாள் கடைபிடிக்கப்பட்டது. அதன் பின்பு அதே ஆண்டில் உலக சுகாதார அமைப்பு மே 31-ஆம் திகதியை 'உலக புகையிலை எதிர்ப்பு நாள்' என்று கடைபிடிக்க முடிவு செய்தது.

மிக தொன்மையான வரலாற்றினைக் கொண்டது புகையிலை என்றாலும் இன்று பாக்கெட் கணக்குகளை தாண்டி நாளொரு பொழுதும் தினமொரு நிமிடமுமாக ஊதித்தள்ளி தன்னையும் அழித்து, அருகில் உள்ளவர்களையும் அழித்துவரும் இந்த புகைப்பழக்கம் தோன்றியது அமெரிக்காவில்தான், அதும் குறிப்பாக தென் அமெரிக்காவில். பொழுதுபோக்கு அம்சமாக தோன்றிய இந்த புகையிலைப் பண்பாடு காலப்போக்கில் வணிக பொருளாகவும் மாறியது.

பிறகு இந்த பழக்கம் அங்கிருந்து கிறிஸ்டோபர் கொலம்பஸ்மூலமாக ஐரோப்பா போன்ற நாடுகளுக்கு பரவி இன்று உலகம் முழுவதும் முற்றிலும் ஒழிக்கமுடியாத விஷமாக மாறியுள்ளது. ஆனால் இந்த புகையிலை முறை நவீனமாகி சிகரெட் எனும் வடிவம் பெற்றது என்னவோ 18-ஆம் நூற்றாண்டின் இறுதியில் கியூபா நாட்டிலும், கரீபியன் தீவு போன்ற நாடுகளிலும்தான். கஞ்சா புகையில் ஆரம்பித்து, மெதுவாகச் சுருட்டு வடிவெடுத்து, பின் சோளமாவில் சுருட்டப்பட்டு, பின் பேப்பரில் சிகாராக இலைகள் மட்டும் சுருட்டப்பட்டு, இப்போது மெல்லிய பேப்பரில் பில்டர் செய்யப்பட்ட புகையிலை தூளாக இந்த வஸ்து பரிணாம வளர்ச்சி அடைந்துள்ளது.

இந்த உலகம் கற்றுக்கொண்ட ஒவ்வொரு பழக்கமும் நன்மையா? தீமையா? என்பது முற்றிலும் நிரூபணமாக பல




பிரியா இராமநாதன்
(இலங்கை)

நாட்கள், பல ஆண்டுகள் ஆகும். அப்படித்தான் இந்த புகையிலை பழக்கமும் மிகவும் கொடிய விளைவுகளை தரும்

என்ற உண்மை அறிவியல் முறைப்படி நிரூபணமாக நீண்ட நாட்கள் எடுத்துக் கொண்டது. 20 நூற்றாண்டிற்கு பிறகுதான் இது ஆபத்தானது என்பது கண்டறியப்பட, உலக நாடுகள் அனைத்தும் புகையிலையை ஒழிப்பதில் தீவிரம் காட்டினாலும் இன்று வரை முற்றிலும் ஒழிக்கப்படமுடியாத ஒரு பழக்கமாக மாறிவிட்டது புகையிலை பழக்கம்

ஒருபக்கம் தனிமனித உயிர் சேதத்தை ஏற்படுத்தும் என்பதைத் தாண்டி அது அருகிலிருப்பவர்களையும் பாதிக்கும் என்பதே உண்மை. அதேபோல் சுற்றுசூழலில் புகையிலை கழிவுகள் ஏற்படுத்துடும் பாதிப்பை உலக சுகாதார நிறுவனம் வெளியிட்டுள்ளது. ஒரு சிகரெட்டில் நிக்கோடின், கார்பன் மோனாக்சைட், தார் என 4000க்கும் மேற்பட்ட நச்சு பொருட்கள் உள்ளது. இதனால் புற்றுநோய், பக்கவாதம், வாய்க்கட்டி போன்ற மோசமான உயிர்க்கொல்லி நோய்கள் புகைப்பவரை தாக்கும் என்பதும் எப்போதோ நிரூபணமான ஒன்று.

பெரும்பாலான மக்களுக்கு புகை பிடிப்பது உடல் நலத்திற்குத் தீங்கானது என்பது தெரிந்திருந்த போதும், புகையிலையினால் உண்டாகும் தீமையின் அளவு குறித்த விழிப்புணர்வு பெரிய அளவில் இல்லை எனலாம். புகையிலை நிறுவனங்கள், புகையிலைப் பெட்டிகளை, பொட்டலங்களை அழகாக, வசீகரமாகத் தயாரித்து வழங்குவதன் மூலமும் வித்தியாசமான விளம்பர உத்திகள் பலவற்றின் மூலமும் புகையிலை விற்பனையைப் பெருக்கி, உடல் நலத்திற்கு புகையிலை உண்டாக்கும் தீமைகளை மக்கள் அறிந்து கொள்ள முடியாதவாறு திசை திருப்புகின்றன என்கிற குற்றச்சாட்டுக்களும் கவனத்தில் கொள்ளப்படவேண்டியவையே.

புகைப்பிடிப்பதால் ஏற்படும் தீமைகள் குறித்து, 1950-ம் ஆண்டிலிருந்தே மருத்துவர்களும் ஆராய்ச்சியாளர்களும் மக்களுக்கு விளக்கிக்கொண்டுதான் இருக்கின்றனர். அதனுடைய விளைவுகள் பற்றி தெரிந்தாலும், புகைப்பதை பெரும்பாலானோர் கைவிடுவதில்லை. அதனால்தான், பெரும்பாலான உயிர்கள் பறிபோகின்றன,

28 ஆம் பக்கம் பார்க்க...





# பச்சை குத்துதல் புற்று நோய் வருமா?

புற்றுநோய் வருமா இல்லையா என்ற பிரச்சனைக்கு அப்பால் வேறு பல பாதிப்புகள் ஏற்படுவதை காண முடிகிறது.

பச்சை குத்தினால் தோல் புற்றுநோய் ஏற்படும் என்கின்றார்களே. உண்மையா?

பச்சை குத்தினால் புற்றுநோய் வரும் என்பதற்கான தெளிவான திடமான ஆதாரங்கள் எதுவும் இது வரை கண்டறியப் படவில்லை. ஆனால் வரக் கூடும் என்ற சில சந்தேகங்கள் பரவலாக உள்ளன.

பச்சை குத்துவதற்கு பயன்படுத்தப்படும் நிறக் கலவைகளில் பலவிதமான இரசாயனங்கள் கலந்துள்ளன. நிக்கல், குறோமியம், மங்கனீஸ், கோபாலட், டைடேனியம் ஒட்சைட் போன்றவை முக்கியமானவை. (nickel, chromium, manganese, cobalt, or titanium dioxide). இவற்றில் பல நச்சுத்தன்மை வாய்ந்தவை என்பது குறிப்பிடத்தக்கது.

அத்துடன் அந்த இரசாயனங்கள் பச்சை குத்தப்பட்ட இடத்தில் மட்டுப்பட்டு நிற்காமல் அருகில் உள்ள சருமத்திற்கும் நிணநீர்த் தொகுதி ஊடாக நிணநீர்க் கட்டிகளுக்கும் பரந்து சென்று அவற்றை சற்று வீக்கமடையச் செய்வதாக அண்மைய ஆய்வுகள் உறுதிப்படுத்தியுள்ளன.

இவை நச்சுத்தன்மை வாய்ந்தமை என்பதற்கு அப்பால் நிக்கலும் குரோமியமும் புற்றுநோய்த் தூண்டியாக இருப்பதாக அறியப்பட்டுள்ளது.

எனவே பச்சை குத்துபவர்களுக்கு எதிர் காலத்தில் பாதகமான விளைவுகள் ஏற்பட வாய்ப்புள்ளதாக சில ஆய்வாளர்கள் கருதுகிறார்கள். ஆனாலும் புற்றுநோய் ஏற்படுவதாக இதுவரை கண்டறியப் படவில்லை.



பச்சை குத்தப்பட்டவர்கள் எந்தவித ஆபத்தும் இன்றி சாதாரணமாக இருப்பதால் அவை பாதுகாப்பானவை என்ற எண்ணம் சாதாரண மக்களிடம் இருக்கிறது. ஆனால் புற்றுநோய் போன்ற பாதிப்புகள் ஏற்பட நீண்ட பல வருடங்கள் எடுக்கும் என்பதால் அவை பற்றி பெரும்பாலும் தெரியவருவதில்லை.

பச்சை குத்துவது என்பது சருமத்தில் சில அடையாளங்களை அல்லது கோலங்களை அல்லது எழுத்துக்களை வர்ண கலவைகளால் பதிப்பதாகும். சிறிய ஊசிகள்களால் நுண்ணிய அளவு வண்ணக் கலவைகளை மீண்டும் மீண்டும் சருமத்தின் மேற்பகுதியில் குத்துவதால் அவை உள்ளே செல்கின்றன.

இவை நிரந்தரமான அடையாளங்கள் என்பது குறிபிடப்பட வேண்டியதாகும். காலத்தால் அழியாதவை. எனவே அந்நியப் பொருளான அது உடலில் நிரந்தரமாகக் குடிகொள்ளப் போகிறது என்பது கவனத்தில் எடுக்க வேண்டிய விடயம். எந்த அந்நியப் பொருளானாலும் அதற்கு எதிராக உடல் எதிர்வினையாற்றக் கூடும்.

புற்றுநோய் வருமா இல்லையா என்ற பிரச்சனைக்கு அப்பால் வேறு பல பாதிப்புகள் ஏற்படுவதை மருத்துவர்களாகிய நாம் காண முடிகிறது.

ஒவ்வாமை சரும நோய்கள் மிக முக்கியமானவை. அந்த இடத்தில் சருமத்தில் அரிப்பு எடுப்பது, அழற்சி மற்றும் எக்ஸிமா போன்ற பாதிப்புகள் ஏற்படுகின்றன. சிலருக்கு உடனடியாகவே அத்தகைய பாதிப்புகள் ஏற்படுகின்றன. ஆனால் வேறு சிலருக்கு பல ஆண்டுகளுக்குப் பின்னரே அவை தோன்றக் கூடும்.



பச்சை குத்திய உடல்களில் கிருமித் தொற்று ஏற்பட்டு புண்கள் தோன்றுவதை அதிகம் காண முடிகிறது. இதற்குக் காரணம் பச்சை குத்தும் பணியாளர்கள் தமது கைகளை கழுவுதல் குத்துவதற்கு உபயோகிக்கும் ஊசிகளை கிருமி நீக்கம் செய்யாமை போன்ற சுகாதார நடைமுறைகளை சரியான முறையில் கடைப்பிடிக்காமையே ஆகும். சருமத்தில் கிருமித் தொற்று மட்டுமின்றி பெரிய சீழ் கட்டிகள் வரை ஏற்படுவதுண்டு.

பச்சை குத்திய இடங்களில் தழும்புகள் தோன்றுவது மற்றுமொரு பிரச்சனை. அழகைத் தேடப் போய் அசிங்கத்தில் முடிவதாக இது அமையும். இது எல்லோருக்கும் ஏற்படுவதில்லை. உடலியல் ரீதியாக சிலருக்கு இவை ஏற்படுவதற்கான சாத்தியங்கள் அதிகம்.

இருந்தபோதும் ஆழமான பெரிய புண்கள் ஏற்பட்டால் எவருக்கும் தழும்புகள் தோன்றலாம்.

தழும்புகள் சுலபமாகக் குணப்படுத்த முடியாதவை என்பதால் அவை வராமல் தடுப்பதே உசிதமானது.

சிறிய காய்கள் முளைகள், சரும அழற்சி போன்றை உள்ள இடங்களில் பச்சை குத்துவது அறவே கூடாது. ஏனெனில் அவை பின்பு புற்றுநோயாக மாறக் கூடிய சாத்தியம் உள்ளது. பச்சை குத்துவதில் உபயோகிக்கும் நிறக் கலமிகள் அதற்கான சாத்தியத்தை அதிகரிக்கும்.

இவ்வாறாக பல வித பாதிப்புகள் ஏற்படுவதால் பச்சை குத்துவதைத் தவிர்ப்பதே நல்லது.



டாக்டர் எம்.கே.முருகானந்தன்
MBBS (Cey),DFM (Col),FCGP (Col)
குடும்பவைத்தியர்







அனைவருக்கும் எமது தொழிலாளர் தின வாழ்த்துகள் (May 1)

# அன்னை தமிழை தன் மீது சுமந்தவர்



அன்னை தமிழை
தன் மீது சுமந்தவர்

விண்ணை அடைந்தார்
விநாயகர் பாதந்தனில்

விநாயகர் புத்திரன்
விநாயகர் பக்தரானார்

தமிழை நேசித்தவர்
சைவ சமயத்தை பூசித்தவர்

சிறு வயதில்
பெற்றோரை இழந்து
மாமாவின் அரவணைப்பில்
அண்ணன்மார் ஊக்கத்தில்
வளர்ந்து
பெரு வயதில் தன் முயற்சியால்
உயர்ந்தவர்

படித்தது புவியியல்
பிடித்தது தமிழ்
இடையினில் புகுந்தது ஆங்கிலம்
நடிப்பதின் ஆர்வத்தால்
நாடக ஆசிரியரானார்

என் அன்பு தாயார்
தன் கைபிடித்தவர்
பின் இல் வாழ்க்கையில்
முன் உதாரணமானவர்

என்னை என் சகோதரியை – இம்
மண்ணை நேசிக்க வைத்தவர்
சுதந்திரமான முற்போக்கான
சிந்தனையைப் போதித்தவர்

பெயர் சொல்லி எம்மை
அழைத்ததில்லை
மனைவியை அம்மா – என்
சகோதரியை அக்கா
என்னை தம்பி என்பார்

இயல் இசை நாடகம்
கற்றுத் தந்தார்
அயலவர் பெரியவரை
மதிக்க வைத்தார்

தான் பேசுமிடமெல்லாம்
என்னையும் அழைத்துச் செல்வார்
நான் தூங்கிவிடுவேன்
எனை தூக்கி மேடையில்
அருகினில் தூங்க விட்டு
அவர் பேச தொடங்கிடுவார்

மருமகனை மகன் என்றும்
மருமகளை மகள் என்றும்
அன்புடன் அழைப்பார்
பேரப்பிள்ளைகளின் அன்பில்
பேரானந்தம் அடைந்தார்

கையில் துண்டின்றி
மணிக்கணக்காகப் பேசுவார்
வெய்யில் மழை பாராது
ஊரெல்லாம் சுற்றினார்

எதற்கும் அஞ்சாதவர்
பதறும் மனம் இல்லாதவர்
கவலைக்கு மருந்து எழுதினார்
கவலையே படவில்லை வாழ்வில்

கோபம் வந்தால்
அடிதான்
பாவம் பல மாணவர்
வாங்கினார் கன்னத்தில்
ஒருவர் குறையை
அவருக்குத்தான் சொல்வார்
வித்துவச் செருக்கில்
பத்திரிகையில் எழுதார்

தன்னை இகழ்ந்தோரை
மன்னித்து விட்டார்
தன் நண்பர்களை இகழ்ந்தோரை
துண்டித்து விட்டார்

முதல் நாள் இரவு
தம்பி நான் போகப்போறேன் என்றார்
அதன் பின் தொலைக்காட்சியில்
விநாயகரை கைதூக்கி
வணங்கினார்

வழி அனுப்பினோம்
விழிகள் ததும்ப
எம்முடன் இணைந்த
உற்ற உறவினர்
நண்பர்கள் ஊடகவயளாளர்கள்
அனைவருக்கும் பல் கோடி நன்றிகள்..

வாரணன் கந்தவனம்

# தேர்தல் கள நிலைமைகளை மாற்றியமைக்குமா ஜே.வி.பி?

இது முன்முனைப் போட்டியாகப் போகின்றது. அதாவது ஜேவிபியின் செல்வாக்கு அதிகரித்திருப்பதால் கணிசமான வாக்குகள் அவர்களுக்கு அளிக்கப்படலாம். கனிசமான வாக்குகளை அவர்கள் பெற்றுக் கொள்வது என்பது ஏனைய இரண்டு பிரதான வேட்பாளர்களில் எவருமே 50 வீத வாக்குகளை பெற்றுக் கொள்ள முடியாத ஒரு நிலைமையை ஏற்படுத்தலாம்.

அவ்வாறான ஒரு நிலைமையில் மூன்றாவதாக வருபவருக்கு அளிக்கப்பட்ட இரண்டாவது வாக்குகள் எண்ணப்படும் நிலை ஏற்படலாம். இந்த வாக்குகள்தான் என்பதுதான் ஜனாதிபதியைத் தீர்மானிக்கும் வாக்குகளாக அமையும். இந்த நிலையில் தான் ஜனாதிபதி தேர்தல் இம்முறை குழப்பங்கள் நிறைந்ததாக இம்முறை அமையலாம் என எதிர்வுகூறப்படுகின்றது. அதாவது, ஜே.வி.பி.யின் அதிகரித்த வாக்குப் பலம் தேர்தலில் தேவையற்ற குழப்பங்களை ஏற்படுத்தலாம்.

பிராந்திய அரசியல் நகர்வுகளில் இலங்கை ஒரு பிரதான இடத்தை பெற்றிருப்பதால், பிராந்திய வல்லரசுகள் மட்டுமல்லாது மேற்கு நாடுகளும் இலங்கையில் நடைபெறப்போகும் ஜனாதிபதித் தேர்தலை நுணுக்கமாக அவதானிக்கின்றன. அதனை தமக்கு ஏற்றவாறு மாற்றியமைப்பதற்கு என்ன செய்யலாம் என்றும் அவை ஆலோசிக்கின்றன.

2015 இல் மகிந்த ராஜபக்ஷ தோற்கடிக்கப்படுவதற்கு இந்தியாவும், மேற்கு நாடுகளும் பின்னணியிலிருந்து செயற்பட்டதாக ராஜபக்ஷக்கள் பகிரங்கமாகவே குற்றஞ்சாட்டியிருந்தார்கள். தமக்கு சார்பான ஒரு அரசை அமைக்க அப்போது அவர்கள் விரும்பினார்கள். அதனை சாதித்தார்கள்.



தற்போதும் இந்தியா மற்றும் மேற்கு நாடுகளின் மறைமுகமான நகர்வுகளை அவதானிக்கக்கூடியதாக இருக்கும். யார் அதிகாரத்துக்கு வரவேண்டும் என்பதை மட்டுமன்றி யார் வரக்கூடாது என்பதிலும் இந்தச் சக்திகள் அவதானமாக இருக்கும். ராஜபக்ஷக்கள் மீண்டும் அதிகாரத்துக்கு வரக்கூடாது என்பது அவர்களுடைய முதலாவது தெரிவு.

ஜே.வி.பி. தலைவர்களை அழைத்து இந்தியா பேச்சுக்களை நடத்தியிருந்தாலும் கூட, அவர்கள் அதிகாரத்துக்கு வருவதையோ முக்கிய அரசியல் சக்தியாக உருவாகுவதையோ புதுடில்லி விரும்பவில்லை. மேற்கு நாடுகளின் நிலையும் இதுதான். ஒரு தீவிர போக்குடைய சீன சார்பு இடதுசாரிக்கட்சி அதிகாரத்துக்கு வருவதோ தவிர்க்க முடியாத ஒரு சக்தியாக உருவாகுவதையே இந்தியா ஏற்றுக்கொள்ளாவது. அப்படியானால், எதற்காக ஜே.வி.பி. தலைவர்களை இந்தியா அழைத்தது என்ற கேள்வி உங்களுக்கு எழலாம். ஜே.வி.பி.யின் பலங்களையும் பலவீனங்களையும் அறிந்துகொள்வது தான் இந்தியாவின் உண்மையான நோக்கம். ஜனாதிபதித் தேர்தலில் ஜே.வி.பி.யினால் ஏற்படக்கூடிய தாக்கத்தை இல்லாமல் செய்ய வேண்டுமானால் அதற்கு ஒரே வழிதான் இருக்கின்றது. சஜித்தையும் ரணிலையும் இணைப்பதற்கு ஒரே வழி. இந்தப் பின்னணியில்தான் அதற்கான முனைப்புக்கள் முன்னெடுக்கப்பட்டன. ரணில் ஜனாதிபதி, சஜித் பிரதமர் என்ற சமரசத்தை சஜித் விரும்பவில்லை. மனோ கணேசன் உட்பட சில பிரமுகர்கள் இந்த முயற்சியில் ஈடுபட்டு தோல்வியடைந்திருக்கின்றார்கள்.

இந்த நிலையில் ஜே.வி.பி.யினால் ஜனாதிபதித் தேர்தல் கள நிலைமைகளில் எவ்வாறான மாற்றம் ஏற்படப்போகின்றது. தேர்தல் குறித்த உத்தியோகப்பற்றான அறிவித்தல் வெளிவரும் போது எவ்வாறான மாற்றங்கள் இடம்பெறும் என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

டொட்முண்ட் மாநகரில்....
தமிழர் அரங்கம்
வெள்ளிக்கிழமைகளில்
Jeden Freitag
தமிழர் அரங்கம்
Rheinische Srt.76-80
44137 Dortmund
Info:0151 633 633 33
0178 146 006 3

சனிக்கிழமை 15.00- 18.00
திரையிசை நடனம்
(Cinimatic Dance)

கீபோர்ட் (Keyboard)
வெள்ளிக்கிழமை 18:00-19:00
அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களால்
கற்பிக்கப்படுகிறது.சிறுவர்களில்
இருந்து பெரியோர்கள் வரை
இணைந்து கொள்ளலாம்
Für Kinder und Jungendliche und Erwachsene!
6€ Pro Stunde



தமிழ் மொழி (Tamillsche Sprachunterricht)
வெள்ளிக்கிழமை 16:00-17:45
Free
அ ஆ இ ஈ உ
சிறார்களுக்கும்,இளையோர்களுக்கும்,
எளிமையான முறையில் தமிழ் கற்பிக்கப்படும்.
Für Kinder und Jungendliche!Auch speziell jugendliche,
die sich mit der tamilische Sprache nicht auskennen

யேர்மன் மொழி (Deutsch für Anfänger / Innen)
ICH LERNE DEUTSCH
6€ Pro Stunde
வெள்ளிக்கிழமை 17.45 -19.15
யேர்மன் மொழியில் பேசவும்
எழுதவும் கற்பிக்கப்படும்
யேர்மன் குடியுரிமை பெறுவதற்கு
பயன் உள்ளதாக அமையும்

மாதவி



சென்ற இதழ் தொடர்ச்சி...

# கருபிக் கடலில் 14 நாட்கள் ஒரே மூச்சில் ஒன்பது தீவுகள்




**1980** களின் வாழ்வை வாழ்ந்து மகிழ்ந்தோம். கைதொலை பேசி கமராவானது. தொலைபேசி பேச மறுத்தது பேரின்பம் தந்தது. மீண்டும் மனிதரோடு நேருக்கு நேர் கதைக்கும் தருணம் ஆனந்தமானது. சூம் zoom களை சுட்டெரித்து விட்டது வெய்யில்.(30 பாகை) வெட்பம், நல்ல காற்று, தொலைபேசி அற்ற அற்புதமான 1980 களை நினைவூட்டின பலரது கைகளிலும் புத்தகங்கள் புத்துயிர் பெற்று இருந்தன. துறைமுகம் வரும் வரை காத்திருங்கள் அடுத்த இதழில் சந்திப்போம்.

### 01.02.2024 St.Vincet

சும்மா நடந்து சுத்தினோம். KFC பக்கத்தில் பல சேவல்களும், கோழிகமும் ஆர்ப்பாட்டம் செய்வதுபோல் கூவியவண்ணம் இருந்தது. தெருக்களில் பாட்டு கேட்டபடி மக்கள் நடமாட்டம். துறைமுகம் தாண்டி வெளியில் வந்தால் உல்லாச பயணிகளுக்கு வழிகாட்டி. தேவை இல்லை என்றால் நாகரிகமாக உங்கள் விடுமுறை இனிதாக அமையட்டும் என வாழ்த்தி அனுப்புவார்கள். இந்தப் பண்பு, எம்மைக் கவர்வதாக இருந்தது.

### 02.01.2024 GERNADA

அழகான கடல் சுழ்ந்த தீவு. அன்பான உபசரிப்பு, வாசனைத் திரவியங்கள் சிறப்பாக உண்டு. 1974 ஆண்டு மாசி மாதம் 7ம் திகதி இங்கிலாந்திடம் இருத்து சுதந்திரம் பெற்றது. அதன் 50 வருட நிறைவை சிறப்பாக கொண்ட பல இடங்களிலும் கொடி பறக்கவிட்டு உள்ளனர். இளநீர் 2 டொலர். நல்ல வழுக்கை தேங்காய்.

அழகான வெள்ளை மணல் கடற்கரை. குளிக்க சிறப்பான இடம். ஒரு பழங்கால டச்சுக் கோட்டையும் உண்டு அங்கும் குறும்படம் எடுத்தோம்.கடல் டாக்ஸி இல் துறைமுகத்தில் இருந்து குளிக்கச் செல்லலாம். Youcolaters எனப்படும் ஒரே ஒரு மரம் அந்த தீவில் காணப்பட்டது. இது நடப்பட்ட ஆண்டு. 1977.

### ST.LUCIA 03.02.2024 சனிக்கிழமை

இவர்களது பிரதான உணவு, வாழைப் பழம், வாழைக்காய், (solt fisch) மீன். 6 மாதம் சுற்றுலாப்பயணிகள், பின் தோட்டச் செய்கை. துறைமுகத்தில் இருந்து வெளி வரும் வழியில் முதலாவது ரவுண்டர் போட்டில் 4 பேர் வள்ளம் ஒன்றை வலிப்பது போல் ஒரு சிற்பம். வலிக்கும் சவள் நிலத்தில் தாங்கி நிற்க ஆட்கள் உயரத்தில் வள்ளம் செல்வது போல் அழகான சிற்பம். இது போன்ற சிற்பங்கள் ஏன் எமது தாயகத்தில், அந்த அந்த ஊர்களில், அல்லது பிரதேசங்களில், அங்கு வாழும் கலைகளை, தொழில்களை , முன்னிறுத்தி ஏன் இலைகள் அமைக்கப் படாது என்ற ஆதங்கம் மனதில் பிறந்தது.

வாகனச் சாரதிகள் வழிநெடுகிலும் காணும் தங்கள் நண்பர்களுக்கு, உரத்த குரலில் அவர்கள் பெயரைச் சொல்லி தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தி செல்வார்கள். சிறிய தீவு அதனால் மக்கள் எல்லோரும் ஒரு வரை ஒருவர் அறிந்தவர்களாக இருந்தார்கள். அவர்கள் ஒருவரை ஒருவர் விலத்தும் போதும் மலர்ந்த முகத்தோடு முகம் காட்டுவார்கள். இது ஐரோப்பாவிலும் உண்டு, அங்கு பலர் அது ஓட்டமெற்றிக் புரோகிராம் போல் அச்செயல் நடக்கும். சரி ஐரோப்பாவை விடுங்கள். நம்மவர்கள் ஒருவரை ஒருவர் நேரில் கண்டால் யார், அவர் அந்தஸ்த்து என? பல பல விடயங்களை எமது ஓட்டமெற்றிக் புரோகிராம் ஆராய்ந்து அதன் பின்புதான் முகம் மலரும்.


இங்கு நாய்களுடன் செல்பவர்கள் அதிகம். மிருக வைத்தியசாலையும் அதிகம். ஏன் இப்போது எம்மவர் பலர் தங்கள் பிள்ளைகள் விருப்பத்திற்கு நல்ல உயர் சாதி நாய்களை வாங்கி வளர்க்கிறார்கள், பல பிள்ளைகள் பேரப்பிள்ளைகளை , பெற்றோருக்கு தராமல் நாய்களை கொடுத்தும் விடுகிறார்கள். அது கட்டில் சோபா என எங்கும் துள்ளி விளையாடும். அதற்கு பிறந்தநாள் கொண்டாட்டம், மரணச் சடங்கு என பல அரங்கேறுகிறது. பிறந்த நாளின் போது தாய்மண்ணில் வாழும் மக்களுக்கு உதவுவதுபோல நாய்களின் பிறந்தநாளின் போது அங்கு வாழும் ஊர் நாய்களுக்கும் உதவலாம். சிவபூமி ஆறு.திருமுருகன் நாய்கள் சரனாலயத்தையும் நடத்துகிறார். நினைவில் வைத்திருக்க வேண்டிய ஒன்று.

### Saint Kitts 05.02.2024

காட்டுக்குள் உள்ள ஒவ்வொரு மரமும் மருத்துவகுணம் உடையவை. பாடசாலை பிள்ளைகள் முதல் பெரியவர்கள் வரை மகிழ்ச்சி ததும்பும் முகங்கள். கரும்பு, மாமரம், முருக்கங்காய், பப்பாமரம் என நமக்கு பரீட்சையமான பல மரங்கள் காணக்கூடியதாக இருந்தது.

28 ஆம் பக்கம் பார்க்க...








NANDY'S CURRY'S & MORE WWW.NANDYS.DE
Düsseldorf
ஒரே குடையின் கீழ் எங்கள் சேவை

## Nandy's Catering & Partyservice

உங்கள் இல்லத்தில் எந்த வைபவங்களாக இருந்தாலும் குன்றாத சுவையுடன், சுடச் சுடப் பரிமாறுகின்றோம்.
இலங்கை, இந்திய, ஐரோப்பிய உணவுகளையும் தயாரித்து வழங்குகின்றோம்.
**பரிமாறுதல் ஒரு கலை அது எமது நிறுவனத்தின் கைவந்தகலை!**

உணவு விநியோகம் பரிமாறல் மற்றும் நிழல்படம், வீடியோ அதுமட்டுமன்றி எமது திறமையான ஊழியர்கள் உங்கள் விழாவை திட்டமிட்டுதல், திருமணமேடை, மண்டபம் மற்றும் மண்டபச் சோடனைகள் மற்றும் நடைமுறைப்படுத்துதல் போன்றவைகளுக்கு உதவ ஆயத்தமாக உள்ளோம்.

தொடர்புகளுக்கு: 0173-7424955
0211-7691974
www.Nandys.de | email: info@nandys.de

அனைவருக்கும் எமது தொழிலாளர் தின வாழ்த்துகள் (May 1)

நீண்டகாலம் மக்கள் மனதில் நம்பிக்கை ஒளி பரப்பும் தங்க நகையகம்

# Jaffna Bazar Jewellery



தங்க நகைகள்
என்றால் தங்கள்
மனதில் நிலைத்து
இருப்பவர்கள்
நாங்கள் என்றும்
நாடுகள்

2024ம் ஆண்டின்
புதிய வரவு!
புத்தம் புது அழகிய
டிசைன்களில்
தங்க நகைகள்



பொன்னுருக்கு,
காதுகுத்து
வைபவங்களுக்கு
எம்மை
அழையுங்கள்

திருத்த
வேலைகள்
குறுகிய
காலத்துள்
செய்து
தரப்படும்.

Branch:
Jaffna basar.
Taunus Str 31,
60329 Frankfurt Main

உங்கள் இலத்திற்கு தேவையான மளிகைப் பொருட்கள்
என்றும் போல் மலிவு விலையில் கிடைக்கும்



ஆலயங்களுக்கு
தேவையான
பூஜை
பொருட்கள்
எம்மிடம்
நிறைவாக
உண்டு

பசுமையான மரக்கறி வகைகள்
கடல் உணவு வகைகள்
அனைத்தும் எம்மிடம் தரமாக
மலிவாகக்கிடைக்கும்

Jaffna Bazar

Jaffna Bazar, Kaiser Straße.49 ,
69329 Frankfurt Main

Tel: 069 25 62 6353 \ 0049 69 25626353
0049 179 4792961 \ 0049 151 71520425



# காத்திருக்கிறேன் கண்ணம்மா!

கலாபூரி
திவ்யா சுஜேன் (இலங்கை)

எத்தனை கோடி இன்பம் வைத்தாய் 36

வாழ்வியல் வசந்தங்களில் அரிய பெரிய வரமாய் அமையக்கூடியது யாதென வியக்கும் போது???

ஊனுளம் உருக நம் மெய்யன்பை காதலன் / காதலியிடம் வாரியிறைக்கும் உறவில், அவர்களால் நாம் காதலிக்கப்படுவதை தவிர, அவர்கள் காதலை நாமும் அனுபவிப்பதை விட வேறு எதுவாக அமையமுடியும் என ஊர்ஜிதமாகின்றது.

அவ்வாறு இவ்வுடலைச் சுமந்து வந்த ஆன்மாவின் தேவதாகம் இதுவென எண்ணும் வண்ணம் நயாகராவின் எழுச்சி போல் தூய நேய அன்பினால் அணையற்று அணைக்கும் கண்ணம்மாவின் காதலாழியுள் வீழ்கிறார் பாரதி.

> "சுட்டும் விழிசுடர் தான் – கண்ணம்மா
> சூரிய சந்திரரோ?

இரவு பகல் இயக்கமாய் சகல காரியங்களின் மூலமாய் துணையானவை சூரியனும், சந்திரனும் என் வாழ்வின் இயக்கமே நின் விழியசைவோ எனக் கருதியோ? இல்லை சிவபிரானின் வலக்கண் சூரியனாயும் இடக்கண் சந்திரனாயும் அமைவது போல் என் சிவமே, இறையே நீதான் கண்ணம்மா எனக் கடவுளிலும் காதலைப் பெரிதாய் மதிக்கும் நிலை கருதியோ? கண்ணம்மாவின் இரு கண்களையும் சூரியன், சந்தரின் என ஒப்பிடுகிறார்.

பெருஞான வெளியின் உயர் தடமாய் காதலைக் காணும் பாரதி, இரு விழிகளில் ஞானஒளி வீசுவதாலும், அகத்தினுள்ளாடும் காதல் தீ கண்களில் தெறிப்பதாலும், ஞாயிறும், திங்களும் இரு கண்களென உவமை சொன்னதாலும் விழி சுடர் எனக் கூறுகிறார். அதிலும் தன் புலன்களை அறியும் அறிவு கொண்டதாயும் குறிப்பறிந்து செயல்படக் கூடிய கண்கள் என்பதாலும் சுட்டும் விழிச் சுடர் என மேலும் மேன்மை சேர்க்கிறார்.

> "வட்டக் கரிய விழி கண்ணம்மா
> வானக் கருமை கொல்லோ?

விழியழகிலிருந்து விடுபட முடியாதவராய் இன்னமும் விழிமேல் தஞ்சம் புகுந்து வட்ட வடிவிற்கு உருவகப்படுத்த முயற்சிக்கிறார். ஒரு பெண்ணின் கண் உரு கொண்டு அவள் குணம் கூறும் வித்துவத்தன்மையில் வட்ட வடிவக் கண்கள் ஈர்ப்பின் முதலிடமாய், தேசுலவும் தெளிவிடமாய் அமையலா ஏலவே இவ்வடிவை மனத்திருத்தி சூரிய, சந்திரரை வட்ட உருவென வெளியிருப்படுத்தி உவமித்துள்ளார். விரிந்த வானம் போலான எல்லையற்ற என் காதல், இந்த சிறு வட்ட விழிக்குள் அடக்கம் என்று வானத்தோடு விரிவுபடுத்தும் பாரதி கருமை நிறத்தின் அழகிற்கும் துணையாகிறார்.

> "பட்டுக் கருநீலப் புடவை
> பதித்த நல்லாயிரம்
> நட்ட நடு நிசியில் தெரியும்
> நட்சத்திரங்களடி"

அகக் கண்களுள் கண்ணம்மாவின் எழில் காணும் கற்பனைத் திரையில் அவளைப் பட்டு கருநீலப் புடவையில் காண்கிறார். ஆங்காங்கு தெரியும் அவள் அங்கச் செறிப்பை நடுநிசியில் தெரியும் நட்சத்திரம் என்கிறார்.

> "சோலை மலரொளியோ – உனது
> சுந்தரப் புன்னகை தான்"

ஓர் சோலையின் எழில் அத்தனையும் ஒவ்வொன்றாய் அனுபவிக்கக்கூடிய பேரானந்த அழகு அங்கு தேனுண்ண வரும் வண்டிற்கு காத்துக் கிடந்து மொட்டவிழ்ந்த மலர்களை காணுமிடம் கண்ணம்மாவின் இதழ்கள் நினைவு மழையில் தூறலாகிறது. நம் அன்புணர்வின் ஒளியைப் புன்னகை



யால் மொழி பெயர்க்கும் அவள் சுந்தரப் புன்னகையை எண்ணுகிறார். அவை தன் வாழ்விற்கு மென்மையானவை, காதலிற்கு ஒளியூட்ட வல்லன என்பதனால் மலர் ஒளியிற்கு உவமிக்கிறார்.

> "நீல கடலலையே – உனது
> நெஞ்சின் அலைகளடி"

விரிந்து கிடக்கும் கடலுக்கு பேரழகு தந்து பெருவோலம் கூட்டி மெல்லக் கலை பயிலும் அலையழகிற்கு விலை ஏது? தொலைவிலிருந்தே ஆரவாரம் கூட்டி கரை தொட்டதும் அடங்கும் நீலக் கடலலை போல் எனைத் தீண்டினால் அடங்கவல்லன கண்ணம்மாவின் நெஞ்சலைகள் எனக் கூற முயற்சிக்கிறார்.

> "கோலக் குயிலோசை உனது
> குரலினிமையடி
> வாலைக் குமரியடி – கண்ணம்மா
> மருவக் காதல் கொண்டேன்"

ஒலிக்கும் ஓசைக்கும் இடையான வேறுபாட்டை நன்கு உணர்ந்தவராய், தன் செவிகளில் சுருதி சேர்த்து வரும் நாதமான ஓசை கூடி நின்ற அழகிய குயில்களின் பரிபாஷையல்ல உன் குரலின் இனிமையது. நாம் கூடும் வேளை நிசப்த வெளியில் சப்த சிருங்காரம் செய்யும் ஓசையது கண்ணம்மா. நீ குமரியல்ல வாலைக்குமரி இளங்கன்னி உனைத் தழுவிப் புணரக் காதல் கொண்டுள்னே என்கிறார் வாலைக்குமரி என்பதில் வயதைக் குறித்ததாகவின்றி அன்பினால் ஆனந்தம் வழிந்தோடவல்ல உறவினைப் பரிசளிக்கும் காதலி காதலன் பாரதியின் கண்களில் என்றும் செல்லமாய் குழந்தையாய் இளமையாய் ப்ரியமாகிறாள்.

> "சாத்திரம் பேசுகிறாய் கண்ணம்மா
> சாத்திரம் ஏதுக்கடி
> ஆத்திரம் கொண்டவர்க்கே கண்ணம்மா
> சாத்திரம் உண்டோடி?"

பன்னெடுங்காலமாய் செய்யத்தக்கன, செய்யத்தகாதன என யாரோ போட்டு வைத்த வாய்ப்பாடுகளுள் முடங்கி பவித்திரமான ப்ரியங்களைப் புடவைக்குள் மறைத்து வழங்கங்களோடு துவைத்துப் போடும் சாத்திரம் ஏதுக்கு? அன்பின் தீரம் அறிந்தோர்க்கு உன்னத உறவு இற்றைக்கு ஏற்பட்டதல்ல முற்பட்ட பிறவிகளின் தொடர்தேடல் என்றுணர்ந்தோர்க்கு இந்த சாத்திரமும் சம்பிரதாய வழக்கங்கள் உண்டோ?

ஆன்ம பந்தமாய், கர்ம சம்பந்தமாய் இணையும் இரு ஆன்மாக்களை எந்த சாத்திர சக்தியுமாய் கட்டிப்போட்டு காவல் செய்ய விடலாமோ? என்று உறுதியாய் தம் உயிருறவில் உண்மை கொண்டு கூறுகிறார்.

> "மூத்தவர் சம்மதியில் வதுவை
> முறைகள் பின்பு செய்வோம்
> காத்திருப்பேனடி இதுபார்
> கன்னத்தில் முத்தமொன்று"

இருமனம் இணைந்த ரகசிய சுகத்தை பரகசியப்படுதத்தும் திருமண முறைகளை நம்பி நாணாதே. ஆவற்றை நியமித்த நம் முற்பட்ட சந்ததியான மூத்தோர் சம்மதியில் பின்பு ஒரு காலத்தில் அவ்விதிகளை செய்வோம். அது நம் தூய பந்தத்திற்கான தேவையும் அல்ல. இத்தருணம் சருகான ஊரெனில் சிறகான எண்ணச் சுவையெனலாம் ஒன்றே ஒன்று தான்.

> காத்திருக்கிறேன்..... கண்ணம்மா!!
> காத்திருக்கிறேன்
> க–ன்–ன–த்–தீ–ல் மு–த்–த–
> மொ–ன்–று!!!
> முத்து முத்தாக எத்தனை கோடி இன்பம்
> வைத்தாய்.

Heilbronn நகரில்...
கல்புறோன் நகரில், திறந்த வெளியரங்கில்
INDIEN in HEILBRONN யாழ் Festival
யாழ் எழில் கொண்டாட்டம்!
(மூன்று தினங்கள்)
எழிலூட்டும் கலாச்சார நிகழ்ச்சிகள்!

07 வெள்ளி, 08 சனி, 09 ஞாயிறு ஆனி 2024.
இடம்: 74072 Heilbronn Theresienwiese (8,000qm)
யாழ் எழில் கொண்டாட்டத்தில்
கலை நிகழ்ச்சிகள் தருபவர்கள், கடைகள் போட விரும்புவர்கள்
15.05.2024 முன் தொடர்பு கொள்ளவும்.

திறந்த வெளியரங்கம்
74072 Heilbronn Theresienwiese
07/08/09- June 2024
Tel: (+49) 01727733873
இந்து கலாச்சார கல்வி மன்றம்.
Organized by HKB Verein- Heilbronn.Germany

அனைவருக்கும் எமது தொழிலாளர் தின வாழ்த்துகள் (May 1)



# ஜனாதிபதி தேர்தலில் தமிழ் வேட்பாளர்

ஜூட் பிரகாஷ்
(அவுஸ்திரேலியா)



"துன் தெனெக் வாடிவென்ன சீட்டெக்கே, ஹுதர தெனெக்ட வாடிவென புளுவன் நங், ஐ பஸ் தெனெகுட வாடி வென்ட பரி?" ("மூன்று பேர் இருக்க கூடிய ஆசனத்தில், நாலு பேர் இருக்க முடியும் என்றால், ஏன் ஐந்து பேர் இருக்க முடியாது")

CIMA படித்துக் கொண்டிருந்த காலங்களில், 1994 ஆம் ஆண்டு ஜூலை மாதம், கொழும்பு கோட்டையில் இருந்து பதுளை நோக்கிப் புறப்படத் தயாரான இரவு ரயிலில், ஒரு சிங்கள மனிசியைப் பார்த்து நண்பர் தவத்தார் கேட்ட கேள்வியை எப்பவும் மறக்கேலாது.

வடக்கு கிழக்கில் நடந்து கொண்டிருந்த யுத்தத்தின் அதிர்வுகள், கொழும்பில் எதிரொலித்துக் கொண்டிருந்த பயங்கரமான அந்த நாட்களில், தவத்தார் தன்னுடைய வாழ்க்கையையும் எங்கள் வாழ்க்கைகளுயும், ஒரு ரயில் ஆசனத்துக்காக அந்தப் ரயில் பயணத்தில் பணயம் வைத்துக் கொண்டிருந்தார்.

பயணிகளால் நிரம்பி வழிந்து கொண்டிருந்த அந்த ரயிலில், மூவர் அமரக் கூடிய அந்த ஆசனத்தில், இரு ஆசனங்களில் ஒரு சிங்களத் தாயும் மகளும் அமர்ந்திருக்க, மூன்றாவது ஆசனத்தில் நண்பன் ராஜனை செருகி இருந்தோம். கொஞ்ச நேரத்திற்குப் பிறகு, அந்த சிங்களத் தாய், தனது இரண்டாவது மகளையும் அதே ஆசனத்தில் அமர வைக்க, இப்போ மூவர் இருக்கும் சீட்டில் நாலு பேர் அமர்ந்திருக்கிறார்கள்.

தமிழர் தாயகத்தில் நடக்கும் சிங்களக் குடியேற்றங்கள் போல், நாங்கள் பிடித்திரு ந்த ஒரு சீட்டும் பறி போய்க் கொண்டிருந்ததைப் பார்த்து துணுக்குற்ற தவத்தார், ராஜனை கொஞ்சம் தள்ளி இருக்கச் சொல்லி விட்டு, அதே ஆசனத்தில் ஐந்தாவதாக தானும் நெருக்கி அமர வெளிக்கிட, பிரச்சினை வெடித்து சிங்களச் சனம் குழம்பீட்டுது.

தவத்தாருக்கு எங்கிருந்தோ வந்த வீரத்தில், சற்றும் சளைத்துப் பின்வாங்காமல், "துன் தெனக் வாடிவென்ன சீட்டெக்கே, ஹுதர தென்னக்ட வாடி வென்ட புளுவன் நங், ஐ பஸ் தெனக்குட்ட வாடி வென்ட பரி (மூன்று பேர் இருக்க கூடிய ஆசனத்தில் நாலு பேர் இருக்க முடியும் என்றால், ஏன் ஐந்து பேர் இருக்க முடியாது") என்று தன்னுடைய யாழ்ப்பாணத்தான் சிங்களத்தில் அடித்து விட, பெரிய களேபரமாகி, பக்கத்து compartment இல் பயணித்த ஆமிக்காரன்கள் முன்னேறி வந்து தவத்தாரை பின்வாங்க வைத்தார்கள்.

வரப் போகும் ஜனாதிபதித் தேர்தலில், தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்துவதால் நாங்கள் என்னென்ன நன்மைகள் அடையலாம் என்ற நன்மைகளின் பட்டியலைப் பார்க்க, வாசிக்க, இந்த "துன்தெனக் வாடிவென சீட்டெக்கே.." கதை தான் ஞாபகம் வந்தது.

**தமிழ் பொது வேட்பாளரை நிறுத்துவதால் பெற்றுக் கொள்ளக்கூடிய நன்மைகள் என்னவென்றாலாம்**

1. தமிழ் மக்களின் பிரச்சினைகளை வெளிக் கொண்டுவருவார்.
2. தமிழ் மக்களின் ஐக்கியத்தை நிலை நிறுத்துவார்.
3. சிங்கள மக்களுடன் பேசி தமிழ் மக்களுக்கு எதிராக இருக்கும் மயக்கங்களை தீர்ப்பார்.
4. வெளிநாட்டு அரசுகளிற்கு எங்களுடைய பிரச்சினைகளை எடுத்துக் கூறுவார்.

ஒரு ஜனாதிபதி வேட்பாளரின் ஆயுட் காலம், தேர்தலுக்கான பரப்புரை நடக்கும் மூன்றோ நாலு மாத காலம் மட்டுமே. தேர்தல் பரப்புரை முடிந்து அவர் தேர்தலில் தோற்றாப் பிறகு, அவரை யாரும் கண்டு கொள்ள மாட்டார்கள். தேர்தல் பரப்புரைக் காலத்திலேயே வெற்றி பெற வாய்ப்புள்ள வேட்பாளர்களை விட மிச்ச வேட்பாளர்கள் எல்லாம் காமெடி பீஸ்/கள் தான்.

சரி, அது எல்லாவற்றையும் விட்டாலும், அந்தக் குறுகிய காலத்தில், இந்த நான்கு விடயங்களையும் ஒரு தமிழ் வேட்பாளாரால் செய்ய முடியும் என்றால், நான்கு வருடங்களாக பா.உ ஆக இருக்கும் ஒருவரால், ஐந்து வருடங்களாக முதலமைச்சராக இருந்த ஒருவரால் ஏன் இவை எல்லாவற்றையும் செய்ய முடியாமல் போனது?

தவத்தார் கேட்ட மாதிரி..

"துன் தெனெக் வாடிவென்ன சீட்டெக்கே, ஹுதர தெனெக்ட வாடிவென புளுவன் நங், ஐ பஸ் தெனெகுட வாடி வென்ட பரி?" ("மூன்று பேர் இருக்கக் கூடிய ஆசனத்தில் நாலு பேர் இருக்க முடியும் என்றால், ஏன் ஐந்து பேர் இருக்க முடியாது") கேட்கிறவன் தமிழன் என்றால்.. யாரும் என்னத்தையும் அடித்து விடலாம் என்ற நிலைமையில் தான் எங்கட சீத்துவம் வந்து நிற்குது.



# ஈழவூர் – பூநகரியில் யாரும் அறிந்திராத ஈழ நிலத்தின் மற்றுமோர் ஆதாரம்!

ஈழம் என்கின்ற சொல் இலங்கையின் பூர்வீகப் பெயராக இருந்து வருகின்ற போதும், இலங்கை அரசைப் பொறுத்தவரை அது பயன்பாட்டிற்கு மறுதலிக்கப்படுகின்ற பெயராக மாறியிருக்கிறது. ஆனால், ஈழம் என்கின்ற சொல் தோன்றுவதற்கு காரணமாக இருந்த ஈழவூர் என்கின்ற கிராமத்தைப் பற்றி அனேகமானவர்கள் அறிந்திருக்க வாய்ப்பில்லை.

**ஈழவூர் யாழ்ப்பாண இராசதானி காலத்தில் வெளிநாடு என்றும் அழைக்கப்பட்டது**

தொன்மங்களை சுமந்த நிலம்.

கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பிரதேச செயலாளர் பிரிவில் பொன்னாவெளி கிராம அலுவலர் பிரிவின்கீழ் அமைந்திருக்கிறது ஈழவூர் என்னும் பழம் பெரும் கிராமம். பெயருக்கு என்றால் போல் ஆதி இரும்புக்கால எச்சங்களைத் தன்னகத்தே கொண்டிருக்கின்ற நிலமாக அடையாளப் படுத்தப்படுகின்ற ஈழவூரில் அமைந்துள்ள வெள்ளிப்பள்ளத்து வீரகத்தி விநாயகர் ஆலயத்தின் பின்னுள்ள பகுதிகளில் வெளிவந்த தொல்லியல் எச்சங்களும், கிராஞ்சிப் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட கிணறும் வரலாற்றின் கதைகளை உறுதி செய்கின்றன. அத்தோடு சங்ககாலத்துப் புலவர் ஈழத்துப் பூதந்தேவனார் இங்கு வாழ்ந்ததாகவும் செவிவழிக்கதைகள் கூறுகின்றன. இவ்வாறு, தொன்மையின் சுவடுகளை சுமந்திருக்கின்ற ஈழவூர் யாழ்ப்பாண இராச தானி காலத்தில் வெளிநாடு என்றும் அழைக்கப்பட்டது என்கின்றனர் வரலாற்று ஆசிரியர்கள்.

**பெயர் மாற்றப்பட்ட ஈழவூரும் அயற்கிராமங்களும்**

பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் வேரவில் என்று பெயர்மாற்றப்பட்ட ஈழவூரிற்கு அருகில் அமைந்துள்ள



## அப்பிரதேசமே தன்னிலை இழந்து முற்றாக அழிந்துபோகும் அபாயம்!

பொன்னாவெளி, பாலாவி, கிராஞ்சி உட்பட்ட கிராமங்கள் பண்டைய காலத்தில் நெல் உற்பத்தியில் சிறந்து விளங்கி இருக்கின்றன. இவ்வாறாக இப் பிரதேசங்களில் விளைந்த நெல் மற்றும் பாற்பொருள் உற்பத்தியின் காரணமாகவும், இப்பிரதேசத்தின் புவியியல் சார்ந்த இட அமைவின் காரணமாகவும் வரலாற்றுக் காலத்தில் இப்பிரதேங்கள் புகழ் பெற்று விளங்கியிருந்தன. வன்னிப் பிராந்தியத்தில், குறிப்பாக பூநகரியின் வரலாற்றில் ஈழவூர் செறிந்த மக்கள் தொகையினை பதிவு செய்திருக்கிறது. இவ்வாறாக பொருளாதார மற்றும் குடித்தொகை வளம் ஆகியவற்றில் முன்னிலை வகித்ததன் காரணத்தினால் இப்பிரதேசங்களை தமது ஆளுகையின்கீழ் உட்படுத்துவதற்கு போர்த்துக் கேயர்கள் பெருமுயற்சி செய்ததாக வரலாறு சொல்கிறது. இந்நிலையில், ஈழவூருக்கு அருகில் உள்ள பொன்னாவெளிக் கிராமத்தில் இன்று இடிபாடுகளோடு காணப்படுகின்ற



சர்மிலா வினோதினி
(இலங்கை)

பாடசாலையும், சிதைந்து போன நிலையில் காணப்படுகின்ற கட்டங்களும் சொல்லி நிற்கின்ற கதைகளும் ஈழவூரிற்கு கூடுதல் வலுச்சேர்க்கின்றன. நிலம் மலர நெல்விளையும் காரணத்தினால் பொன்விளையும் பூமியென சிறப்புப் பெற்று அழைக்கப்பட்டது பொன்னாவெளிக் கிராமம்.ஐரோப்பியர்களின் ஆதிக்கத்திற்கு அடிபணியாமல் இப்பிரதேசத்தில் பூர்வீகமாக வாழ்ந்துவந்த சைவப் பெரியவர்கள் இங்குள்ள மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கென்று பதினெட்டாம் நூற்றாண்டில் பாடசாலை ஒன்றை நிறுவி சுமாமி ஆறுமுக நாவலரின் கரங்களினால் அப் பாடசாலையை திறந்து வைத்து கல்விப்பணி ஆற்றினர். கிளிநொச்சி மாவட்டத்தில் முதன் முதலில் அமைக்கப்பட்ட பாடசாலையும் அதுவேயாகும். அத்தோடு அங்குவாழ்ந்த உடையாரின் வீட்டுச் சுவரில் தொங்கிக்கொண்டிருந்த புகைப்படத்தை ஒற்றியே பிற்காலத்தில் ஆறுமுக நாவலரின் புகைப்படம் தமிழ் உலகிற்குக் கிடைத்ததாகவும் சொல்லப்படுகிறது.

**இருள்சூழ்ந்த காலம்.**

இத்தகைய பெருமைகளைக் கொண்டிருக்கக் கூடிய பொன்னாவெளிக் கிராமத்தின் வயல் நிலங்கள் 1964 ம் ஆண்டு காலப்பகுதியில் ஏற்பட்ட சூறாவளித் தாக்கத்தின் காரணமாக கடல்நீர் உட்புகுந்து உவர் அடையத் தொடங்கியதோடுஇ தரைக்கீழ் நீர்வளமும் பாதிப்படையத் தொடங்கியது. பொன் விளையும் பூமியாக இருந்த பொன்னாவெளி மெல்ல மெல்லத் தன்னிலை இழக்கத் தொடங்க அங்கிருந்த குடிகளும் ஊரிலிருந்து வெளியேறி தற்போது ஈழவூரில் உறவுகளோடு வாழ்ந்து வருகின்றனர். குடிகளை இழந்த பொன்னாவெளிக்கு ஆலய வழிபாடு மற்றும், பெரும்போக பயிர்ச்செய்கையின் நிமிர்த்தமாக இன்றும் மக்கள் சென்று வருவது வழக்கத்தில் இருந்து வருகின்றது.

**அழிவுக்கு வழிகோலும் அபிவிருத்தி**

இந்நிலையில் அபிவிருத்தி அரசியலின் பின்புலத்தில் தற்போது வேரவில் என்று அழைப்படுகின்ற ஈழவூரில் சீமெந்துத் தொழிற்சாலை ஒன்றினை அமைப்பதற்கான திட்ட வரைபுகள் முன்மொழியப்பட்டு ஈ.ஐ.ஏ என்கின்ற சுற்றுச் சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட்டு ஆரம்ப கட்டப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஈழவூரில் அமைக்கப்படவுள்ள இச் சீமெந்துத் தொழிற்சாலைக்கான மூலப் பொருளாகிய சுண்ணக்கல்லினை பொன்னாவெளியில் இருந்து அகழ்ந்து எடுப்பதற்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இதன் பொருட்டு உரிய நிலத்தின் சுண்ணக்கல்லின் தரத்தினை பரிசோதிக்கும் முயற்சியில் இலங்கை புவிச் சரிதவியல் அளவை

30 ஆம் பக்கம் பார்க்க...



பூநகரி கௌதாரிமுனை ஆலயம்





# சின்னச் சின்ன ஆச்சரியங்கள், பெரிய பெரிய ஆனந்தங்களின் அடிப்படை!





சேவியர்
(தமிழ்நாடு)

## நடுப்பக்கம்

வசந்திக்கும், ஆனந்த்க்கும் கல்யாணம் ஆகி ஒரு வருடம் தான் ஆகியிருந்தது. இருவரும் கடந்த சில நாட்களாக ஒழுங்காகப் பேசிக்கொள்வதில்லை. ஆனந்த் அலுவலக வேலை என காலையிலேயே கிளம்பி, இராத்திரி தான் வருகிறார். இடைப்பட்ட நேரங்களிலும் அதிகம் போன் செய்வதில்லை.

வேலை வேலைன்னு வேலையையே கட்டிகிட்டு அழுங்க ! என வசந்தி எரிச்சல் பட, என் வேலையோட கஷ்டம் உனக்கெங்கே புரியப்போகிறது என ஆனந்த் திருப்பி எரிச்சல் பட, உறவில் சின்ன விரிசல். வசந்தி தன் தோழியரிடம் இதைப்பற்றிப் புலம்ப அவர்கள் ஆளாளுக்கு தூபம் போட்டார்கள். அவருக்கு வேற ஏதாச்சும் லவ் இருக்குமோ, அலுவலகத்துல கனெக்ஷன் இருக்குமோ, உன்னைப் பிடிக்காம போயிருக்குமோ என ஏராளம் "மோ, மோ" என பேசி அவளுடைய நிம்மதியையே கெடுத்து விட்டார்கள். இறுக்கம் இருவருக்கும் இடையே இருந்த விரிசலை பெரிதாக்கிக் கொண்டே இருந்தது.

அந்த நாள் வந்தது !! இதுக்கும் மேல பொறுக்க முடியாது, ரெண்டுல ஒண்ணு பாத்துடணும். சும்மா விடப் போறதில்லை. அவரு வரட்டும் என வசந்தி காத்திருந்தாள். மாலையில் ஆனந்த் வந்தான். தனது கோபத்தைக் கொட்ட வேண்டுமென எழுந்த வசந்தி அவனை ஏறிட்டுப் பார்த்தாள். ஆனந்த் புன்னகைத்துக் கொண்டே கையில் இருந்த ஒரு சின்ன பார்சலை அவளிடம் நீட்டினான்.

என்னங்க இது ?

கடைக்குப் போயிருந்தேன், இந்த வாட்சைப் பாத்தேன். உன் கைக்கு சூப்பரா இருக்கும்ன்னு தோணுச்சு அதான் வாங்கினேன். எனக்கா ?


உனக்கில்லாம வேற யாருக்கு நான் வாங்க போறேன்டா ? ஆனந்த் குரலில் நேசம் குழைத்தான்.

ரொம்ப நல்லாயிருக்கு.

தேங்க்ஸ். உங்கிட்டே ஒரு கிரீம் கலர் சாரி இருக்கில்ல, மயில் படம் எல்லாம் பார்டர்ல வருமே, உனக்கு எடுப்பா இருக்குமே ஒரு சாரி, அதுக்கு இந்த வாட்ச் ரொம்ப நல்லா இருக்கும். ஆனந்த் சொல்ல வசந்தி கண்கலங்கினாள். அவரை இறுக்கமாய் தழுவிக் கொண்டாள்.

சாரிங்க.. கொஞ்ச நாளாவே, நாம சரியா பேசல. மனசுக்கு ரொம்ப கஷ்டமா போச்சு.

ஆமா.. நான் தான் சாரி சொல்லணும். வேலை டென்ஷன்ல வீட்டையே கவனிக்க முடியாம ஆயிடுச்சு. இனிமே அதெல்லாம் கம்மி பண்ணிக்கணும். ம்ம்ம்... சரி வா.. வெளியே போய் ஒரு காஃபி சாப்டு வரலாம். ஆனந்த் சொல்ல, இது வரை இருந்த மன இறுக்கம், பிணக்கு, விரிசல் எல்லாம் சட்டென மறைய மகிழ்ச்சியுடன் உள்ளறைக்குப் போனாள் வசந்தி. சில்மிஷ விரல்களோடு ஆனந்தும் அவளைப் பின் தொடர்ந்தான்.



சின்னச் சின்ன இனிய ஆச்சரியங்கள் தான் குடும்ப வாழ்க்கையை சுவாரஸ்யமாகவும், ஆரோக்கியமாகவும் வைத்திருக்கிறது. இதை அனுபவசாலிகள் சட்டென ஒத்துக் கொள்வார்கள். புரியாதவர்களுக்கு ஒரு புதிராக இருக்கும். வசந்தி எதிர்பாராத நேரத்தில் ஆனந்த் கொடுத்த அந்த சின்னப் பரிசு ஒரு கசப்பான சூழலை சட்டென இனிப்பாக மாற்றியது. தாம்பத்ய வாழ்க்கையின் சூட்சுமம் இது தான்.

கல்யாணத்துக்கு முன்னாடி இந்த கிரியேட்டிவ் விஷயங்கள் காதலர்களுக்கு உச்சத்தில் இருக்கும். என்ன பரிசு கொடுக்கலாம். எப்படி நம்ம ஆளை இம்ப்ரஸ் பண்ணலாம் என ரூம் போட்டு யோசிப்பார்கள். அதுக்குத் தக்கபடி நிறைய பரிசுகள், எதிர்பாராத இனிய நிகழ்வுகள் என அசத்துவார்கள்.

காதலி, காதலன் சார்ந்த எல்லா விஷயங்களையும் விரல் நுனியில் வைத்திருப்பார்கள். "நம்ம ஆளு இருமின நாள் இது", 'என் ஆளு குப்புறப் படுத்து தலை நிமிர்ந்த நாள் இது' என சர்வ தினங்களையும் மனசில் கல்வெட்டாக வைத்திருப்பார்கள். இன்னும் சொல்லப் போனால் எத்தனை மணி, எந்த நிமிடத்தில், என்ன நடந்தது என்பதைக் கூட மனசில் கொத்தி வைப்பார்கள். அதனால் தான் காதல் காலம் எல்லாருக்குமே ஒரு உற்சாகத்தின் அருவியாய் ஓடிக் கொண்டே இருக்கும்.

கல்யாணம் ஆச்சுன்னா எல்லாம் கொஞ்சம் கொஞ்சமாக மறந்து விடும். பிறந்த நாளே கூட மறந்த நாளாகிப் போகும். "முன்னாடியெல்லாம் நம்மாளுக்கு நம்ம மேல கரிசனை அதிகம்.

17 ஆம் பக்கம் பார்க்க...

மாதொருபாகன்
ஜோதிடம் திருமண சேவை
(ஜேர்மனி)



உங்கள் ஜெனனசாதகம், மற்றும்
திருமண பொருத்தம் போன்றவற்றை
வாக்கிய பஞ்சாங்க முறைபடி துல்லியமாக
எழுதித்தரப்படும்.
மேலும் எமது திருமண சேவையூடாக உங்கள்
பிள்ளைகளின் திருமணத்தை சிறப்பாக நிச்சயம்
செய்யலாம்.
தொடர்புக்கு: Whatsapp/Viber | +49 15738324103




அனைவருக்கும் எமது தொழிலாளர் தின வாழ்த்துகள் (May 1)





# அடுத்தவர் விருப்பங்களுக்குக் கொடுக்கும் மரியாதை ஒரு இனிய ஆச்சரியம்!

இப்பல்லாம் நாம முக்கியமில்லாம போயிட்டோம்“ என கணவனும், மனைவியும் கவலை கொள்ள ஆரம்பித்து விடுவார்கள்! அதற்கு என்ன செய்யவேண்டுமெனும் கேள்விக்கு, ‘பிறந்த நாள், திருமண நாள் இவற்றையெல்லாம் நினைவில் வைத்து பரிசு கொடுக்க வேண்டும், வாழ்த்து சொல்ல வேண்டும்‘ என நீங்கள் சொன்னால் நீங்கள் சாதாரண தம்பதி! அதைக் கூட சொல்லவில்லையென்றால், நீங்கள் கிளீன் போல்ட் கேஸ், என்பது வேறு விஷயம். ஆனால் அதைத் தாண்டி நிறைய இருக்கிறது.!

எதிர்பாராத இனிய ஆச்சரியங்கள். அது தான் ரொம்ப முக்கியம். அது பல விதங்களிலும் இருக்கலாம். உங்களுடைய ரசனை, வசதி, விருப்பம் என பல விஷயங்களின் அடிப்படையில் இந்த ஆச்சரியங்கள் உருவாகும் என்பது தான் சுவாரஸ்யம்.




ஒரு சனிக்கிழமையோ, ஓய்வாய் இருக்கும் ஒரு நாளிலோ ஒரு சின்ன விசிட் அடியுங்கள். கொஞ்சம் தூரத்தில் ஏதோ ஒரு பீச் ரெசார்ட், அல்லது ஒரு மலையோர கெஸ்ட் ஹவுஸ் போன்ற இடங்கள் ரொம்ப சவுகரியம். ஏற்கனவே எல்லாவற்றையும் ஏற்பாடு செய்து வைத்து விட்டு, மனைவியை அழைத்துக் கொண்டு போய் வாருங்கள் ! மீண்டும் ஒரு காதல் பயணம் ஆரம்பிக்கும்.

ஒரு நாள் காலையில் உங்கள் மனைவி எழும்பும் முன்பே எழுந்து பிரேக்ஃபாஸ்ட் ரெடி பண்ணி விட்டு மனைவியை எழுப்பிப் பாருங்கள். ஒரு சேஞ்சுக்காக நான் உனக்கு சமைச்சு வெச்சிருக்கேன், சாப்பிட்டு பாரு என ஒரு ஆச்சரியம் கொடுங்கள். உங்களுடைய சமையலின் ருசி எப்படி என்பதல்ல முக்கியம். உங்களுடைய கரிசனை மனைவியை நெகிழச் செய்யும் !

ஒரு குட்டிக் கவிதை, ஒரு சின்ன லவ் லெட்டர், ஒரு சின்ன மின்னஞ்சல் படம், உங்கள் காதலைச் சொல்ல, உங்கள் அன்பைப் பகிர்ந்து கொள்ள. இப்படி ஏதாவது யோசித்துச் செய்யுங்கள். “நீ என் வாழ்க்கையில் வந்தது இறைவனின் வரம். என் கடின நேரங்களில் உன் அன்பை நினைக்கும் போது தான் மனம் லேசாகிறது“ என உங்கள் ஆத்மார்த்த அன்பை வெளிப்படுத்துங்கள். நிச்சயம் உறவு மேம்படும்.

ஒரு மாலை வேளையில், அல்லது மதிய வேளையில் உங்கள் மனைவியுடன் அமர்ந்து ஒரு நல்ல ரொமான்டிக் மூவி பாருங்கள். நல்ல டிவிடி வாங்கி வந்து பாருங்கள். கொறிப்பதற்கு உங்கள் மனைவியின் ஃபேவரிட் ஐட்டம் ஒன்றை தயாராக்கி வைத்திருக்க வேண்டியது தான் ஹைலைட். அருகருகே அமர்ந்து சிரித்துக் கொண்டே, பாருங்கள், காதல் தழைக்கும் !



சேலைகட்டும் போது ஊசி குத்திவிடுவதில் இருந்து, சில சில்மிஷ விளையாட்டுகள், வரவேற்பறை சமையலறை என பழைய காதலுடன் நெருக்கமாய் இருக்கும் தருணங்கள் என மூச்சுக் காற்றை வெப்பமாக்குங்கள். காதல் தாவரம் மூச்சுக் காற்றில் சடசடவென வளரும், மோகத் தீயில் அது மொட்டுகளை சட்டென மலர்த்தும். எதிலும் போலித் தனம் இல்லாமல் இருக்க வேண்டும் என்பது ரொம்ப முக்கியம்.

உங்களுடைய செல்போனை ஒரு நாள் மறந்து விட்டு சும்மா அமர்ந்து பேசுங்கள். பழைய கதைகளை, அலுவலக சுவாரஸ்யங்களை, பேசுவதும் கேட்பதும் இனிமையான தருணங்கள். அவை காதலை வளரவைக்கும் நிமிடங்கள்.

கட்டிப்புடி வைத்தியம் ரொம்ப நல்லது ! போயிட்டு வரேன்னு சொல்றதானாலும் சரி, காலைல குட்மார்ணிங் சொல்றதுன்னாலும் சரி, ஒரு 2 நிமிட கட்டிப்புடி வைத்தியம் மனசை லேசாக்கும், உறவை மேம்படுத்தும் என்பது உண்மை !

உங்கள் வாழ்க்கைத் துணைவருடைய பழைய புகைப்படங்கள் கொஞ்சம் எடுத்து ஒரு ஆல்பமாகவோ, ஒரு கொலாட்ஜ் ஆகவோ செய்து ஒரு நாள் அவரிடம் கொடுங்கள். “பழைய நாட்களெல்லாம் ஞாபகம் வந்துச்சு அதான் இதைப் பண்ணினேன்“ என்று. சுவாரஸ்யமாகவும், இனிமையாகவும் இருக்கும் !



கணவனுக்கோ, மனைவிக்கோ இருக்கக் கூடிய நட்பு வட்டாரத்தை மதியுங்கள். ஒரு நாள் திடீரென, நண்பர்களைப் போய் பாருங்க, அவங்க கூட கொஞ்சம் டைம் ஸ்பெண்ட் பண்ணுங்க என அனுமதி கொடுங்கள். அடுத்தவர் விருப்பங்களுக்குக் கொடுக்கும் மரியாதை ஒரு இனிய ஆச்சரியம் !

உங்கள் சிந்தனைக் குதிரையை வரிக் குதிரையாக வலம் வரச் செய்யுங்கள். காதல் வானில் வானவில்களுக்குப் பஞ்சமே இருக்காது !மீண்டும் ஒரு முறை ஞாபகப் படுத்துகிறேன், சின்னச் சின்ன ஆச்சரியங்கள், பெரிய பெரிய ஆனந்தங்களின் அடிப்படை. அனைத்தையும் ஆத்மார்த்தமான அன்போடு செய்யவேண்டும் என்பதை மட்டும் மறந்து விடாதீர்கள்








# உன் நாடகத்தை எல்லாம் எவண்டா பார்ப்பான்!

நடிகவேள் எம்.ஆர்.ராதா..! இவரை போல ஒரு துணிச்சல்காரரை இந்திய வரலாறு இதுவரை பார்த்ததில்லை.. இனியும் பார்க்க போவதில்லை..!

“உங்களுக்கு பிடித்த இந்திய நடிகர் யார்“ என்று மோகன்லாலிடம் கேட்டபோது டக்கென சொன்னது எம்.ஆர்.ராதாவின் பெயரைதான்! அந்த காலத்தில், சாமி படத்தை காட்டி சாம்பிராணி புகை போட்டு தான், நாடகங்களை ஆரம்பிப்பது வழக்கம்..! ஆனால் முதன்முதலில் ‘தமிழ்த்தாய்“ வாழ்த்து பாடி ஆரம்பித்து வைத்தவர் எம்.ஆர். ராதா அவர்கள்தான்!

நாடகம் என்பது வெறும்பக்தி, காதல், புராணம் என்றிருந்ததை, பகுத்தறிவு, சீர் திருத்தம் என்ற திடீர் திருப்பத்தை அள்ளி தெளித்தது ராதாதான்..!

“நாட்டிலே அதிகமா உழைக்கிறவனுக்கு கொஞ்சமா கூலி கொடுக்கிறான்... சினிமாவில கொஞ்சமா உழைக்கிறவனுக்கு அள்ளி அள்ளி கொடுக்கிறான்... உலகத்தில் அசமத்துவம் ஒழிக்க முடியாதபடி சபிக்கப் பட்ட கொள்ளை பிரதேசம்னா அது சினிமா ஒன்னுதான்“ என்று பொதுமேடையிலேயே முழங்கியவர்..!

ஒரு முறை ராதாவின் நாடகத்திற்கு ஜஸ்டிஸ் எஸ்ஏபி “ஐயர்“ என்பவர் தலைமை தாங்கியிருந்தார்... முன்வரிசையில் உட்கார்ந்து நாடகத்தையும் பார்த்து கொண்டிருந்தார்..!

அதில் ஒரு காட்சியில், “உன் நாடகத்தை எல்லாம் எவண்டா பார்ப்பான்?“ என்று ராதாவை பார்த்து ஒருவர் டயலாக் பேசுவார். அதற்கு ராதா, “பார்ப்பான் பார்ப்பான்“ என்றாராம் சத்தமாக.

அதேபோல, கம்பர் விழாவில் பேச, ராதாவுக்கு அழைப்பு வந்தது. அதில் பேசிய ராதா, “பெரியவங்களே, சின்னவங்களே, பொம்பளைங்களே... நீங்கள் எல்லாம் இப்ப எதுக்கு வந்திருக்கீங்கன்னு தெரியும்.



இந்த கம்ப நாடாரின் விழாவிலே...“ என்று ஆரம்பித்தார்.

அப்போது, ஒருவர் குறுக்கிட்டு, ‘அய்யா... கம்பர் நாடாரு இல்ல..‘ என்றார்.

‘நாடார் இல்லயா... நம்மாளு போலருக்கு, இந்த கம்ப முதலியாராகப்பட்டவர்...‘

‘அய்யா... அவரு முதலியாரும் இல்ல...‘ என்றார்.

‘முதலியாரும் இல்லயா சரி... என்னன்னு புரிஞ்சு போச்சு இந்த கம்பர் அய்யர் ஆனவர்...‘

‘அய்யா... அவரு அய்யரும் இல்ல...‘

‘என்னது நாடார் இல்ல, முதலியார் இல்ல, அய்யரும் இல்லயா... அப்போ, இப்ப தான் ஜாதிகளை சொல்லிக்கிட்டிருக்கோமா... அப்ப ஜாதி கிடையாதா...

சரி தான், இந்த ஜாதியில்லாத கம்பன் விழாவிலே...“ என, ராதாவின் அந்த பேச்சு தொடர்ந்தது..!

இப்படி எம்.ஆர்.ராதா முற்றிலும் முரண்பாடுகளால் நிறைந்தவர்.. ஆனால் வாழ்வின் மறுபக்கமோ நெகிழ்ச்சியாலும் பேரன்பாலும் பெருங்கருணையாலும் நிறைந்தது..!

“பார்த்தியா, ரசிச்சியா அதோட கூத்தாடிய விட்டு போய்ட்டே இரு.. அவன் அடுத்த கூத்துக்கு ரெடியாகிட்டே இருப்பான்.. அவன் உலகத்துக்குள்ள நுழைஞ்சி பாக்காதே.. அது ரொம்ப அசிங்கம்.. அவனை அரசியல்ல கூப்பிட்டு அழிஞ்சி போகாதே.. நீ அவனுக்கு காசு கொடுக்குற, அவன் நடிக்கிறான் அவ்வளவுதான். உன் வேலைக்காரன் அவன்.. அந்த வேலைக்காரனை தலைவன்னு கொண்டாடாதே.. அசிங்கம் அவமானம்“ என்றார்.

பெரியாரின் இயல்புக்கும், ராதாவின் இயல்புக்கும் பெரிய வித்தியாசம் இல்லை.. பெரியார் சுமந்த அத்தனை பழி, பாவங்களும் இவர் மீதும் சுமத்தப்பட்டன.ராதாவின் நாடகங்கள் லட்சக்கணக்கான மக்களை தட்டியெழுப்பின.. அவற்றின் காட்சிகளும் கூரான அம்பு போன்ற வசனங்களும் இந்தியாவுக்கு அப்பாலும் பாய்ந்து சென்று விழுந்தன..!! சமூகத்திற்கு எது சரியோ அதனை நெற்றிப் பொட்டில் ஓங்கி அடித்து சொன்னவர் ராதா..! திராவிட இயக்கத்தின் உறுதி வாய்ந்த பிரம்மாண்டமான இந்த தூணை தவிர்த்துவிட்டு, தமிழக வரலாற்றை யாரும் எழுத முடியாது.. அப்படி மீறி எழுதவும் யாருக்கும் துணிச்சல் வராது..!


வெற்றிமணி திருமண சேவை

யேர்மனியில் கற்றிங்கன் நகரில் ஆசிரியையாக பணிபுரியும் நற்குணம் உள்ள சைவ, வேளாள குல பெண்ணிற்கு ஏற்ற பட்டதாரி மணமகனை தற்போதைய பாடசாலையிலேயே கற்பிக்க கூடிய தூரத்தில் வரனை எதிர்பார்க்கும் பெற்றோர்.
தொடர்புகளுக்கு: 4915774318528

மணமகன் தேவை


யேர்மனியில் Wirtschaftsingenieurin ஆக படிப்பை நிறைவு செய்த 35 வயது நற்குணமுள்ள சைவ வேளாள பெண்ணிற்கு பொருத்தமான பட்டதாரி மணமகனை யேர்மனியில் எதிர் பார்க்கும் பெற்றோர்
தொடர்புகளுக்கு: 4915774318528

யேர்மனியில் Biologie Master படித்து முடித்து வேலை செய்யும் நற்குணமுள்ள 30 வயது சைவ சமயத்தை சேர்ந்த பெண்ணுக்கு படித்த குணமுள்ள மணமகனை எதிர்பார்கிறோம்.
தொடர்புகளுக்கு பெற்றோர்;
01578166346

மணமகன் தேவை

உங்கள் பிள்ளைகளுக்கும் வரன் தேடுகின்றீர்களா?
பதிவு செய்ய விபரங்களுக்கு:
+49 1631992333






யேர்மனியில் வசிக்கும், Qualifizierte Realschulabschluss கல்வித் தகமையுள்ள 31 வயது நிரம்பிய சைவசமய வேளாளர்குல ஆணுக்கு ஏற்ற மணமகளைத் தேடுகின்றோம். தாயகத்தில் வசிப்பவர்களும் தொடர்பு கொள்ளலாம்.
பெற்றோர் மட்டும் தொடர்பு கொள்ளவும்.
தொடர்புகளுக்கு:
00491763460073 7/ 00491767064l684

மணமகள் தேவை!

யேர்மனியில் M.sc BWL படித்த 37 வயதுடைய விவாகரத்தான எமது மகனுக்கு தகுந்த மணமகளை எதிர்பார்க்கிறோம்.
தொடர்புகளுக்கு:
+049 176 477 54 255




அனைவருக்கும் எமது தொழிலாளர் தின வாழ்த்துகள் (May 1)



# இனி உங்கள் எண்ணங்களை டிஜிட்டல் உலகம் நகர்த்தும்!

உங்கள் எண்ணங்களுடன் உங்கள் iPhone ஐ இயக்க அல்லது இணையத்தில் உள்ள தளங்களை அலசி ஆராய முடியும் என்று சொன்னால் எப்படி இருக்கும்?

இது ஓர் அறிவியல் புனைவு திரைப்படத்தின் காட்சி அல்ல இது ஈலோன் மஸ்க்கின் நியூராலிங்க் எனப்படும் நிறுவனத்தின் எதிர்காலத் திட்டங்கள் ஆகும். 2016 ஆம் ஆண்டு ரகசியமாகத் தொடங்கப்பட்ட நியூராலிங்க், மனித உணர்வுகளுடனும், எண்ணங்களுடனும் எந்திரங்கள், கணினிகள் மேலும் வேறு தொழினுட்பங்களை இயக்குவது மட்டுமல்லாமல் இவற்றை ஒன்றுடன் ஒன்று இணைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது.

2017 இல் ஒரு வால்ஸ்ட்ரீட் ஜர்னல் அறிக்கையின் மூலம் நியூராலிங்க் முதலில் அறிமுகப்படுத்தப்பட்டது. 2019 ஆம் ஆண்டுக்குள், ஈலோன் மஸ்க் இந்தத் தொழில்நுட்பத்தை, குறிப்பாக ஒரு நாணயத்தைப் போன்ற சிறிய சிப் (chip) ஒன்றை, ஒரு நேரடி நிகழ்ச்சியில் காட்டினார். இந்தச் சிறிய சிப், காதின் பின்னால் பொருத்தப்பட்டு, மூளையுடன் இணைக்கப்பட்ட சிறிய கம்பிகள் மூலம் மூளை செயல்பாட்டைக் கண்காணிக்க மற்றும் மூளையுடன் தொடர்பிலுள்ள உதவும்.

2024 ஜனவரியில் இந்த நிறுவனம் இந்தத் தொழினுட்பத்தை அடுத்த படிக்குக் கொண்டு சென்றது. நோயாளி ஒருவர் இவ்வாறான ஒரு நியூராலிங்க் சிப் ஒன்றைத் தனது மூளைக்குள் பொருத்துவதற்கு அனுமதி கொடுத்து, அதைப் பெற்றும் விட்டார். இதன் பலன்கள் தான் என்ன தெரியுமா? புரட்சிகரமான மருத்துவ முன்னேற்றங்களும் அதை விட மனிதர்களும் இயந்திரங்களும் இடையேயான புதிய எல்லையும் ஆகும்.

நியூராலிங்க் தொழில்நுட்பத்தின் பயணம் ஆய்வகங்களிலிருந்து உயிரினங்களுக்குப் பன்றி ஒன்றின் பெயரில் தொடங்கியது. ஒரு சோதனையில், ஜெர்ட்ருட் என்ற பன்றியின் மூளை செயல்பாட்டை நேரலையில் ஒளிபரப்பினர், அது பன்றியின் நகர்வுகளைக் கணிப்பதற்கான சிப்பின் திறனைக் காட்டியது. இந்த ஆரம்பச் சோதனை மேலும் துணிச்சலான சோதனைகளுக்கு வழிவகுத்தது. குறிப்பாக இதில் ஒரு குரங்கு, தன்னுடைய எண்ணங்களால் மட்டுமே வீடியோ விளையாட்டுகளை விளையாடியது.

ஆனால் இவ்வாறான ஒரு சிப்பினை ஏன் மனித மூளையில் பொருத்த வேண்டும்? இதனால் கிடைக்கும் நன்மை தான் என்ன? உடல் செயல்பாட்டை இழந்த நபர்கள், தம்முடைய எண்ணங்களின் மூலம் மட்டுமே டிஜிட்டல் சாதனங்களை இயக்க உதவும் என்பதே இதன் பலன்களில் ஒன்றாகும். உதாரணத்திற்கு முதுகெலும்பு காயங்களுக்குள்ளானவர்கள் தமது கை கால்களை இயக்க முடியாத





Dr.நிரோஷன் தில்லைநாதன்
(யேர்மனி)

நிலையில் காணப்படுவார்கள். இவ்வாறான சிப்பின் ஊடாக அவர்கள் டிஜிட்டல் சுதந்திரத்தை மீண்டும் பெற முடியும். அதாவது எண்ணங்களின் ஊடாக கணினியை இயக்கி மற்றவர்களுடன் கூட தொடர்புகொள்ளமுடியும்.

நியூராலிங்க்கின் அறிவியல் என்னவென்றால் மூளையில் உள்ள தரவை மிகச் சிறந்த சிப் மூலம் கணினிகளுக்கு அனுப்புவதே ஆகும். இந்தச் சாதனங்களை நிறுவுவதற்கு உதவும் ஒரு ரோபோடிக் அமைப்பு லேசிக் அறுவை சிகிச்சையைப் போன்ற துல்லியத்துடன் சிப்பை நிறுவ வடிவமைக்கப்பட்டுள்ளது.

நரம்பியல் வல்லுநர்களில் சிலர் இந்தத் தொழினுட்பத்தை மிகவும் போற்றுகின்றனர், மற்றவர்கள் நரம்பியல் விளைவுகளைப் பற்றி அச்சம் கொண்டுள்ளனர். எனினும், இந்தத் தொழினுட்பம் பார்க்கின்சன் மற்றும் அல்சைமர் போன்ற கடுமையான நரம்பியல் வியாதிகளை எதிர்காலத்தில் ஆய்வு செய்து சிகிச்சை அளிக்க உதவும் என்று பரவலாக நம்பப்படுகிறது. மேலும் இத்தகைய தொழில்நுட்பத்தின் பயன்பாடு ஆட்டிசம் போன்ற நிலைகளை "தீர்வு" செய்வதற்கும் உதவும் என்பதே மஸ்க்கின் நம்பிக்கையாகும்.

ஈலோன் மஸ்க்கின் நீண்ட காலக் கனவு, மருத்துவப் பயன்பாடுகளைத் தாண்டி, செயற்கை நுண்ணறிவுடன் மனித மூளையை இணைப்பதாகும். நியூராலிங்க்கை மனித அறிவுத் திறன்களுக்கும் செயற்கை நுண்ணறிவு கொண்ட அமைப்புகளுக்கும் இடையேயான பாலமாகக் காண்கின்றனர்.

நியூராலிங்க் வெறும் ஒரு தொழினுட்ப முயற்சி மட்டுமல்ல் இது மனிதர்களும் தொழில்நுட்பமும் இடையேயான ஒரு புதிய தொடர்பாகக் கருதப்படுகிறது.



நாம் மனித உணர்வுகளை இயந்திரங்களுடன் இணைப்பதற்கான தருணத்தில் நிற்கிறோம். இதன் விளைவு என்ன? இதனால் ஏதும் எல்லைகளை மீறுகின்றோமா? இந்தத் தொழில்நுட்பம் வளர்ந்து வரும் போது, அது நமது வாழ்க்கையை, நமது மருத்துவத்தை, மற்றும் மனித மனதைப் புரிந்துகொள்ளும் விதத்தையே மாற்றி அமைக்கும். இதைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்?

இவ்வாறான சிப் ஒன்றை உங்கள் மூளையில் பொருத்த விடுவீர்களா?




அனைவருக்கும் எமது தொழிலாளர் தின வாழ்த்துகள் (May 1)



# தீதும் நன்றும் பிறர் தர வாரா

இன்பமும் துன்பமும் நிறைந்த வாழ்வில் நாம் அனுபவிக்கின்ற இன்ப துன்பங்களுக்கான காரணங்கள் நாம் மட்டுமே என்பதை உணர்தலே நம் வாழ்க்கைப் பாதையைப் புரிந்து கொள்ள உதவியாக இருக்கும்.

நாம் வாழ்வில் நடக்கின்ற அனைத்துமே நம் முடிவுகளுடன் தொடர்புபட்டவைதான்.அதை மறந்துவிட்டு நம் துன்பங்களுக்கான காரணத்தை யாரோ ஒருவர் மீது சுமத்திவிட்டு நாம் பரிதாபத்திற்குரியவர்களாக முயற்சிக்கிறோம்.

எப்போது நம் தவறுகள்பற்றிச் சிந்திக்கத் தொடங்குகின்றோமோ அன்றுதான் நம் முயற்சிகளுக்கான சரியான முடிவுகள் கிடைக்கும்.எடுத்துக்காட்டாக நம் காலில் முள்ளைக் குத்திக்கொண்டால் என்ன சொல்வோம். ‘காலில் முள் குத்திவிட்டது’என்கின்றோம். நாம் இருக்கும் இடம் தேடி வந்து காலில் முள் குத்தியதா முள் இருக்குமிடத்தில் சென்று முள் குத்துவதற்கு நாம் காரணமாக இருந்தோமா என்பதில்தான் விடை உள்ளது. வேண்டுமென்று நீங்களாக முள்ளை எடுத்துக் குத்திக் கொள்ளவில்லை என்றாலும் முள் குத்துவதற்குக் காரணமாக இருந்தது நீங்களோ, முள் இருக்குமிடம் குறித்த உங்கள் அறியாமையோ ஆகும்.

உங்களுக்கு நடக்கின்ற தீமைகள் நீங்கள் வலிந்து வாங்காவிட்டாலும் உங்கள் கவனக்குறைவாலோ, சரியான திட்டமிடலின்மையாலோதான் நடக்கின்றது. மற்றவர்கள் யாரும் வந்து துன்பத்தை ஏற்படுத்துவதில்லை. யாரோ ஒருவர் உங்களுக்குத் துன்பத்தைக் கொடுப்பதற்கான வாய்ப்பை நீங்கள்தான் வழங்கியிருக்கின்றீர்கள் என்பதை உணர்தலில்தான் உங்கள் வாழ்க்கை பற்றிய புரிதல் தொடங்கும்.

நான் இவர்களுக்கு உதவி செய்தேன் ஆனால் அவர்கள் என்னை ஏமாற்றி விட்டார்கள், என் பணத்தையோ வேறு பொருளையோ ஏமாற்றிவிட்டார்கள் என்று கூறுபவர்கள் சிந்திக்க வேண்டியதெல்லாம் நீங்கள் உதவி செய்தவர்கள் அதற்குத் தகுதியானவர்கள்தானா என்பதுதான். ஏமாற்றும் எண்ணம் உள்ளவர்களைப்பற்றிச் சரியாக அறிந்துகொள்ளாமல் உதவியது யார் தவறு? நல்லதே நினைத்தாலும் தீய எண்ணம் உள்ளவர்களை ஆராய்ந்தறியாமல் உதவி செய்ததுதான் இங்கே தவறாகிப்போகிறது.

அதே போலக் காதலிலோ, திருமண பந்தத்திலோ ஏமாற்றிவிட்டதாகக் கூறுபவர்கள் பிறரின் குணத்தைச் சரியாக அறியாமல் தாம் ஏமாந்துவிட்டதை உணர மறுக்கின்றனர்.

சரியான ஒருவரைத் தேர்வு செய்யாத அவர்கள் தவறுதான் பிரிவுக்குக் காரணமாகிறது. அல்லது அந்த உறவைத் தக்க வைத்துக்கொள்வதற்கான முயற்சிகளில் தவறியதால் பிரிவு நிகழ்ந்துவிடுகிறது. வெற்றி பெற்ற உறவுகளில் அவர்கள் தேர்வோ, முயற்சியோ பக்க பலமாகிறது. பிரிந்துபோன உறவுகளில் அவரவர் சரியற்ற தேர்வோ, தக்க முயற்சியின்மையோ காரணமாகிறது. தனிப்பட்ட நபர்களின் தவறுக்காகப் பொதுவாகக் காதலையோ, திருமணத்தையோ குறை கூறிவிட்டுக் கடந்து விட முடியாது.

ஆடை வடிவமைப்பதில் சிறந்த ஒருவர் பல நிறுவனங்களுக்கு வேலை கேட்டுச் சென்றுகொண்டே இருந்தார். அவருக்கான வாய்ப்பு பல ஆண்டுகளாக அமையவில்லை. பின்னர் பல இன்னல்களகத் தொடர்ந்து தானே சொந்தமாக ஆடை வடிவமைக்கத் தொடங்கிப் பல தோல்விகளின் பின் அதில் வெற்றியும் பெற்றார்.

அவரின் வாழ்க்கைப் பாடத்திலிருந்து நாம் பார்ப்போமானால் அவரின் திறமையைக் கண்டுகொள்ளத் தெரியாத நிறுவனங்களிடம் அவர் தொடர்ந்து வேலைக்கு முயற்சி செய்தமையே அவரின் தோல்விகளுக்குக் காரணமாய் அமைந்தது.

தன் திறமைக்கு மதிப்பளிக்காதவர்களை நாடிச் சென்று தன் தோல்விகளைத் தேடிக்கொள்வதற்கு அவரே காரணமாக இருந்திருக்கிறார்.

தோல்விகளிலிருந்து தனக்கான உத்வேகத்தைப் பெற்று பல முயற்சிகளின் பின்னர் வெற்றியும் கண்டுள்ளார். அவரறியாமல் அவர் தேர்ந்தெடுத்த தோல்விகளே இறுதியில் அவருக்கான வெற்றிக்கான வழியையும் கொடுத்தது.அவருக்கான தோல்வியையும், வெற்றியையும் அவராகவேதான் தேர்ந்தெடுத்துள்ளார். இதில் அவர் நேர்முகத்தேர்வு நடத்தியவர்களைக் குறை கூற முடியாது.ஏதோவொரு வகையில் அவர்கள் இவரை மதிப்பிடாமல் இருக்க இவரேதான் காரணமாக இருந்திருக்கப் போகிறார்.



பொலிகையூர் ரேகா
(இங்கிலாந்து)

அல்லது தன் வெற்றிக்கு அவர்கள் தேர்ந்தெடுக்காகது தான் காரணம் என்று கூறவும் முடியாது. அவர்கள் தேர்ந்தெடுக்காத அனைவருமே சொந்தமாகத் தொழில் தொடங்கவில்லை. அந்தத் தனிப்பட்ட நபரின் முயற்சியே அவருக்கான வெற்றிக்கான வாய்ப்பை வழங்கியது.

அவரது வெற்றியையும் தோல்வியையும் அவரேதான் வடிவமைத்துள்ளார்.

இந்த வாழ்க்கை அழகானது. நாம் நம்பும் மனிதர்கள் ஏமாற்றுவதையை, எம் முடிவுகள் பிழைத்துப்போதலையோ கொண்டு நாம் அடுத்தவர்களை ஒருபோதும் குறைகூறிவிட முடியாது.

ஒருவர் ஏமாற்றும் அளவுக்கு அவர்களைப் பற்றிய உண்மை அறியாது நம்பியது எம் தவறாகும். எம் முடிவுகள் குறித்த அதீத நம்பிக்கையில் சிலவற்றைத் தொடங்கிவிட்டு முழிப்பதற்கும் நம் மீதான நம்பிக்கை தான் காரணமாகிறது.

நன்மையோ,தீமையோ எல்லாம் நாமாகத் தேடிக்கொள்வதுதான். அது எம் அறியாமையாகவோ விதிப்பயனாகவோ இருக்கலாம். ஆனால் நாம் சரியாகச் சிந்தித்துச் செயலாற்றுவதன் மூலமே அதை வெல்ல முடியும்.

நன்மையில் முடிவதை அளவோடு கொண்டாடலாம். தீமையில் முடிவதை நம் அனுகுமுறைகளால் கையாளலாம். ஆம்! தீதும்நன்றும் பிறர் தர வாரா.

*விதிப்பயன் என்றன்றி*
*வினைத்திறன் கொண்டு*
*முயற்சித்தால்*
*முடக்கிடும் துயரையும்*
*முடிவாக வெல்லலாம்!*






# அன்று வந்ததும் இதே நிலா


துன்பங்களும் துயரங்களும் இன்பங்களும் நாம் கேட்டு வருவதில்லை. அவை இல்லாத வாழ்க்கையும் சுவைப்பதில்லை. “அன்று வந்ததும் இதே நிலா. இன்று வந்ததும் இதே நிலா” என்று கண்ணதாசன் எழுதியதுபோன்று பூமி சுழல்கின்ற தளத்திலே அனைத்தும் அன்றும் இன்றும் நடந்து கொண்டே இருக்கின்றன. ஆனால், நாம் வாழ்கின்ற காலத்தில் அறியப்படாது நடந்தன என்பதே உண்மை. பிரச்சினைகளும், நோய்களும், துன்பங்களும், மனக்கவலைகளும் வேறுவேறு வடிவங்களில் இருந்தன என்ற உண்மையை யாரும் மறுப்பதற்கில்லை.

**இல்லையென்றால், ஔவையும்**
**“உடன்பிறந்தார் சுற்றத்தார்**
**என்றிருக்க வேண்டாம்**
**உடன்பிறந்தே கொல்லும் நோய்..”**

என்று நோய் எம்மோடு கூடவே இருந்து கொல்லும் என்று பாடியிருக்க மாட்டார். உடன்பிறந்தாரினால் வருகின்ற வலிகள் பற்றியும் பாடியிருக்க மாட்டார்.

கவலைகள், மகிழ்ச்சிகள் மனிதர்களுக்கு மட்டுமேயுள்ள பண்பல்ல. அனைத்து உயிரிங்களுக்கும் உணர்ச்சிகள் இருக்கின்றன. முதலிலே நோய்களை எடுத்துப் பார்த்தால், இரமண மகரிசிக்கும் புற்றுநோய் வந்து இறந்தார் என்பது யாவரும் அறிந்ததே. ஆனால், இக்காலத்தில் பொலித்தீன் பாவனையில் இருப்பதனாலும், சிகரெட் புகைப்பதனாணேயுமே புற்றுநோய் வருகின்றது, அக்காலத்தில் அயோடின் உப்பில்லாத காரணத்தில் தைரோயிட் பிரச்சினை வரவில்லை என்று இக்காலப் பயன்பாடுகளினால் நோய்கள் வருகின்றன என அடுக்கிக் கொண்டு போகமுடியாது. முற்காலத்திலும் நோய்கள் ஏற்பட்டன. ஆனால், இதுதான் என்று அறியாது ஒரு காரணத்தை எடுத்துக் காட்டினார்கள். மாரடைப்பால் ஏற்பட்ட இறப்பே அன்றைய பேய் அடித்து ஏற்பட்ட இறப்பு. சிறுகுழந்தை இறப்பு அக்காலத்தில் மிதமிஞ்சிக் காணப்பட்டன. மருத்துவ வளர்ச்சியானது இறப்பு வீதத்தைக் குறைத்தது.

1330 இலே “கருப்புச்சாவு” என்று அழைக்கப்பட்டு தெள்ளுப்பூச்சிகளில் வாழுகின்ற எர்சினியா பெஸ்டிஸ் என்னும் பற்றுயிரியினால், ஆசியா, ஐரோப்பா, வட ஆபிரிக்கா, என்று பரவி 7.5 - 20 கோடி மக்கள் கொன்று குவிக்கப்பட்டனர். 1520 இல் மெக்ஸிக்கோ நோக்கிப் புறப்பட்ட ஸ்பானியக் கடற்படை வீரர்களில் ஒருவரான ஃபிரான்சிஸ்கோ த எக்வியா என்பவர் சுமந்து வந்த பெரியம்மை நோயால் மெக்சிக்கோவில் 2.2 கோடி மக்கள் இறந்தனர். முதலாம் உலகப் போரின் போது 1918 ஆம் ஆண்டு பதுங்கு குழியிலிருந்த போர்வீரர்களும், போர் முடிந்த வீரர்கள் தத்தம் நாடுகளுக்குத் திரும்பிச் சென்ற போது 50 கோடி மக்கள் நச்சுயிரியால் பாதிக்கப்பட்டு இறந்தனர். உலகப்போரில் 4 கோடி மக்கள் இறந்தனர். 2019 இல் வந்த உயிர்கொல்லி மட்டுமே உயிர்களைக் கொன்றன என்று சொல்ல முடியாது. இவ்வாறு ஏதோ ஒரு காரணத்தால் உலகத்திலிருந்து உயிர்கள் பறித்தெடுக்கப் படுகின் றார்கள். பறித்தெடுக்கப்பட வேண்டிய அவசியமும் இருக்கின்றது.



நோய், இறப்பு மட்டுமல்லாமல் மனக்கவலையை வெளியே சொல்லமுடியாத பலர் “ஒரு மனிதன் எவ்வளவு பிரச்சினைகளைத்தான் தாங்குவது” என்று மனந் நொந்து வாழ்வதை நாம் காணமுடிகின்றது. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பிரச்சினை. நூலாசிரியர்கள் தமது நூல்களை யாருமே வாங்குவதில்லை.

வாசிப்பதில்லை என இக்காலகட்டத்திலே புலம்புவதைக் காணக் கூடியதாகவுள்ளது. யாருமே நூல்களை எழுதுங்கள் என்று யாரிடமும் அடம்பிடித்ததில்லை. எழுதியதை யாரும் வாங்கவில்லை என்று கவலை கொள்ளத் தேவையில்லை. இத்தகைய கவலை தற்கால எழுத்தாளர்களை மட்டுமே வாட்டவில்லை. இதனை அழகாக விளக்குகின்றார் சீர்காழி அருணா சலக்கவிராயர்.

**கால்வீழ்ந்து நம்மைக் கவிபாடச்**
**சொன்னானோ**
**மேல்வீழ்ந்து நாமே விளம்பினோம் –**
**நூலறிந்து**
**தந்தக்காற் றந்தான் றராக்கா னமதுமனம்**
**நொந்தக்கா லென்னாகு மோ ?**

எமது காலிலே விழுந்து ஒரு கவிதை பாடுங்கள் என்று எவராவது செல்வம் படைத்தவர்கள் வந்து கேட்டார்களா? இல்லையே நாமாகவே விரும்பிப் பாடினோம். அப்படிப் பாடிய பாட்டிலுள்ள நயத்தை அவன் அறிந்திருந்தானேயாகில் வெகுமதி கிடைத்திருக்கும். ஆனால் அவன் அப்படித் தராத போது நீ வருந்தி என்ன பயன் என்று பாடுகிறார். இராமச்சந்திர கவிராயர்

**வஞ்ச கர்பா னடந்தலைந்த**
**காலிற்புண்ணும்**
**வாசறொறு முட்டுண்ட தலையிற்**
**புண்ணுஞ்**
**செஞ்சொல்லை நினைந்துருகு**
**நெஞ்சிற் புண்ணுந்**
**தீருமென்றே சங்கரன்பாற்**
**சோர்ந்தே னப்பா**
**கொஞ்சமல்ல பிரம்படியின்**
**புண்ணும் வேடன்**
**கொடுங்காலா லுதைத்தபுண்ணுங்**
**கோபமாகப்**
**பஞ்சவரி லொருவன்வில்லா**
**லடித்த புண்ணும்**
**பாரென்றே காட்டிநின்றான் பரமன் றானே**

என்று ஏமாற்றிப் பழக்கப்பட்டவர்களிடம் உதவி கேட்டு அயராது அலைந்து கால் நோ ஒருபுறம், ஒவ்வொரு வீட்டின் தலைவாசலுக்கும் சென்ற போதெல்லாம் தலை அடிபட்ட நோ ஒருபுறம், நான் எழுதிய கவிதைகளை யாருமே ஏறெடுத்தும் பார்க்கவில்லை. இதனாலே ஏற்பட்ட மனநோயைத் தீர்த்து வைக்க சிவன் கோயிலுக்குச் சென்றால், அங்கு இருந்த ஒருவர், பரமசிவன் பிரம்படியால் பட்ட நோவும், பஞ்சவரில் ஒருவன் வில்லால் அடித்த புண்ணும், கண்ணப்பநாயனார் தன்னுடைய காலால் கண்ணைப் பொத்தியதால் ஏற்பட்ட புண்ணும் எனக்கு இருக்கிறது பார் பார் என்று காட்டியதாகச் சொன்னார் என்று பாடுகிறார். பரமனுக்கே இந்த நிலை என்றால், கவலைகளும், மனக்கசப்புக்களும், நோயும் சாதாரண மனிதர்களுக்கு வருவது ஒன்றும் புதுமையில்லையே.

உணவு சேர்க எறும்பும் ஓடும், தேனியும் பறக்கும், ஒருவேளை உணவுக்காகப் புலியும் அலையும். சிவனுக்கும் பார்வதிக்கும் குடும்பப் பிரச்சினை இருந்தது. சீதையால் இராமனும், இராமனால் சீதையும் பல கஷ்டங்களைக் கண்டார்கள். உடற்குறைபாடுள்ள இரட்டையர்கள் பாடல்களைக் கொண்டு அலைந்தார்கள். பல கோடீஸ்வரர்களும், பிரபலங்களும் மண்டை வீங்கிய பிரச்சினைகளைக் கொண்டு வாழுகின்றார்கள்.

எனவே மண்ணில் விழுந்த மனிதர்கள் மண்ணுக்குள் போகும் வரை வருவது எதுவானாலும் வாழ்ந்த பார்க்க வேண்டியதே அவசியம்.

## 18 ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



திருமதி ஞானேஸ்வரி சிவஞானசுந்தரம்

தோற்றம் : 25.09.1942
மறைவு : 09.05.2006

பதினெட்டு ஆண்டுகள் சென்றாலும் தினம்
உன் நினைவு மட்டும் என்றும் எம்முடனேயே
அம்மா என்றும் அன்பே என்றும்
சொல்ல நீயில்லை!
உன் நினைவால் வாடி வதங்குகின்றோம்
இதயத்தில் உன்னால் விதைக்கப்பட்ட அன்புகள்
இப்போ செழித்து பூத்து குலுங்குகின்றன
நினைவெல்லாம் நீயே தாயே!

என்றும் உன்னை மறக்காமல் வாடும்
அன்புக் கணவர், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

தகவல்: சு.சிவஞானசுந்தரம் +49 172 9564 429

## நன்றி நவிலல்

அமரர் க.நா.சபாரத்தினம்



மாதகல் மேற்கைச் சேர்ந்த ஓய்வு பெற்ற
கூட்டுறவாளர், எமது தந்தை அமரர்
க.நா.சபாரத்தினம் அவர்களின் மரணச்செய்தி கேட்டு,
இறுதிச்சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும்,
நாம் துயருற்று இருக்கும் வேளை நேரில்,
தொலைபேசியில் ஆறுதல் வார்த்தைகள் கூறிய
உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும்
எம் குடும்பம் சார்பில் மனமார்ந்த நன்றிகள்.

றமேஸ்: 0094777438277
சுபா: 0094774723504
சாந்தன்: 009477698411 0

அனைவருக்கும் எமது தொழிலாளர் தின வாழ்த்துகள் (May 1)



# லௌ(வ்)கீகம்

## அன்று காதலித்தது எப்படி?

இப்பவுமே "லவ் மரீஜ்" எண்டு சொல்லிறதை செய்யக்கூடாத ஒரு பாவமாத்தான் ஊர் பாக்கிறது. சாதி, மதம் தாண்டி "லவ்" எண்டாலே ஒரு தீண்டாமையான விசயமா இருந்திச்சுது .

பள்ளிக்கூடத்தில படிக்கேக்க பெடியளுக்கு லவ் ஏன், எப்பிடி வாறதெண்டு தெரியாது, பிரண்ட் ஒருத்தன் "அநேமா மச்சான் அவள் உன்னைத்தான் பாக்கிறாள்"எண்டு உசுப்பேத்திவிட வாற காதல் தான் கூட. Friend உசுப்பேத்திறதோட மட்டுமில்லை ஊரெல்லாம் பரப்பியும் விடுவான். " ஏன்டா எண்டு கேட்டா" ஏற்கனவே ஒருத்தன் பாக்கிறான் எண்டு தெரிஞ்சா வேற ஒருத்தனும் பாக்க மாட்டான்டா" எண்டு விளக்கம் சொல்லுவான்.

பழகிப்பாத்து பாத்து வாறதில்லை பெடியளின்டை லவ். பாத்தோன்னயே வரும், எதைப்பாத்து பிடிக்குது எண்டு தெரியாது. "மச்சான் ஏன்டா அவளை லவ் பண்ணிறாய்" எண்டு கேட்டா விளக்கம் சொல்லத்



### லைசன்ஸ் (license) கிடைப்பதும் எப்படி?

தெரியாது. பாக்கத் தொடங்கேக்க சில வேளை தானாப் பாத்தாலும் இன்னொருத்தன்டை தயவில்லாமல் ஒப்பேத்த முடியாது. பாக்கிற மட்டும் தான் அவன்டை வேலை, மிச்சம் எல்லாத்தையும் பக்கத்தில இருக்குறவன் பாத்துக்கொள்ளுவான். தனக்கு ஏலாததை இன்னொருத்தன் செய்யிறான் எண்டோ, இல்லாட்டி இதோட இவன் அழிஞ்சு போகட்டும் எண்டோ தெரியேல்லை. என்னொருத்தன்டை "லவ்வுக்கு" உதவிறதெண்டால் பெடியள் எல்லாம் ஒற்றுமையாச் செய்வாங்கள்.

சில வேளை மற்றவன் எல்லாம் பாக்கிறான் எண்டு போட்டு ஒருத்தன் தானும் ஒண்டைப் பாப்பம் எண்டு போட்டு கோயில்லயோ, ரியூசனிலயோ கண்ட பெட்டையை சைக்கிளில விட்டுக்க கலைக்கிறாக்கள் கன பேர். அநேமா அது சைக்கிளில போகேக்க நாய் கலைக்கிற மாதிரி கொஞ்சத் தூரத்தில நிண்டிடும். சிலர் மட்டும் sincere love பண்ணிற எண்டு சொல்லித் திரிவினம். ஆனால் serous ஆ love பண்ணிற ஆக்கள் மட்டும பிள்ளைகளை விட்டுக் கலைச்சுப் பின்னால போய் எந்த ஊர், எங்க வீடு எண்டு கண்டு பிடிக்கிறது முதல் வேலை. அதுக்குப் பிறகு அந்நபர் பிள்ளை வீட்டால வெளிக்கிட்டு பள்ளிக்கூடம் இல்லாட்டி ரியூசன் போய்த் திருப்பி வாற வரை முன்னுக்கும் பின்னுக்குத் திரிய வேணும். இப்பிடித் திரியேக்க சந்தேகப்பட்டு ஆரும் மறிச்சுக்க கேட்டா சொல்லக்கூடிய மாதிரி அடுத்த வீடு, பக்கத்து ரோட்டில இருக்கிற ரெண்டு பேரின்டை பேரைத் தேடி அறிஞ்சு வைக்க வேணும்.

ஒருக்கா ஒருத்தன் சொன்னதைக் கேட்டு நட்புக்காக இப்பிடி ஒரு காதல் தூது போகேக்க மறிச்சுக் கேட்டவனுக்கு சேட்டை வெளீல இழுத்து விட்டிட்டு இயக்கம் மாதிரி காட்ட, அவன் கொஞ்சம் எங்களை முறைக்க பாத்தா மறிச்சவன் அந்தப் பெட்டையின்டை தமையன், அதோட உண்மையில இயக்கம். ஒரு மாதிரிக் காலில விழாக் குறையா



Dr.T. கோபிசங்கர்
(யாழ்ப்பாணம் அரச வைத்தியசாலை)
இலங்கை



கெஞ்சித் தப்பி ஓடினதோட அந்தக்காதல் முடிஞ்சு போனது. இதையும் எல்லாம் தாண்டிப் போய் love பண்ணிற எண்டால், கடைசி வரை பின்னால போய் எங்கடை லவ் ளவசழபெ எண்டு காட்ட வேணும்.முதல்ல தனியப் போனவளவை நாங்கள் பின்னால போறது தெரிய வர ரெண்டு body guards friend எண்டு கூட்டிக்கொண்டு போவினம். அநேமா எரிச்சலில அந்த ரெண்டு friend இல ஒண்டாவது குட்டையைக் குளப்பும்.

அதை சமளிச்சு, வேறயாரும் போட்டியாப் பாத்தா அவனை ஒரு மாதிரிக் வெருட்டி பாக்கிறதை விடப் பண்ணி அப்பன் காரனிலும் மோசமான bodyguard வேலை பாக்கோணும். அதுக்குப் பிறகு வாயைத் துறந்து கதைக்காம அவை கண்ணால வாயால குடுக்கிற soft signall கண்டு பிடிக்க வேணும். இதை எல்லாம் கவனிச்சுக் கடைசீல

23 ஆம் பக்கம் பார்க்க...

BOCHUM நகரில்...
LOTO LADEN விற்பனைக்கு உண்டு
யேர்மனியில் Bochum நகரில் Rewe Markt இல் உள்ளே அமைந்துள்ள Lotto Laden விற்பனைக்கு உண்டு. விரும்புவோர் உடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு: 0234-2399032

அனைவருக்கும் எமது தொழிலாளர் தின வாழ்த்துகள் (May 1)



# லௌ(வ்)கீகம்

## அன்று காதலித்தது எப்படி?

என்னைப் பாத்துச் சிரிக்கிறாள் எண்டு நம்பிப் போய்க் கேட்டா வாற பதில் இருக்குதே "நான் இப்ப படிக்கோணும், ஐயோ இங்க ஆரும் கண்டாப் பிரச்சனை, நான் டொக்டரா வரோணும், அப்பா அம்மாக்குப் பிடிக்காது, அதில வாறது தெரிஞ்ச ஆக்கள் ", எண்டு அவளவை சொல்லிற மறுமொழி ஓமா இல்லையா எண்டு தெரியாம குழம்பித்திரிய, அடுத்த நாள் friends இல்லாமத் தனிய வரத் தான் விளங்கும் அது green signal தான் எண்டு. அவள் சொன்னது என்ன எண்டு விளங்காமல் இண்டைக்கும் தேவதாஸாக இருக்கிறாக்களும் இருக்கினம்.

இது பள்ளிக்கூட காலத்தில ஆனால் கம்பஸ் போற நேரத்தில எல்லாம் மாறீடும்.

" கம்பஸ்க்குப் போறாய் , படிப்பில மட்டும் கவனமாய் இரு அவன் இவனைப் பாத்து காதல் கீதல் எண்டு வந்தால் " எண்டு அம்மா சொல்ல முதல் ," வந்தால் என்ன எண்டு " மகள் கேக்க , " வந்து பார் தெரியும் " எண்டு அம்மா சொல்ல, அதுக்கு அம்மம்மா ஒத்து ஊத, அப்பர் ஒண்டும் கேக்காத மாதிரி இருக்க", இந்தச் சம்பாசணை அநேமா எல்லா வீட்டையும் கம்பஸ்ஸ்க்கு போற முதல் நாள் இருக்கும்.

அப்பாடா இயக்கத்திக்குப் போகாமல் பெடி ஒருமாதிரி கம்பஸ் போட்டான் எண்டு சந்தோசப்பட்ட அம்மாமாருக்கு கம்பஸ்க்கு பிள்ளைய அனுப்பேக்க வாற அடுத்த கவலை பிள்ளை அங்க ஆரையும் பாத்தி டுமோ எண்டு. அது பெடியனோ பெட்டையோ அம்மாமருக்கு படிப்பிலும் பாக்க இது தான் பெரும் கவலை.

அம்மான்டை கதையால கம்பஸ் போறது ஏதோ love எளைய கிடைச்ச மாதிரி எண்டு நெச்சு உசுப்பேறிற பெடியள் கம்பஸ்க்குள்ள எப்பிடியும் ஒண்டு சரிவரும் எண்டு நம்பி வந்து கடைசிவரை கரைசேராமல் போன கதை கனக்க இருக்கு.

கடுவன் பள்ளிக்கூடத்தில படிச்சவனுக்கு கம்பஸ்க்க போன காஞ்ச மாடு கம்பில விழுந்த மாதிரி இருக்கும், ஆனால் போனா ப்பிறகு தான் தெரியும் அங்க இருக்கிற கஸ்டம்.

கல்வியே கண்ணாய் வாறதுகள் கண்ணெ டுத்துப் பாக்காதுகள். அதுகும் medical faculty எண்டால் அது எட்டாக் கனி தான். அதால தான் கனபெடியள் stethoscope ஐ வெளீல விட்டபடி திரிஞ்சு பத்தாம் வகுப்பு படிக் கிறதில வெள்ளைப் பிள்ளையாப் பாத்துச் சுத்தித் திரிவாங்கள். பாக்கிற பெட்டை மட்டும் பாக்காது மாதிரி திரியப் பக்கத்தில போறது உதவிக்கு வரும் கேக்காமலே. "அவர் doctor ஆம்" எண்டு தூது செல்ல, செலவில் லாமல் கரைசேருது எண்டு அம்மாமார் ஓம் சொல்ல, படிச்சு முடிச்சுப் பட்டத்தோட போகேக்க கட்டிக்கொண்டு போயிடுவாங்கள்.





ஆனாலும் கம்பஸில வந்த நாள் முதல் கடைசீல போற நாள் வரை போராடி விக்கிர மாதித்தன் மார் வேதாளத்தை பிடிக்கே லாமல் போன கதைகள் இருக்கு. அதே போல படிக்கேக்க தம்பதிகளாய் திரிஞ்சிட்டு தம் பாதைகளை பாத்துப் போன கதையும் இருக்கு. கடைசிவரை இவனுக்கு இந்தப் பெட்டை சரிவராதெண்டவன் கடைசிக் காலத்தில சேந்த கதை எண்டு நிறையக் கதை இருக்கு.

வெளீல இருந்து பாக்கிறாக்களுக்கு சனம் வாகனம் ஓட license கிடைச்ச மாதிரித்தான் கம்பஸ்க்கு வந்தால் love பண்ண license கிடைச்சிடும் எண்டு நெக்கிறது. ஆனால் அதுக்குள்ளயும் love பண்ணி ஒப்பேத்திறது arrears முடிக்கிறதலும் பாக்கக் கஸ்டம்.

ஒருத்தருக்கும் தெரியாமத்தான் love பண்ணிறம் எண்டு love பண்ணிறவை மட்டும் நெச்சுக் கொண்டிருக்க, FB pro file, what's app status எண்டு ஒண்டும் இல்லாத காலத்திலேம் டழஎந பண்ணின னாம் எண்ட கதை ஊரில பரவீடும். " என்ன என்னமோ கேள்விப்பட்டன், ஆர் பெட்டை" எண்ட விடுப்புக் கேள்விகளில இருந்து தப்பிறது பெரிய பிரச்சினை. பெட்டைகள் தாங்களாகவே friendsக்கு ஒருத்தருக்கும் சொல்லவேணாம் எண்டு சொல்லியே எல்லா ருக்கும் சொல்லிப்போடுங்கள்.

வீட்டை தெரியாம love பண்ணேக்க முதல் தெரிய வாறது அநேமா பெட்டைகள் வீட்டில அம்மாவா இருக்கும். பொறாமை பிடிச்ச ஒருத்தனோ இல்லாட்டி ஒருத்தியா தெரியாம செய்யிற உதவி இது. பிறகு மெல்ல அம்மா அப்பாவுக்குச் சொல்ல எண்டு வட்டம் விரியும். ஆனால் பெடியள் வீட்டில அம்மா மார் தெரிஞ்சாலும் தெரியாத மாதிரியே இருப்பினம்.

என்னதான் இருந்தாலும் love பண்ண முடிவெடுத்து, அலைஞ்சு திரிஞ்சு, ஓமா எண்டு கேட்டு Visa apply பண்ணீட்டு முடிவுக்காக wait பண்ணிற மாதிரி பாத்துக் கொண்டிருந்து, முடிவு தெரியாம அலைஞ்சு, ஓம் எண்டு சொன்னாப் பிறகு ஒழுங்கை வழிய ஒளிஞ்சு கதைச்சுத் திரிஞ்சு, அப்பப்ப வாற சண்டைப் பிரச்சினைகளுக்கு எல்லாம் முகம் குடுத்து,

பிறகு கட்டும் வரை வேற ஆரும் பாதுர) க்காமப் பாத்து, கட்டிற நிலைமை வர வீட்டில விசயத்தை சொல்லி , அந்தப் பூகம்பத்தை யும் ஒரு மாதிரி சமாளிச்சு கலியாணம் எண்டு முடிவாக கையில இருக்கிறதை வைச்சு ஒருமாதிரிக் கலியாணமும் கட்டீட்டு முதல் நாள் கட்டில படுத்துக் கொண்டு யோசிக்க....




# தமிழ் சித்திரை புத்தாண்டும், ஆலய வழிபாடும்

தமிழ் சித்திரைப் புத்தாண்டில் புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்கள், தாம் வாழும் நாடுகளில் சிறப்பாக தமிழ் புத்தாண்டைக் கொண்டாடினார்கள். சைவ சமயத்தவர்கள், தாம் வாழும் சூழலில் உள்ள, ஆலயங்களுக்குச் சென்று பூசைகளில் கலந்து வழிபட்டனர்.

எமக்கு கிடைத்த ஒரு சில ஆலயங்களில் நடைபெற்ற வழிபாட்டு நிகழ்வின் படங்கள் பிரசுரமாகின்றது.

**யேர்மனி கம் ஸ்ரீ காமாட்சி அம்பாள்**

ஆலயத்தில் ( Siegenbck str. 04-05/ 59071 Hamm) குரோதி தமிழ் வருடப்பிறப்பு பூஜை வெகு சிறப்பாக நடைபெற்றது.

**யேர்மனி சுவெற்றா நகர் ஸ்ரீ கனகதுர்க்கா அம்பாள்**

ஆலயத்தில் ( Becken Kamp 7 58239 Schwerte) குரோதி தமிழ் வருடப்பிறப்பு பூஜை வெகு சிறப்பாக நடைபெற்றது. புகைப்படங்கள் ஆன்மீகத் தென்றல்.

**யேர்மனி டோட்முண்ட் ஸ்ரீ சாந்தநாயகி சமேத சந்திரமௌலீஸ்வரர்**

ஆலயத்தில் (Klefer str. 25,44225 Dortmund) குரோதி தமிழ் வருடப்பிறப்பு பூஜை வெகு சிறப்பாக நடைபெற்றது.

**லிவர்பூல் நகரில் ஸ்ரீ முத்துமாரி அம்மன்**

திருக்கோவிலில் (17 Fielding street, Kensington Liverpool L6 9AP) குரோதி தமிழ் வருடப்பிறப்பு பூஜை வெகு சிறப்பாக நடைபெற்றது.

ஆலயங்களில் பெரும் திரளான மக்கள் கலந்து வழிபாட்டில் ஈடுபட்டனர்.

பூசையின் பின்னர் அன்னதானமும் வழமைபோல் இடம்பெற்றது.

**படங்கள். வெற்றிமணி**


யேர்மனி கம் ஸ்ரீ காமாட்சி அம்பாள் — Germany


யேர்மனி சுவெற்றா நகர் ஸ்ரீ கனகதுர்க்கா அம்பாள் — Germany


யேர்மனி டோட்முண்ட் ஸ்ரீ சாந்தநாயகி சமேத சந்திரமௌலீஸ்வரர் — Germany


லிவர்பூல் நகரில் ஸ்ரீ முத்துமாரி அம்மன் — Liverpool UK

அனைவருக்கும் எமது தொழிலாளர் தின வாழ்த்துகள் (May 1)



# தொலைத்த இடத்தில் தேடுதல்-1

பேராசிரியர் சந்திரசேகரன் நினைவு விழா குழுவினரே அவையோரே அனைவருக்கும் வணக்கம்.நண்பரும் தோழருமான சந்திர சேகரன் மறைந்து இரண்டு வருடங்கள் ஆகிவிட்டன. 1960களில் நடுப்பகுதியி லேயே நானும் அவரும் முன் பின்னாகப் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பயின்றோம். என்னைவிட மூன்று வருடங்கள் இளையவர். இப்போது நினைக்கையில் எனக்கு அவருடைய வாலிபக் காலத்துடுக்குத்தனமும். குபீர் எனச் சிரிப்பூட்ட கூடிய அவருடைய கருத்தாழம் மிக்க பகிடிகளுமே ஞாபகம் வருகின்றன்.

நண்பரையும் இப்போது. உணர்வு பூர்வமாக நினைவில் கொண்டு வருகிறேன். சந்திரசேகரன் மனதில் வியாபித்து நின்ற அந்தச் சாமானியரைப் பற்றித்தான் நான் இங்குஉரையாற்றவுள்ளேன். எனவே இதனைப் பழமையான கறாரான ஆய்வு முறையில் அன்றி வேறு ஒரு முறையில் எடுத்துரைக்கவுள்ளேன் அந்த முறை என்ன? சாதாரண கிராமிய மக்களிடம் வழங்கும் ஒரு கதை கூறல் முறை அது. அங்கொன்று இங்கு ஒன்றாக கதைகளைக் கூறி அதற்கு ஊடாக அவர்கள் ஒரு புது விஷயத்தை ஆழமான விஷயத்தைத்தருவார்கள். ஆழ்ந்த விடயங்களையும் எளிதாக கூறி விட வேண்டும் என்பது அவர்கள் பாணி. இந்த பாணி நான் அவர்களிடம் கற்றுக் கொண்ட பாணி. நான் இங்கு நான்கு கதைகள் கூறமுன் வந்துள்ளேன். முதலாவது கதை பின்வரும் மூன்று கதைகளுக்குமான ஒரு முன்னுரையாக அமைகிறது.

## தொலைத்த இடத்தில் தேடுதல்-2

முதலாவது கதைஒரு முட்டாள் கணவனும் அவனுக்கு வாய்த்த புத்திசாலி மனைவியும் ஆம் இது ஒரு முட்டாள் கணவனதும் புத்திசாலி மனை வியதும் கதையாகும். ஒரு முட்டாள்கணவன் தனது விலை மதிப்பு அற்ற மோதிரம் ஒன்றைத் தொலைத்து விட்டான். தேடிதேடிப் பார்த்தான் அது கிடைக்கவே இல்லை. எனினும் அவன் தேடுதலை நிறுத்த வில்லை .பகல் இரவு எல்லாம் தேடினான். ஊஹூம் கிடைக்கவே இல்லை! எனினும் அவன் தன்முயற்சியைக் கைவி டவில்லை. அவனுடைய தேடுதல் அதிகமாக இரவு நேரத்தில் தான் நடந்தது.

அப்போதுதான் அவனுக்கு ஓய்வும் கிடைத்தது. அவனுடைய வீட்டில் முன்னால் இருந்த கம்பத்திலே மின்சார விளக்கு இரவில் பிரகாசமாக ஒளியை உமிழ்ந்தபடி இருக்கும்.

வழமை போல ஒரு நாள் அவன் அந்த மின்கம்ப வெளிச்சத்தின் ஒளியில் தீவிரமாகத் தான் தொலைத்த மோதிரத்தைத் தேடிக் கொண்டிருந்தான். தேடித் தேடித் தேடியும் மோதிரம் கிடைக்கவேயில்லை, அவனோ மிகவும் சோர்ந்து விட்டான்.





பேராசிரியர் சி.மௌனகுரு

அவனது மனைவி மகா புத்திசாலி வெளியே வந்தாள். அவன். நிலை கண்டாள். அவன் தேடும் தீவிரத்தையும் புரிந்து கொண்டாள்."அது சரி மோதிரத்தை எங்கே தொலைத்தீர்கள் ஞாபகம் உண்டா?" எனக் கேட்டாள் சிறிது நேரம் யோசித்த அவன் "ஆம் அந்த மோதிரத்தை வீட்டுக்குள் தான் தொலைத்து இருக்க வேண்டும் இப்போது தான் ஞாபகம்வருகிறது'என்றான்."தொலைத்த இடத்தில் தானே தேட வேண்டும் அங்கு சென்று தேடலாம் தானே" என்று சிரித்துக் கொண்டே கூறினாள் மனைவி. மனைவியை ஒரு கேலிச்சிரிப்போடு பார்த்த அவன் 'வெங்காயமே!! வீட்டுக்குள் நன்றாகப் பார் ஒரே இருட்டாக இருக்கிறது பார்த்தாயா, இங்கு தானே. வெளிச்சம் பிரகாசமாக இருக்கிறது. இருட்டுக்குள் பொருள் தெரியுமா?இருட்டுக்குள் யாரும் தேடு வார்களா?" என்று மனைவியை பார்த்து மேலும் நகைத்த அவன் 'வா இருவரும் தேடுவோம்' என்று வேறு மனைவியைத் துணைக்கும் இழுத்தான். அவ்ளோ இவன் முட்டாள்தனத்தைப் பார்த்ச் சிரியோ சிரி என்று மனதுக்குள் சிரித்தாள். இவன் தேடிக்கொண்டே இருந்தான் இந்தக் கதையின் சாரம் என்ன?

1.இழந்துபோன ஒரும் பொருளைத் தேட வேண்டுமானால் முதலில் அதனைத் தொலைத்த இடத்திலேதான் தேடவேண்டும்

2.வெளிச்சத்தில் மாத்திரமே பொருள் இருக்கும் என்ற பொதுக்கட்டமைப்புக்குள்இருந்து வெளியே வந்து இருட்டினிலும் பொருள் தெரியும் என்ற மாற்றுக் கருத்தையும் ஏற்க வேண்டும்.

3.இதன் செய்தி யாதெனில் ஆய்வாளர்கள் முக்கியமாக வரலாற்று ஆய்வாளர்கள்பண்பாட்டு ஆய்வாளர்கள் அரசியல் விஞ்ஞான ஆய்வாளர்கள் தொலைத்து விட்டஇடத்தில் தேடும் மனப்பக்குவத்தை முதலில் பெற வேண்டும்

4.இதன் சாரத்தை இன்றைய எமது ஆய்வுகளுக்கும்,

30 ஆம் பக்கம் பார்க்க...



# கொஞ்சம் நான், கொஞ்சம் கலை

நாட்டியமும் நடனமும் என் வாழ்வில் முக்கிய பங்கு வகிக்கும் என்று நான் சில வருடங்களிற்கு முன்புவரை நினைத்திருக்கவில்லை. எனது 17வது வயதிற் தான் முறையாக நாட்டியம் கற்கத் தொடங்கினேன். பரதநாட்டியம் கற்பதிற் பயனில்லை. நாட்டியக்கலை மதம் சார்ந்த சடங்குகளாகவே இருக்கிறது என்பதால் வீட்டில் மாமாக்களுக்கு நாட்டியத்தில் அத்தனை ஈர்ப்பு இருக்கவில்லை. கராத்தே கற்றுக் கொடுத்தாற் கூட பயனுண்டு என்ற வாதமும் உரையாடலும் வீட்டில் நடைபெற்றது.

நான் நாட்டியம் கற்றது எனது தனிப்பட்ட விருப்பின் பேரிலேயே.

மாமாக்கள் இடதுசாரி சிந்தனை வாதிகள். அம்மா கொஞ்சம் எனது பக்கம் நின்றார். கற்கத் தொடங்கி மூன்று வருடங்களிலேயே அரங்கேற்றம் நடாத்த எனது ஆசிரியர் முன்வந்தார். நான்காவது வருடமே எனது சார்பில் நடனக்கலைக்கூடம் ஒன்றும் தொடங்கியாயிற்று. கலைக்கூடம் தொடங்குவதில் எனக்கு ஆர்வம் இருக்கவில்லை. அது அம்மாவின் வேண்டுகோள்.

மாமாக்கள் அப்போதும் எனது நாட்டிய அரங்கேற்றத்தாலோ,எனது கலைக்கூடத்தாலோ ஒன்றும் பெருமிதப்பட்டு விடவில்லை. கிண்டலும் கேலியும் வீட்டில் நடக்கும்.

அரங்கேற்றத்தில், - பரத நர்த்தகி, நாட்டியக் கலாமயூரம், நாட்டியக் கலாஜோதி போன்ற பட்டங்கள் எனக்கு அளிக்கப்பட்டன. கலாவித்துவான்களின் காலில் விழுந்து பெற்ற பட்டங்கள் தானே என்ற கிண்டல்தான் வீட்டிலிருந்து வந்தன. அந்தப் பட்டங்கள் எதனையும் நான் பயன்படுத்துவதுமில்லை, எனது அறிதலுக்கு உட்பட்டு எவரையும் பயன்படுத்த அனுமதிப்பதுமில்லை.

அரங்கேற்றம் நடந்ததையிட்டும் யாரும் வீட்டில் அலட்டிக்கொள்ளவில்லை. அம்மாவுக்குக் கொஞ்சம் பெருமை. அது அப்பா இல்லாமல் தான் தனியே மகளுக்கு அரங்கேற்றம் செய்ததில் வந்த பெருமிதம்.

ஓரிரு வார்த்தைகள்தான் எனினும் வீட்டிலில் இருந்து வந்த கிண்டல்கள் என்னை சிந்திக்க வைத்தன. காலில் விழுந்து தொழுதல் ஏன் என்ற விடயத்தைப் பற்றிக் கொஞ்சம் தேடத் தொடங்கியிருந்தேன். கால் தொழுதல் பற்றித் தேடி அறிந்த விடயங்களின் பேரில் எந்தக் குழந்தைகளையும் எனது காலில் ஒருபோதும் விழவைப்பதில்லை என்ற முடிவுக்கு வந்துவிட்டிருந்தேன். அன்றிலிருந்து நானும் யார் காலிலும் விழுவதில்லை.

சின்னச் சின்னப் பட்டாம் பூச்சிகளைப் போல இருக்கும் குழந்தைகளைக் காலில் விழ வைப்பதுதான் எத்தகைய மனநிலை? இம்மனநிலை எங்கிருந்து வருகிறது.



உண்மையில் அது குழந்தைகளுக்கு எதைக் கற்றுக் கொடுக்கிறது? கற்றதைத் தக்கபடி எடுத்துச்செல்வதுதானே ஆசிரியர்களுக்கு மனத்திருப்தி கொடுக்கும் விடயமாக இருக்கமுடியும்.



கவிதா லட்சுமி
(நோர்வே)

நோர்வே மண்ணில் முதற் தலைமுறையினரே நடன நிகழ்ச்சிகளும், அரங்கேற்றங்களும் நடாத்தி வந்த காலத்தில், நடன நிகழ்வு ஒன்றினையும் அரங்கேற்றம் ஒன்றினையும் 2006ஆம் ஆண்டு எமது கலைக்கூடம் நடாத்தியது. இது இரண்டாம் தலைமுறையின் முதல் முயற்சியாகும்.

நாட்டிய நிகழ்வுகள் எப்போதும் கடவுளரின் புராண இதிகாசக் கதைகளும் பக்தி மார்க்கங்களும் அச்சுப்பிசகின்றி மேடைகளை வலம் வந்து கொண்டிருந்த நிலையில் எமது முதலாவது அரங்கேற்றம்– ‘போதும் இந்தப் பூமியிலே போர்க்கோலம்‘ என்ற கருத்தை எடுத்துக் கையாண்டது. ‘கண்ணகி, கண்ணம்மா‘ என்ற இரு பாத்திரங்களுக்குமான உரையாடல் ஒன்று நடன நாடகமாகவும் எழுதப்பட்டு நிகழ்த்தப்பட்டது.

சடங்குகளைப் போர்த்திக்கொண்டிருக்கும் நாட்டிய வடிவத்தை நான் ஒரு மொழி வடிவமாகப் பார்க்கத் தொடங்கினேன். வாசிப்பும் தேடலும் நாட்டியத்தின் மேல் இருந்த விருப்பும் புதிய படைப்புகளை நோக்கி என்னை நகர்த்தின.

## கலை - மொழி

நாட்டியத்திற்கு ஈராயிரம் ஆண்டுகளுக்கு மேலான வரலாறு இருக்கின்றது. இன்றைய பெரும்பான்மை நாட்டியக் கலைஞர்கள் ஏறத்தாழ நூறுவருட கால வரலாற்றில் இருந்தே நாட்டிய வரலாற்றைக் கணித்தும் உள்வாங்கியும் வைத்திருக்கின்றனர். பக்தி சார்ந்த சடங்குகளாகவும், புனிதம் என்ற போர்வைகளுக்குள்ளும், கூறியது கூறலே அதன் மரபாகவும் ஆகிவிட்ட நாட்டியத்திற்குப் பின்னால் அரசியல் உண்டு. வர்க்கப்பாகுபாடு உண்டு. நாட்டியம் சமபாதத்தில் உறைந்துவிட்ட கலைவடிவமாக இருப்பதும் துயரே.

நாட்டியத்தின் கருப்பொருளையும், கட்டுமானத்தையும் பிரித்தறிய முடியாத நிலைக்குள் சிக்குண்டு கிடப்பது ஒரு நூற்றாண்டுக் காலம்தான். அதன் பின்னணியும் வரலாறும் மிக நீண்டது. இக்கலை வடிவத்தை நான் ஒரு மொழி வடிவமாகவே பார்க்க விளைந்ததனால் கூறியது கூறல்களைக் கடந்து ஓர் இலக்கியப் படைப்பை உருவாக்குதல் போலவே நாட்டியம் செய்ய விளைந்தேன். பேசப்படாத பக்கங்களை நாட்டியத்தினூடு காண விளைந்தேன்.

புதிதாக, சுயமாக ஒன்றைக் உருவாக்காத ஒன்றில் இருந்து படைப்புகள் வருமா? கூறியது கூறல் படைப்பாகுமா? தேடலும், வாசிப்பும், கற்றுக்கொள்தலும் இன்றி படைப்புகள் சாத்தியமன்று. எமது காலங்களை கொடுத்தாக வேண்டும்.

### அதன் விளைவே இந்நடன நாடகங்கள்:

- ★ கண்ணகியும் கண்ணம்மாவும் – அறம் சார்ந்த உரையாடல்
- ★ குருசேத்திரம் – இன்றைய அரசியல்
- ★ பறை – ஒடுக்குமுறைகள், வர்க்கப் பாகுபாடும், கலைகளில் ஏற்றத்தாழ்வும்
- ★ சிற்பியின் நரகம் – கருத்திழந்து போன கடவுட் கோட்பாடும் , ஒரு கலைஞனின் துயரும்.
- ★ ஞானரதம் – ஐந்து வேறுபட்ட உலகங்களும், மனித மனமும்
- ★ உயிர்மிகும் ஓவியங்கள் – இரவி வர்மர் ஓவியத்தினூடாக இந்தியக் கலைமரபின் பல்வகைமையின் வெளிப்பாடு
- ★ சூர்ப்பணகை – சொல்லப்பாடாத கம்பனின் வரிகளும், பெண் நிலையும்: நிலைபெற்ற பாத்திரங்களின் மறுபக்கம்.

## தமிழ்ச் சமூகத்தில் கலைஞர்கள்

தமிழ்ச் சமூகத்தில் படைப்பாளியாய் இருப்பது அத்தனை சுலபமன்று. இரண்டாம் மூன்றாந்தரக் கலைகளைக் கொண்டாடும் சமூகமே பெரும்பான்மையினர். இசையை மட்டும் முதலீடாகக் கொண்ட திரையிசைப் பாடல்கள், பெண்ணுடலை

27 ஆம் பக்கம் பார்க்க...


















# கொஞ்சம் நான், கொஞ்சம் கலை

வியாபாரமாக்கிப் பொருளீட்டும் (பெரும்பான்மை) திரையுலகு. திரையுலகக் கலைஞர்களை வைத்து மக்களைத் திரட்டும் பொழுதுபோக்கு நிறுவனங்கள் என தமிழ்க் கலையுலகு மிகக் குறுகிய மனமுடையது.

வளர்முக நாடுகளில் பல விடயங்கள் சமாந்திரமாக நகர்ந்துகொண்டிருக்கின்றன. தமது நுண்கலைகளை ஊக்குவிக்கவும், நிகழ்த்தவும், பாதுகாக்கவும்,ஆய்வு செய்யவுமான அரசின் பங்களிப்பு அந்நாடுகளில் முதன்மை யானவை. அதே போலப் பொழுதுபோக்குக் கலைகள் போன்றவையும் கூட தேசிய அளவில், தொலைக்காட்சிகளில் தனது இடத்தைத் பிடித்திருக்கும். தனக்கென்று ஒரு நாட்டை தளமாகக்கொண்டு இயங்கும் கலைகளுக்கும், மொழிக்கும் இத்தகைய தொடர்ச்சியும் வளர்ச்சியும் சாத்தியப்படுபவை.

தனக்கென்று ஒரு அரசைக் கொண்டிராத தமிழ்ச் சமூகத்திற்கு வியாபார இலக்கற்ற கலைப்படைப்புளை நகர்த்திச் செல்வது சாத்தியமற்றது. வளர்முக நாடுகளிற் புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களுக்கு அந்த அரசின் சில வளங்கள் கிடைத்தாலும் அவை குறிப்பிட்ட சில கருப்பொருட்களுக்கே வழங்கப்படுகின்றன. அங்கும் அரசியல் உண்டு, எதை மக்கள் கலையாக்க வேண்டும் என்பதைப் பொறுத்தே வளங்களும் அளிக்கப்படுகின்றன. அந்தந்த நாட்டின் கொள்கைகள், பார்வைகள், கலைகண்ணோட்டங்கள் என்பவை சார்ந்தே புலம்பெயர் சமூகங்கள் பயணிக்க நிர்பந்திக்கப்பட்டுள்ளன. காலனியத்துவத்தின் இன்னொரு ஆதிக்க வடிவம் என்றே இந்நகர்வைப் பார்கக முடி கிறது.

தற்போதய காலங்களில் எமது சமூகத்திலும் யாரும் ஆழமான படைப்புகளைத் தேடுவதில்லை. விற்கப்படும் பொருட்களைத்தானே கடைகளும் இட்டு நிரப்பும். தமிழ் அமைப்புகளும், தனிநபர் நிறுவனங்களும் ஊக்குவிப்பதும் இத்தகைய விற்கத்தகுந்த மேலோட்டமான விடயங்களையே.

சொல்லப்போனால் திரையிசையும் திரைநடனமும் மட்டுமே புலம்பெயர் சமூகத்தின் பெருங்கலைவடிவங்களாக மாறியிருக்கின்றன.

தமிழ் அமைப்புகளின் கலையரங்கங்கள், தமிழர் விழாக்கள், தனிநபர் கொண்டாட்டங்கள் என்று அனைத்தும் ஒருவகையான மாதிரிகளாவே காணக் கிடைக்கின்றன. இணையத்தளங்களும் இதன் குறுகிய வடிவத்தையே ஊக்குவிக்கின்றன.

புலம்பெயர் நாடுகளில் அடுத்த தலைமுறைகளின் கல்வி மற்றும் தொழில் என்பவைகள் வளர்ச்சி அடைந்திருக்கின்றன. அடுத்தகட்ட நகர்வாகத் தமிழ்ச் சமூகம் செயலாற்றும் கலைவடிவங்கள் இரண்டு. ஒன்றுதிரையிசையும், திரை நடனமும். மற்றயது கொண்டாட்டங்களுக்கான ஆடை அலங்கார ஒப்பனைக் கலை. இயல் இசை நாடகம் தமிழர் கலை என்பர். இதில் இசை மட்டுமே கடத்தப்படுகிறது. அதுவும் திரையிசை மட்டுமே. இது புலம் பெயர் தமிழச் சமூகத்தின் பெருமிதமா? பெருந்துயரா?

அர்ப்பணிப்பும் ஆத்மார்த்தமான தேடலும் சமூக அக்கறையும் கொண்டு நகரும் நதிகளாக சில கலைஞர்களும் அமைப்புகளும் உண்டு. தளமோ, வளமோ அற்ற இந்நதிகளுக்கு தம் அகமே கடல்.







11 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## கருபிக் கடலில் 14 நாட்கள்

2023 ஆண்டு 50 வருட சுதந்திர தினம் கொண்டாடி இருந்தார்கள். கரீபியன் தீவுகளில் மிகச் சிறியது. சீனர்களின் வியாபாரம், ஓங்கி உள்ள தீவு. துறைமுகம் சூழலில் இந்திய வணிகம் நடைபெறுகிறது.

**ANTIQUE. 06.01.2024**

வருடத்தில் 10 பேர்தான் சிறைக்கு செல்கிறார்கள், வழமையாக 6 பேர் வரைதான் செல்வார்கள். சிறையில் ரி.வி இல்லை, பொழுது போக்கு இல்லை, அதனால் சிறையை விரும்ப மாட்டார்கள். அங்கு செல்வதும் குறைவு. வேலைக்கு மணித்தியாலம், சராசரி 4 டொலர் ஊதியம் பெறுகிறார்கள். கரேபியன் டொலர் 100 என ஒரு பொருளுக்கு போட்டு இருந்தால் உல்லாசப் பயணிகள் அமெரிக்கன் டொலர் 100 கொடுத்து வேண்டுபவரும் உண்டு. பல வணிகர்கள் உடன் திருப்பி கொடுப்பவர்களும் உண்டு.

**St. Martin 01.02.2024**

142 நாட்டவர்கள் இந்த நாட்டில் வாழ்கிறார்கள். டொச், பிரஞ் என இரு பிரிவுகளாக ஆள்கிறார்கள். பிரான்ஸ் பகுதியில் வாழ்பவர்கள் பிரான்ஸ் நாட்டுக்கு உரிய சலுகைகள் யாவும் பெறுகின்றனர். டெச் பகுதியில் வாழ்பவர்களுக்கு அவர்களை விட குறைவான சலுகைகள் கிடைக்கின்றன. இதனால் தனி நாடக இருக்கவேண்டும் என இளைஞர்கள் விரும்புகிறார்கள்.

பிரான்ஸ் பக்கம் பூவரசு. மரங்கள் எமது தாயகத்தில் வேலியாக இருப்பதுபோல் உள்ளன. முருங்கை மரங்கள் அதிகம் உண்டு. அதன் காய்களை நாம் பாவிப்பதுபோல் அன்றி அவித்து குடிப்பதாகவும், அதன் விதையை அவித்து சலாட் போடுவதாகவும் கூறுகின்றனர். கடல் ஓரம் பிக்கினி பீச். இங்கு அரை நிர்வாண குளியல் இடம் பெறுகிறது. அங்கு செல்பவர்கள் படம் எடுக்கமுடிடியாது. அதுமட்டுமல்ல, கடற்கரைக்குள் செல்பவர்களும் அவர்கள் போல் நிர்வாண நிலையில் மட்டுமே செல்ல முடியும். அடிப்படை கொள்கை உடன்பாடு அதுவாக இருக்குமோ. இப்படியான கடற்கரைகள் ஐரோப்பாவிலும் உண்டு. சீனர்கள் இங்கும் ஆழமாக வேர் ஊன்றி உள்ளனர்.சின்னச் தீவுகள் சுதந்திரம் பெற்ற நாடாக உள்ளன. மீன்பிடித் தொழிலும், விவசாயமும் மட்டுமே உண்டு. ஏன் எமது இலங்கை தீவு இப்படி உள்ளது என்ற கேள்வி எழாமல் இல்லை. இந்த ஒப்பீடு எப்போது எம்மோடு என்றும் உள்ளது அல்லவா. ■

08 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## ஒரு திரைப்படம் ஆரம்பிக்கும் முன்னர்

புற்றுநோய்க்கு முதல் காரணமாக இருப்பது புகையிலைதான். மனிதர்களின் உயிரைப் பறிப்பதில் இரண்டாம் இடம் வகிக்கிறது புகையிலைப் பயன்பாடு. புகைப்பவர்கள் பெரும்பாலும் சொல்வது, 'கொஞ்சம் கொஞ்சமாக விட்டுவிடுவேன்' என்பதுதான். ஒரு நிமிடத்துக்குள் ஆரம்பித்த புகைப்பழக்கத்தை ஒரே நொடியில் விட்டுவிட வைராக்கியம் தேவை.

அதுதான் சிகரெட்டிலிருந்து விடுபட முதல்படி. சிகரெட்டினால் சீரழிந்திருக்கும் நம்முடைய உடலை யோகா, நடைப்பயிற்சி, தியானம் போன்றவற்றின் மூலம் மீட்டு எடுக்கலாம். பொருளாதாரரீதியான பிரச்னைகளை ஓரளவுக்கு சமாளிக்கப் புகைப்பதை கைவிடுவதே சிறந்த வழி. ■

07 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## உளவதைத்

பாடசாலையில் உளவதை நிகழ்கி ன்றது என ஆசிரியர்களுக்கு அறியத் தரும் போது அதற்கான சரியான தீர்வை ஆசிரியர்களோ நிர்வாகமோ ஏற்படுத்தாத போது, அதற்காக அழுத்தம் கொடுக்கும் கடமை பெற்றோர்களுக்கானது. கூடவே தன் குழந்தைக்குப் பாதகமான விளைவு ஏற்படும் போது எந்த எல்லைக்கும் இழுக்கக் கூடியவர்கள் இந்தப் பெற்றோர் என்ற எண்ணம் பாடசாலை நிர்வாகத்தின் பதிவில் இருக்கும்படி பார்த்துக் கொள்ளல் எம் குழந்தைக்கான பாதுகாப்புகளில் ஒன்று.

துரதிர்ஷ்ட வசமாக வெள்ளையின நிர்வாகங்களுக்கு முடிந்த வரை. முகங் கொடுக்கப் பின்னிற்கும் மனோநிலையிலும், அப்படியே அவர்கள் அழைப்புகளை ஏற்றுச் சமூகமளித்தாலும் அவர்கள் கூறுவதற்குத் தலையாட்டு பவர்க்களுமாகவே எம்மவர்கள் பலர் இருக்கிறார்கள்.



இங்கும் மொழியறிவும் தெளிவின்மையும் அவசியமற்ற பணிவுமே அதிகமாக ஆட்சி செய்வதால் சமாதானங்களால் அவர்கள் எங்கள் குற்றச் சாட்டுகளைத் துடைத்து விட்டு தம் நிர்வாகங்கள் மீது படரும் கருமையை மறைத்துக் கொள்கிறார்கள்.

குழந்தைகளின் இப்படியான உளவியற் பிரச்சனைகள் பற்றிப் பேசுகையில் பாடசாலையில் உளவாற்றுகை வசதி உண்டு என்ற அவர்கள் கூறும் மேலோட்டமான பசப்பல்களை நம்பி விடுகிறோம்.அதே நேரத்தில் குழந்தையின் உண்மையான பிரச்சனைக்குத் தீர்வு கண்டு விட்ட தாகவும் எண்ணிக் கொள்கிறோம்

சமூகம் கொடுக்கும் அழுத்தங்களுக்கு மன உளைச்சல் இன்றி இலகுவில் தீர்வு கண்டு விட முடியாது. என்பதை வாழ்க்கை எமக்குக் கற்றுக் கொடுத்திருக்கும் அனுபவங்களிலிருந்து பிள்ளைகளுக்கு வாழக் கற்றுக் கொடுத்தல் வளர்ப்பின் ஒரு பகுதி என்பதை உணர்ந்தோமானால், அவர்கள் மனம் திறந்து பேசும் பெற்றோராக, அவர்களைப் புரிந்து கொள்வது எவ்வளவு தூரம் எம் கடமையோ அதேயளவு முக்கியமானது சமூகம் பற்றிப் பிள்ளைகளுக்குப் புரிய வைத்தாலும்.

பிள்ளையின் சூழலை அது ஏற்படுத்தும் அழுத்தங்களை மாற்ற முயன்றோமானால் வாழ்வின் ஒவ்வொரு பகுதியிலும் சூழலில் தாக்கத்துக்குப் பயந்து ஓடிக்கொண்டே இருக்க வேண்டும்.. ஆனால் பிள்ளைகளின் மனதைச் சூழலியள் சமூகத் தாக்குதல்களுக்கு முகம் கொடுக்கும் நிலைக்குத் தயார்ப்படுத்தி வைத்தோமானால் அந்த வாழ்முறை குழந்தைக்குப் பலமான மனத்தளத்தை உருவாக்கும்.

நாய் குரைக்கிறதா அதற்கெனக் கல்லெடுத்து எறியும் நேரம் கூடச் செலவு செய்யாமல் உன் பாட்டில் போ. குரைக்கும் அதன் குணத்தை மாற்ற முடியாது என்பது எவ்வளவு நிச்சயமோ அதேயளவு நிச்சயம் உன் மன உறுதியை எவராலும் குலைக்க முடியாது. என உறுதியாக நம்ப வைத்து விட்டால்..... பதின்மம் கடந்து விட்டால் போதும் இந்த வாழ்வின் அனர்த்தங்களுக்கு முகங்கொடுக்கும் கலையைக் கற்றுக் கொள்ளத் தொடங்கி விடுவார்கள். ■

05 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## மனதை வேடிக்கை மட்டும்

'நீ தைவானில் தனியாக வாழ்வது குறித்து மகிழ்ச்சி' இந்த வாக்கியத்தில் எங்கள் நட்பின் ஆழத்தை என்னால் உணர முடிந்தது. அது வரை என் பத்து வருடத் தனிமை வாழ்க்கையில் பலரின் வருத்தங்களையும், பரிதாபங்களையும், ஆலோசனைகளையும் மட்டுமே நான் கேட்டிருக்கிறேன். யாரும் மகிழ்ச்சியைத் தெரிவித்ததில்லை. என்னை ஆழத்தில் புரிந்து கொண்ட ஒரு மனதால் மட்டுமே அதைச் சொல்ல முடியும் என்று நினைக்கிறேன்.

பலர் வாழ்க்கையை/இந்த உலகத்தை நியாயமற்றது என்று கூறுவதைப் பலமுறை கேட்டிருக்கிறேன். ஆனால் நான் இந்த பிரபஞ்சத்தை, வாழ்க்கையை நியாயமுள்ளதாகவே பார்க்கிறேன். இந்த பிரபஞ்சம் எந்த ஒரு தனி மனிதனுக்காகவோ, உயிரினத்திற்காகவோ, வஸ்துவிற்காகவோ பிரத்தியேகமாகத் தனிப்பயனாக்கப்பட்ட வடிவமைப்பு அல்ல. மாறாக அது ஒரு பொதுவுடைமைச் சுரங்கம். ஆனால் அதிலிருக்கும் மிகப்பெரிய நியாயம், எல்லாவற்றிற்கும் வடிவமைக்கப்பட்ட அறிவு. ஆம் அதற்கு, அவரவர்க்குத் தேவையானவற்றை மட்டும் தேடி எடுத்துக்கொள்ளும், இணைத்துக்கொள்ளும் அறிவு. இந்த வடிவமைப்பை எப்படி நியாயமற்றது என்று சொல்ல முடியும்?அது போல அன்பு என்பது தொடர் முயற்சி நான் அதற்காக முயன்று கொண்டே இருப்பேன்!

இன்றும் நட்பு என்று எண்ணி ஏமாற்றத்தைத் தழுவிக்கொள்ளும்போதெல்லாம் ஆனந்தை நினைத்துக்கொள்கிறேன். இன்று அவன் இருந்தால் என்ன சொல்லியிருப்பான்? என்ற கேள்விக்குள் மூழ்கிப் போகிறேன். ஒருவேளை, "மனதை வேடிக்கை மட்டும் பார்க்கவிட்டு விட்டு நட. நாளை வேறு காட்சி, வேறு புரிதல், வேறு கேள்வி, வேறு ஏமாற்றம்" என்று சொல்லியிருப்பானோ? இப்பதிவுடன் அவன் புகைப்படத்தையும் பகிர ஆசை-தான். ஆனால் இல்லை. அவன் முகம் எப்படியிருக்கும் என்று கூட எனக்குத் தெரியாது. ஆனாலும் 'தனி மனிதன்' என்ற சொல்லில் எனக்கு நம்பிக்கையில்லை. எந்த ஒரு மனிதனும் பல மனிதர்களின் சிந்தனையின், உணர்வுகளின், ஞாபகங்களின் தொகுப்பு என்றே நம்புகிறேன். எனவே கீழேயுள்ள என் புகைப்படத்தில் எனக்குள் இருக்கும் ஆனந்தையே நான் இக்கணம் பார்க்கிறேன்.

நட்பென்னும் நாடாச் சிறப்பு!! ■









அனைவருக்கும் எமது தொழிலாளர் தின வாழ்த்துகள் (May 1)



வெற்றி மைந்தன்

# தொழிலாளர் தினம்
# விடுமுறைகள் அர்த்தம் தெரியாமலே கழிந்துபோகின்றன!

மே தின விடுமுறையில் இரண்டு நண்பர்கள் நீண்ட நாட்களுக்குப் பிறகு சந்தித்துக் கொண்டால் என்ன பேசுவார்கள் ?

“டேய் மச்சி.. எப்படிடா இருக்கே ?“ என்பது முதல் கேள்வி. “என்னடா பண்றே“ என்பது இரண்டாவது கேள்வி.

இந்த இரண்டு கேள்விகளைத் தாண்டித் தான் பெரும்பாலான உரையாடல்கள் அடுத்த கட்டத்துக்குச் செல்லும்.

“உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் வீணில் உண்டு களித்திருப் போரை நிந்தனை செய்வோம்“ என்றார் பாரதியார்.

நமக்கு தொழில் என்பது வருமானத்தை ஈட்டும் ஒரு விஷயம் மட்டுமல்ல. அது நமது அங்கீகாரம். நமது வாழ்வின் ஒரு அடையாளம். வேலையில்லாமல் இருப்பது என்பது நமது பொருளாதாரத்தோடு மட்டும் சம்பந்தப் பட்டதல்ல, அது நமது சுயத்தையும் சார்ந்தது.

இது இன்று நேற்று தொடங்கியதல்ல. தானே ஒரு தொழிலாளியாய் மாறி உலகத்தை உருவாக்கினார் கடவுள். ஆதாமைப் படைத்து சர்வமும் நிரம்பியிருந்த ஏதேன் தோட்டத்தில் வைத்தவர், கூடவே “இந்தத் தோட்டத்தைப் பண்படுத்தவும், பாதுகாக்கவும் வேண்டும்“ என ஒரு கட்டளையையும் கொடுத்தார். உழைப்பின் தேவை கடவுளிடமிருந்து ஒரு கட்டளையாகவே மனிதனுக்கு வந்தது. இயேசுவும் தனது இளமைக் காலத்தில் ஒரு தச்சுத் தொழிலாளியாக பணியாற்றினார்.

இந்து மதமும் உழைப்பின் மகிமையைப் பேசுகிறது. இறைவனே இங்கு விஸ்வகர்மா எனும் முதல் தொழிலாளியாக பரிமளிக்கிறார். “உழைத்து உண்ணும் உணவே நீங்கள் சாப்பிடுகின்ற உணவில் மிகச் சிறந்ததாகும்“ என்றார் நபிகள் நாயகம். இப்படி உழைப்பு என்பது ஆன்மீகம் சார்ந்த ஒரு பரிணாமத்தையும் பெற்று விடுகிறது.

உழைப்பு தான் உலகின் வளர்ச்சியை நிர்ணயிக்கிறது. ‘உழைக்காதவன் உண்ணலாகாது‘ என்பதன் காரணம், உழைப்பு என்பது நமது கடமையாய் மாற வேண்டும் என்பது தான். நாம் பயன்படுத்துகின்ற ஒவ்வொரு பொருளுக்குப் பின்னாலும் தொழிலாளிகளில் வியர்வையும், கலையும், பெருமூச்சும், கண்ணீரும் கலந்திருக்கிறது.

ஒரு தொழிலாளி சிரிக்கும் போது இறைவன் சிரிக்கிறார். ஒரு தொழிலாளி கண்ணீர் விடும்போது அவர் கண்ணீர் விடுகிறார். தொழிலாளிகளின் வியர்வையைச் சுரண்டி அதில் மெத்தை அமைத்துத் தூங்கும் ஏகாதிபத்ய சிந்தனைகளை எதிர்த்து நின்ற வரலாறு ஏராளம் உண்டு. அந்த எதிர்ப்புகளின் நினைவலைகள் தான் தொழிலாளர் தினமாக மிளிர்கிறது.

ஒரு நாளை மூன்றாகப் பிரியுங்கள். ஒரு எட்டில் உழையுங்கள். ஒரு எட்டில் ஆனந்தமாய் இருங்கள். ஒரு எட்டில் நிம்மதியாய் உறங்குங்கள். இது தான் ‘வேலை வாழ்க்கை சமநிலை‘ பேணும் ஒரு நல்ல முறை. ஆனால் தொழிலாளர்களோ







12 முதல் 20 மணி நேரம் வரை கடுமையாக உழைத்து, களைத்து, போதிய வருமானமும் இல்லாமல் ஆனந்தத்தையும், உறக்கத்தையும் தொலைத்து வாழ்ந்தார்கள்.

1806ம் ஆண்டு இந்த நசுக்குதலுக்கு எதிரான முதல் குரல் அமெரிக்காவில் ஒலித்தது. ஒலித்த குரல்களில் குரல்வளைகள் நெரிக்கப்பட்டன. ஆனாலும் நீறு பூத்த நெருப்பு போல குரல்கள் வலுவடைந்தன. 1837ல் அமெரிக்காவில் ஒரு சட்டம் இயற்றினார்கள். இனிமேல் பத்து மணி நேரம் தான் வேலை. ஆனால் அது அரசுப் பணியாளர்களுக்கு மட்டும் என அந்த அறிவிப்பு பிரகடனம் செய்தது. மற்றவர்கள் உதாசீனம் செய்யப்பட்டார்கள். 1956ம் ஆண்டில் தான் ஒட்டுமொத்த தொழிலாளர்களுக்கும் விடியல் கிடைத்தது. அந்த தினம் மே1! தொழிலாளர் தினம் !!

வியர்வையும், ரத்தமும், கண்ணீரும் கலந்த வரலாறு தொழிலாளர் தினத்துக்கு உண்டு. ஆனால் இன்று பெரும்பாலும் இந்த தினம் மறக்கப்பட்ட ஒரு தினமாக மாறி விட்டது. “தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள்“ என மீண்டும் ஒரு குரல் ஒலிக்க வேண்டிய தேவை இன்று உண்டு.

முதலாளிகளின் கார்களுக்குக் கீழே கம்பளம் விரிக்கும் இன்றைய நிறுவனங்களும், ஊடகங்களும், அரசியல் தலைவர்களும் ஏழைகளின் நலனையோ தொழிலாளர்களின் நலனையோ கருத்தில் கொள்வதில்லை. ஆலைத் தொழிலாளி அழிந்தால் என்ன நான் ஆஸ்திரேலியாவிலிருந்து ஆடையை இறக்குமதி செய்வேன் எனும் சிந்தனை தான் அவர்களுக்கு.

விவசாயி பட்டினியின் ஆடையை உடுத்திக் கொண்டு, எலிகளைத் தின்று வாழ்க்கை நடத்துகையில், பணப் பெருச்சாளிகளின் பாக்கெட்களில் அரசாங்கம் இளைப்பாறுகிறது. கிரிக்கெட் வீரர்களின் ஏழாவது காதலிக்குக் கிடைக்கும் முக்கியத்துவத்தில் ஆயிரத்தில் ஒரு பங்கு கூட பட்டினியால் தற்கொலை செய்து கொள்ளும் விவசாயியின் உயிருக்குக் கிடைப்பதில்லை.

ஏதோ ஒருவயலில் உழைத்து கண்ணீர் பாசனம் செய்து நெல் விளைவிக்கும் விவசாயி நமது சகோதரன் எனும் எண்ணம் நமக்கு வரவேண்டும்.

காய்கறி விலை ரொம்ப ரொம்ப மலிவு என குதூகலிக்கும் போது, ‘ஐயோ ஆண்டு முழுவதும் இதை பயிரிட்ட உழைப்பாளியின் வீட்டில் ஏதேனும் மிஞ்சியிருக்குமா ? அவனுக்கு கொள்முதல் விலையால் ஏதேனும் பயன் கிடைத்திருக்குமா ?“ எனும் பதட்டம் வரவேண்டும்.

ஒரு தொழிலாளியின் குடும்பம் பட்டினியால் வாடும் போது நமது உணவு தொண்டைக் குழியில் ஒரு நங்கூரம் போல கனக்க வேண்டும். ஏனென்றால் தொழிலாளர்கள் என்பவர்கள் நம் உயிரின் நீட்சி, இந்த புவியின் மாட்சி.

தொழிலாளர்களுக்குத் தோள் கொடுக்க வேண்டாம். இதயங்களைக் கொடுப்போம்.

தாயகத்தில்... வவுனியாவில் அமைந்துள்ள
“பண்டாரவன்னியன் புத்தகசாலையில்”
ஈழத்துப் புத்தகங்களை நீங்கள் பெறமுடியும்.




தொடர்புகளுக்கு:
பண்டாரவன்னியன் புத்தகசாலை
வவுனியா, இலங்கை
+94772244616
youtube@akkakuruvi

இது வெற்றிமணியின் ஒரு இலவச விளம்பரம். நம் இளைஞர்கள் முயற்சிக்கு கைகொடுப்போம்!

25 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## தொலைத்த இடத்தில்

விசேடமாக புற்றீசல் போல இன்று புறப்பட்டிருக்கும் சில பல்கலைக்கழக ஆய்வுகளுக்கும் பொருத்திப் பார்த்து விட்டு அடுத்த மூன்று கதைகளுக்கும் செல்வோம்.

அதற்கு முதல். தொலைத்த இடத்தில் தேட நான் சில ஆலோசனைகள் சொல்வேன் இவ்ஆலோசனைகள் ஆய்வு லகில் நான் கற்றவை அத்தோடு அனுபவங்கள் மூலம் பெற்றவை வரலாற்று பண்பாட்டு ஆய்வுகள் செய்யும் முறை.

1,ஆய்வுகள் செய்ய முதலில் பிரச்சனை களை இனம் காண வேண்டும்

2, பிரச்சனைகளை முழுமையாக அறிய சரியான தரவுகளைப் பெற வேண்டும்

3. முற் கற்பிதத்தோடு தரவுகளைத் தேடக் கூடாது

4.தரவுகள் சேகரிக்கும் போது கிணறு வெட்டப் பூதங்களும் புறப்படும்

5,பூதங்கள் புறப்படுகிறதே எனப்பயந்து வெட்டும் செயலை நிறுத்தி விடக் கூடாது

6.பூதங்களைப் புரிந்து கொள்ளவும் அவற்றோடு உரையாடும் மனப்பக்குவம் பெற வேண்டும் அந்த திறனையும் பெற வேண்டும்

7.பொதுவான தேடலில் முதலில் எல்லோருக்கும் பொதுவான தரவுகளே கிடைக்கும். அத்தரவுகளை நோக்கி வினாக்கள் எழுப்பத் தெரிந்திருக்க வேண்டும்,

8. நீங்கள் கேட்கும் வினாக்களுக்கு ஏற்பவே தரவுகள் விடை கூறும்

9.ஆய்வாளர்கள், விசேடமாகபபண்பாட்டு ஆய்வாளர்கள் பல்துறைப் பரிச்சியமுடையவர்களாக இருக்க வேண்டும்

10..இந்தப் பல்துறை ஆய்வுப் பரிச்சியம் அல்லது அணுகுமுறை (Multi Disciplinary approach) ஆய்வாளரை ஆழமான கேள்விகள் கேட்க வைக்கும்.

11விடைகளின் நம்பகத்தன்மையை அதன் பின் பல்வேறு முறைகளில் பரிசீலிக்க வேண்டும்.

12.இந்த ஒழுங்கு முறை ஒரு நம்பகமான ஆய்வுக்கு உதவி புரியும்.

இப்போது நான் முன்னரே அறிமுகப்படுத்திய குட்டிக்கதையின் பின்னணியிலும் பின்னால் சொன்ன ஆய்வுக் கோட்பாடுகளின் பின்னணியிலும் கதைகளை முதலில் நான் உங்களுக்கு அறிமுகம் செய்கிறேன்.பின்னால் அந்தக் கதைகளின் பின் அமைந்துள்ள உண்மைகளைக் காண்போம். இவை கதைகள்தான் ஆனால் கற்பனைகள் அல்ல, இட்டுக் கட்டியவையும் அல்ல. நான் நேரிலே கண்டவை, கண்டு அனுபவித்தவை, இருட்டுக்குள் நாம்தொலைத்து விட்டவை,இன்னும் வெளிச்சம் படாதவை. இன்னும் வரும்.

15 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## ஈழவூர்- பூநகரியில் யாரும்...

சுரங்கப்பணியகம் ஈடுபட்டுள்ளது. இதற்காக பொன்னாவெளியில் உள்ள தனியார் வயல் நிலங்களில் ஆழ்துளைக் கிணறுகள் தோண்டப்பட்டு ஆராட்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இப் பரிசோதனைக்கென தோண்டப்படுகின்ற கிணறுகளில் இருந்து வெளியேற்றப்படுகின்ற உவர்நீர் பொறுப்பற்ற முறையில் வயல் நிலங்களிற்குள் பாய்ச்சப்படுகின்றது. முறையற்ற இச் செயற்பாட்டின் காரணமாக ஏற்கனவே பாதிப்புக்களை எதிர்நோக்கி வருகின்ற விவசாயிகள் மேலும் பாதிக்கப்படுவதாக விசனம் தெரிவிக்கின்றனர். அத்தோடு இவை தொடர்பாக உரிய திணைக்களங்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகளைத் தொடர்பு கொண்டபோதிலும் எவ்வித முயற்சியும் பயனளிக்கவில்லை எனவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.



### நிலைபேண் அபிவிருத்தியின் அவசியம்

அபிவிருத்தி செயற்பாடுகளின் மூலமாக கிட்டுகின்ற நன்மைகள் கிராமிய மக்களின் வாழ்வாதாரத்தை சிதைத்து அழிக்கின்ற வகையில் நிகழக்கூடாது. அவ்வகையில் நிகழ்கின்ற அபிவிருத்தி செயற்திட்டங்கள் நிலைபேண் அபிவிருத்தியாகவும் கொள்ளப்பட முடியாதவை. ஆகஇ ஈழவூரில் அமைப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ள சீமெந்துத் தொழிற்சாலை அங்கு அமைக்கப்படுமாக இருந்தால் அப்பிரதேச மக்களுக்குக் கிடைக்கக் கூடிய வேலை வாய்ப்பினைவிட ஏற்படக்கூடிய எதிர்மறை விளைவுகள் அதிகமாகும். தொழிற்சாலையில் இருந்து வெளிவிடப்படுகின்ற தூசுக்களின் காரணமாக வளி மாசுபட்டு சுவாசம் சார்ந்த அனர்த்தங்களை சுற்றுவட்டத்தில் வாழ்கின்ற கிராம மக்கள் எதிர்கொள்ள நேரிடும். அத்தோடு பொன்னாவெளியில் அகழப்படப் போகின்ற சுண்ணக் கல்லின் காரணமாக அக் கிராம மக்கள் தமது பூர்வீக வயல் நிலங்களை இழக்க நேரிடும். அதுமட்டுமன்றி குறித்த பிரதேசம் கடலிற்கு அண்மையில் அமைந்திருப்பதன் காரணமாக கடல் நீர் உட்புகுந்து தரைக்கீழ் நீரோடு கலப்பதற்கான வாய்ப்புக்களும் மிக மிக அதிகமாக காணப்படுகின்றன.

அகழப்படுகின்ற சுண்ணக்கற்கள் போக, எஞ்சிய நிலத்தில் பாரிய இராட்சதக் குழிகள் ஏற்பட்டு, அப்பிரதேசமே தன்நிலை இழந்து, முற்றாக அழிந்துபோவது மட்டுமன்றி பொன்னாவெளிக்கு அருகிலுள்ள ஈழவூரின் தரைக்கீழ் நீர்வளத்திலும் மாற்றங்களை நிகழ்த்தக்கூடும். பொதுவாக, இவ்வாறான தொழிற்சாலைகளை அமைப்பதற்கான சுற்றுச்சூழல் அறிக்கைகள் சமர்ப்பிக்கப் படுகிறபோது மக்கள் கருத்திற்காக குறிப்பிட்ட காலம் சுற்றுச்சூழல் திணைக்களத்தின் இணையத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கும். அக்காலத்தில் குறித்த பிரதேசத்திற்குரிய மக்கள் பிரதிநிதிகள் கவனமெடுத்து இத்திட்டம் தொடர்பில் மீள் பரிசீலனை செய்ய வேண்டும் என்பது மக்கள் நலனிற்கான வேண்டுகோளாகும்.

ஈழத்தமிழர்களது இருப்பின் அடையாளங்கள் மெல்ல மெல்ல அழிக்கப்பட்டு வருகின்ற நிலையில் இவ்வாறான அகழ்வுகள் குறித்த பிரதேசத்தின் தொல்லியல் இருப்பினை சிதைத்து அழிப்பது மட்டுமன்றி அர்த்தமற்றதாக்கிவிடும்.

வரலாற்றின் பக்கங்களில் பாதுகாத்து வைக்கப்படவேண்டிய அடையாளக் கிராமங்களாகிய ஈழவூரையும் பொன்னாவெளியையும் பாதுகாக்க வேண்டியது நம் ஒவ்வொருவரினதும் தார்மீகக் கடமையாகும். இவ் அடிப்படையில் அவர் செய்வார் இவர் செய்வார் என்று காத்திருக்காமல் நமது நிலங்களில் இருக்கின்ற வரலாற்று மற்றும் தொல்லியல் அடையாளங்களை நாமே பாதுகாப்பதற்குரிய முயற்சிகளில் இறங்க வேண்டும். அதுவே எதிர்காலத்தில் நம் இருப்பின் கதைகளை பேசுவதற்கு ஏதுவானதாகவும் அமையும்.






அனைவருக்கும் எமது தொழிலாளர் தின வாழ்த்துகள் (May 1)

சினிமா



# 'கண்ணகி' திரைப்படத்தை முன்வைத்து

கவிதா லட்சுமி
(நோர்வே)

கண்ணகி கவனம் பெறவேண்டிய திரைப்படம்! சேர்ந்து வாழுதலில் இருக்கும் ஒருவன் தன் காதலியிடம் ஒரு மோதிரத்தைக் கொடுத்து, மணம் புரியக் கேட்கிறான். வேண்டாம் என்றால் மறுத்து விட்டு நகர்வதுதானே பண்பு.

அதைவிடுத்து மோதிரத்தைக் காலால் உதைத்து வீழ்த்தி ஒரு குத்தாட்டம் போட்டு ஒருவனை அவமதிப்பது என்ன மன நிலை? திருமணம் செய்யக் கேட்ட ஒரு ஆண்மகனை இப்படியா நடாத்துவது என்ற கேள்வி இக் காட்சியைப் பார்த்தபோது எனக்கும் தோன்றியதுதான். ஆனால்




யோசித்துப் பார்த்தால், இந்த சமூகத்தில் எத்தனை மனைவியர் வன்முறைக்கு உட்படுத்தப்படுகின்றனர்.

எத்தனை பெண்களின் மேல் அசிட் ஊற்றப்படுகிறது.எத்தனை பெண்கள் ஆணவக்கொலை, சிசுக்கொலை என்று உயிர் பறிக்கப்படுகின்றனர். எத்தனை பெண்கள் பாலியல் வன்முறைகளுக்கு உட்படுத்தப்படுகின்றனர். ஒரு பெண்ணின் ஒரு உதை மட்டும் ஏன் எம்மை இத்தனை கோபப்படுத்துகிறது?

## கதைக்கு உள்ளும் வெளியும் எது கலை?

கலை என்பது என்ன? பெரும்பான்மை சமூகம் விரும்பவதெல்லாம் சிறந்த கலை யாகிவிடுமா?நாயக முன்னிலைப்படுத்தல்கள், சமூகத்தை ஒடுக்கும் பஞ்ச் வசனங்கள், யதார்த்தமற்ற திரைக்கதைகள் தான் சிறந்த திரைப்படங்களுக்கான அடையாளமா அல்லது அளவுகோலா? பெண் உடலை வியாபாரப் பெருளாக்கும் காட்சிகளை, இலட்சியப்படுத்தப்பட்ட உடல்களை, பெண் ஆளுமையைச் சிதைத்து, நலிந்த மலினமான பாலினமாக்கும் உத்திகளை, எல்லா ஆணிகளையும் நாயகனே (ஆண்) பிடுங்குவான் என்ற பார்வையை, இரட்டை அர்த்தத்தில் வக்கிரத்தைக் கொட்டும் பாடல்களை, வசனங்களை, நகைச்சுவைகளைச் சிறந்த கலையாக்கம் எனலாமா?




ஆனால் இவைதான் இன்றைய சமூகத்தில் நிலவும் 'பெருங்கலை வளர்ப்புப்' போக்காக இருக்கின்றது. தமிழக அரசும் தமிழ் ஊடகங்களும் தமிழ் அமைப்புகளும்




எதிர்காலச் சந்ததிக்காய் வளர்த்தெடுத்துக் கொண்டிருப்பது இந்த வக்கிரங்களைத் தான்.

இத்தகைய திரைப்படங்கள் எமது சமூகத்தை உயர்ந்த சிந்தனைக்குள் எடுத்துச் செல்லாமல், ஒருவித மயக்கத்திற்குள்ளும் மந்தநிலைக்குள்ளும் வைத்திருக்கும் காலத்தின் பெரும் போதை. குழந்தைகள், இளைஞர்கள் மற்றும் முதியவர்கள் வரை மலினமாகவும் வலிந்தும் கொடுக்கப்படும் போதை இதுதான். இப்படியான திரைப்படங்கள் தொழில்முறையையோ,பாடசாலைக் கற்கைமுறையையோ நேரடியாகப் பாதிப்பதில்லை. ஆனால் ஒரு மனிதனினுடைய,ஒரு சமூகத்தினுடைய ஆழந்த தேடலையும் பெறுமதிகளையும் விழுமியங்களையும் சிதைத்து விடுகின்றன. இதற்கு விதிவிலக்கான திரைப்படங்கள் உண்டு. ஆனால் அவை கவனம் பெறுவதே இல்லை.

## கண்ணகி கவனம் பெறவேண்டிய திரைப்படம்!

கண்ணகி என்ற பாத்திரத்தின் பின்னால் இருக்கும் சமூகத்தின் பொதுவான கருத்தைத் தொடக்கத்தில் இருந்தே உடைத்துப்போடுகிறது இந்தத் திரைப்படம். கண்ணகி என்ற தலைப்பு மிகப் பொருத்தமானதும் சரியானதுமான தேர்வுதான். கண்ணகியும் சிலப்பதிகாரம் கூறும் கூற்றுக்களும்!

# ரஜினிக்கு வில்லனாக சத்யராஜ்?



சூப்பர்ஸ்டார் ரஜினிகாந்த் நடிக்க இருக்கும் 'தலைவர் 171'இந்த படத்துக்கு அனிருத் இசையமைக்க, இந்த படம் 2013 ஆம் ஆண்டு வெளியான தி பர்ஜ் என்ற படத்தின் ஒரு சிறு பகுதியை தழுவித் தான் லோகேஷ் இந்த படத்துக்கான திரைக்கதையை உருவாக்கி வருவதாக சொல்லப்படுகிறது.

இந்த படத்தில் பல மொழிகளைச் சேர்ந்த நடிகர்கள் நடிக்கவுள்ளதாகவும் படத்தில் வில்லன் வேடத்தில் நடிக்க சத்யராஜிடம் பேச்சுவார்த்தை நடப்பதாக சொல்லப் படுகிறது.

சத்யராஜ் 80 களில் ரஜினியின் பல படங்களில் வில்லனாக நடித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.







அனைவருக்கும் எமது தொழிலாளர் தின வாழ்த்துகள் (May 1)



















அனைவருக்கும் எமது தொழிலாளர் தின வாழ்த்துகள் (May 1)